# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 266 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 02, வியாழக்கிழமை 18.08.2016


## 600 ஏக்கர் அடுத்த வாரம் விடுவிப்பு

### வலி.வடக்கு சென்று ஆராய்ந்தது அதிகாரிகள் குழு

யாழ்ப்பாணம், ஓக. 18
வலி. வடக்கில் அடுத்த வாரம் மேலும் 6 கிராம சேவையாளர் பிரிவு களைச் சேர்ந்த 600 ஏக்கர் வரையிலான நிலம் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது. விடுவிக்கப்படவுள்ள பகுதி களை யாழ். மாவட்டச் செயலர் தலைமை யிலான குழுவினர் நேற்று நேரில் சென்று ஆராய்ந்தனர்.
வலி.வடக்குக் காணி விடுவிப்புத் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை, பலாலி பாதுகாப்புப் >> 25ஆம் பக்கம்



உட்பூசல் வரத்தான் உண்மை வெளிக்குதுபோல இருக்குதே...

### பலவந்தமான காணாமற்போதல்களுக்கு

# மகிந்த அணியே காரணம்

### விசாரணை அலுவலகம் அமைவது மூலம் அனைத்தும் அம்பலமாகும் என்கிறது அரசு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 18
பலவந்தமான காணாமற்போதல் களுக்கு உத்தரவு வழங்கியவர் கள் மகிந்த அணியில்தான் இருக் கின்றனர். இதனால்தான் காணா மற்போனோர் அலுவலகம் அமைக்கப்படுவதற்கு எதிராக அவர்கள் பதறுகின்றனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களான ரவிராஜ், ஜோசப் பரராஜ சிங்கம் மற்றும் ரக்பி வீரர் தாஜு தீன் உள்ளிட்டோரைக் கொலை செய்தவர்கள் யார் என்பதும் காணாமற்போனோர் பணியக விசாரணை ஊடாக வெளிவரும். இவ்வாறு அமைச்சரும், அமைச் சரவை இணைப் பேச்சாளரு மான ராஜித சேனாரத்ன தெரி வித்தார்.
காணாமற்போனோர் அலு வலகம் பற்றிய சட்டவரைவைத் தவறான வழியில் நிறைவேற்றி யிருப்பதாக மகிந்த ஆதரவுப் பொது எதிரணியினர் முன் வைத்துள்ள >> 04ஆம் பக்கம்



## கொக்கிளாயில் விகாரை அமைப்பது சரியே

### அதை யாரும் கேட்கமுடியாது என்கிறார் அமைச்சர் ராஜித

யாழ்ப்பாணம், ஓக. 18
கொக்கிளாய் சிங்கள மக்கள் வாழ்ந்த இடம். அங்கு விகாரை அமைக்கலாம். அதனை யாரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது. ஆனால் வடக்கில் சந்திக்குச் சந்தி புத்தர் சிலை அமைக்கப்பட்டுள் ளது. அதனை வழிபடுவதற்கு யாருமில்லை. வடக்கு மக்களின் முகத்தில் >> 23ஆம் பக்கம்

## சம்பந்தன் நேரில் உறுதிமொழி

### போராட்டத்தைக் கைவிட்டனர் பரவிப்பாஞ்சான் பகுதி மக்கள்



கிளிநொச்சி, ஓக. 18
இராணுவத்தினரிடமிருந்து காணியை மீட்டெடுக்கும் நோக் குடன் பரவிப்பாஞ்சான் மக்களால் முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம், ஐந்தாவது நாளான நேற்றுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. >> 04ஆம் பக்கம்

## மணமக்கள் தெரிவு மூலம் யாழ்ப்பாணத்துடன் நட்புறவு

### வடமராட்சி கிழக்கில் கூறினார் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல



யாழ்ப்பாணம், ஓக. 18
கண்டிய அரசர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தே தமக்குரிய மணமக்களைத் தெரிவு செய்தி ருந்தார்கள். காலனித்துவ ஆட்சியாளர்கள் வந்தவுடன் அவ்வாறான தொடர்புகள் அற்றுப் போய்விட்டன. திரும்பவும் வடக்கு மற்றும் தெற்குக்கு இடையில் >> 23ஆம் பக்கம்

**இராணுவ வெற்றிச் சின்னங்களை அகற்றுங்கள்** >> பக். 02

## அரசை நம்பி அபிவிருத்தியில் பங்கேற்கிறோம்

### மக்களுக்காவே இவை என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஓக. 18
தற்போதைய அரசு, அரசியல் தீர்வு தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கின்றது. இதன் காரணமாகவும், எமது மக்களுக்குப் பல்வேறு தேவைகள் இருப்பதன் காரணமாகவும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் நாங்கள் பங்குபற்றி வருகின்றோம். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி – >> 24ஆம் பக்கம்

### "No Excuses for Goodness and Success" செயலமர்வின் மூலம் இலங்கையர்கள் மத்தியில் சாக்குப்போக்கு கூறாமல் செயலில் ஈடுபட ஊக்குவிப்பு

Not-for-profit எனும் அரச சார்பற்ற நிறுவனத்தினால், கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'no excuses for goodness and success' செயலமர்வின் மூலமாக இலங்கையர்கள் மத்தியில் சாக்குப்போக்குக்கூறலில் ஈடுபடாமல், நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஊக்குவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த செயலமர்வில், எவரெஸ்ட் மலை ஏறுவதில் பங்கேற்று உச்சியை அடைந்த முதலாவது இலங்கையர் எனும் பெருமையைப் பெற்ற ஜயந்தி குரு-உதும்பலா பங்கேற்றிருந்தார். தமது இலக்கு மற்றும் நாட்டுக்கு பெருமை சேர்ப்பதில் பெருமளவான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பது பற்றி அவர் குறிப்பிட்டிருந்தார்.
3 ஆம் பக்கம் பார்க்கவும்


நிலையான வைப்புகளுக்கு செலான் வங்கி தரும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்

12% 11.5% 11%

www.facebook.com/SeylanBank
www.seylan.lk

செலான் வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ வெற்றி சின்னங்களை அகற்றுங்கள்

## நல்லிணக்கச் செயலணி முன் கிளிநொச்சி இளைஞர் கருத்து

யாழ்ப்பாணம், ஓக. 18
இராணுவத்தினரின் வெற்றிச் சின்னங்கள் எம் கண் முன்னே அவமானச் சின்னங்களாகவே காட்சி தருகின்றன. அவற்றை அகற்றி மக்களின் மனதை ஆற்றுப்படுத்துங்கள்.
இவ்வாறு நல்லிணக்கச் செயலணியின் கிளிநொச்சி வலய அமர்வில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எமது பகுதிகளில் உள்ள இராணுவத்தினரின் வெற்றிச் சின்னங்கள் எம் கண் முன்னே அவமானச் சின்னங்களாகவே காட்சி தருகின்றன. அவற்றை அகற்றி மக்களின் மனதை ஆற்றுப்படுத்துங்கள்.
நல்லிணக்கத்தைக் கோரிப் பெறவோ அல்லது திணிக்கவோ முடியாது. உருவாக்க வேண்டும். அதற்கு ஆளும் வர்க்கத்தின் மனங்களில் மாறுதல் ஏற்படவேண்டும். ஒரு தரப்பின் நினைவுச் சின்னங்களை அழித்து அவ்வாறு அழிக்கப்பட்டவர்களின் சமூகம் வாழும் பிரதேசத்துக்குள் இழப்புக்களை உருவாக்கியவர்களின் நினைவுச் சின்னங்கள் மாத்திரம் இருக்கும் நிலையில் நல்லிணக்கத்தை எங்கு தேட முடியும்.
இங்குள்ள மக்களின் மனங்களில் நல்லிணக்கத்தைத் திணிக்க முடியாது. உருவாக்க முயலலாம். உருவாக்கம் என்பது உத்தரவுகள் அல்ல. இயல்புநிலையுடன் கூடிய மனதார ஏற்கும் செயலைப் பாதிக்கப்பட்ட தரப்பின் ஆலோசனையைப் பெற்று உருவாக்கவேண்டும்.
வீதியில் இறங்கித் தொழிலுக்குச் சென்றாலும், பாடசாலைக்குச் சென்றாலும்,' எந்த இடத்துக்குச் சென்றாலும் கண் முன்னே இராணுவ முகாமும் இராணுவச் சின்னங்களும் காட்சி தரும்போது நெஞ்சில் பட்ட வடுக்களை மறக்க முடியவில்லை.
எனவே முடிந்தால் முதலில் இவற்றுக்கு வழி ஏற்படுத்துங்கள் நல்லிணக்கம் தோன்ற சந்தர்ப்பம் ஏற்படும் – என்றார்.
(த-5-101)

# மலையக மக்களாகிய எமக்கும் உரிமைகள்

## நல்லிணக்கச் செயலணியிடம் நேற்று வவுனியாவில் கோரிக்கை



1958 ஆம் ஆண்டு இனக் கலவரத்தினால் இடம்பெயர்ந்து வவுனியாவிலும் ஏனைய மாவட்டங்களிலும் குடியமர்ந்துள்ள மலையக மக்கள், ஏனைய மக்களைப் போன்று பொருளாதாரத்தையும், கலாசாரத்தையும், அரசியல் பிரதிநிதித்துவத்தையும் பேணிப் பாதுகாத்து வாழும் வகையிலான உரிமைகள் வழங்கப்படவேண்டும். உருவாக்கப்படுகின்ற நல்லிணக்கப் பொறிமுறையில் பிரதேச வாதங்களைக் கடந்து இனங்களுக்குள்ளேயேயும் நல்லிணக்கம் ஏற்படுத்தும் வகையில் பொறி முறை ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு வவுனியா வாழ் மலையக மக்கள் நல்லிணக்கச் செயலணியிடம் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.
நல்லிணக்கச் செயலணியின் வவுனியா வலய அமர்வு வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கருத்தமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அந்த மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
"முப்பது வருடகாலப் போர் அனுபவத்தின் பின்னர் இன்று நல்லிணக்கத்தின் அவசியம் பற்றிப் பேசப்படுகின்றது. இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உருவாகாவிடின் நாட்டில் சமாதானம் ஒருபோதும் நிலைக்காது. சமாதானம் நிலைக்க வேண்டுமாயின் அனைத்து இனங்களும் சமஉரிமையுடனும், சம வாய்ப்புடன் வாழவேண்டும்.
வடக்கு மாகாணத்தில் வாழ்ந்துவரும் மலையகத் தமிழர்களாகிய நாம், ஏனைய சமூகங்களுடன் ஒன்றிணைந்து சம உரிமையை அனுபவிக்கும் ஒரு சமூகமாக வாழவே விரும்புகின்றோம். நல்லிணக்கத்துக்கான முயற்சிகளின்போது, நாம் முகம் கொடுத்துவரும் ஒதுக்குதலை நீக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
பூர்விகமக்களுடன் ஒப்பிடுகையில் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்தி நடவடிக்கையின்போது நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். நல்லிணக்க முயற்சியின்போது எமது சமூகம் சமவுரிமைப் பெற்றுச் சுபீட்சமாக வாழ வழி வகை செய்ய வேண்டும்.
இனக் கலவரத் தினால் இடம் பெயர்ந்து வந்த நாம், போரின்போது உயிரிழப்புகளையும், சொத்தழிவுகளையும், இடப் பெயர்வையும் சந்தித்தோம். இழப்புக்களைச் சந்தித்த நாம் அரசியல் பிரதிநிதித்துவம், காணி வழங்கல், கல்வி, உட்கட்டுமானம், தொழில் வாய்ப்பு போன்ற பல்வேறு வழிகளிலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம். வவுனியா மாவட்டத்தில் வாழும் மலையக மக்களாகிய நாம், ஏனைய மக்களைப் போன்று பொருளாதாரத்தையும், கலாசாரத்தையும், அரசியல் பிரதிநிதித்துவத்தையும் பேணிப் பாதுகாத்து வாழும் வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.அரசு நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் மேற்கொள்ளும் அனைத்துத் திட்டங்களின்போதும் எமக்குரிய உரிமைகளைப் பெறும் வகையில் நல்லிணக்கப் பொறிமுறை வேண்டும்–என்றனர்.(த-5-21)



யாழ். தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை ஓட்டோவும் லொறியும் மோதி விபத்துக்குள்ளாகின. ஓட்டோச் சாரதி படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். விபத்து இடம்பெற்று சுமார் அரை மணிநேரமாக அந்த இடத்துக்குப் பொலிஸார் வரவில்லை என்று அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர்.
(த-4-ம)

# போதையில் வாகனம் ஓட்டியவர் சிறையில்

## 7ஆயிரத்து 500 ரூபாஅபராதம் லைசன்ஸ் ஒரு வருடம் தடை

யாழ்ப்பாணம், ஓக. 18
போதையில் வாகனம் செலுத்தியவருக்கு 7ஆயிரத்து 500 ரூபா அபராதமும், ஒரு மாதச் சிறைத் தண்டனையும் விதித்த யாழ். நீதிமன்றம், சாரதி அனுமதிப் பத்திரத்தை பறிமுதல் செய்து ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டது.
யாழ்.நீதிமன்றில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.
போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் கீழ் யாழ். குருநகரைச் சேர்ந்த ஒருவர் மீது யாழ்.பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றில் தன் மீதான குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டார். இதனையடுத்து இவ்வாறு தண்டனை விதிக்கப் பட்டது.
அவருக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்த நீதிவான், 7ஆயிரத்து 500 ரூபா அபராதத்தையும் அறவிட்டதுடன், சாரதி அனுமதிப்பத்திரத்தையும் ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.
(த-4-101-107)

# கிளிநொச்சிக்கு பணிப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 18
கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைப் பணிப்பாளராக மருத்துவர் மைதிலியும், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராக மருத்துவர் கார்த்திகேயனும் நியமிக்கப்பட்டனர் என மாகாண சுகாதாரத் திணைக் களத்தினர் தெரிவித்தனர்.
மருத்துவர் கார்த்திகேயன் நேற்றைய தினம் தனது கடமையைப் பொறுப்பேற்றார். மருத்துவர் மைதிலிக்கு இன்று தொடக்கம் செயற்படும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இன்று அவர் கடமையைப் பொறுப்பேற்பார்.
கடந்த காலங்களில் மாவட்டத்தின் முக்கிய இரு பொறுப்புக்களையும் ஒருவரே நிர்வகித்தமையினால் அதிக வேலைப்பளு எனப் பலதடவைகள் சுட்டிக்காட்டப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(த-4-101)

# படைக்கு காணி வழங்கும் சட்டத்தை திருத்த அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 18
படையினருக்கு காணி வழங்கும் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அரச காணிகளை வழங்கும் சட்டத்தைத் திருத்தியமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கே இந்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது.
நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காகத் தமது உயிரையே பணயம் வைத்துப் போர் தொடுத்த இராணுவத்தினரின் குடியேற்றத்துக்கு அரசினால் செயற்படுத்தப்பட்டு வரும் காணி வழங்கும் முறையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அவர்களுக்கு மேலும் நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அரச காணிகளை வழங்கும் சட்டத்தைத் திருத்தியமைக்கும் யோசனை முன்வைக்கப்படுகின்றது என்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரமே அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோவுடன் கடத்தப்பட்டவர் பொலிஸால் மீட்பு; ஒருவர் கைது

உடுவில் மானிப்பாயில் நேற்று ஓட்டோ சாரதி ஒருவர் கடத்தப்பட்டு சிறிது நேரத்திற்குள் மீட்கப்பட்டதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.
உடுவில் மானிப்பாய் பகுதியில் இருந்து சுன்னாகம் நோக்கி ஓட்டோ பயணிகளுடன் பயணித்தது. அவர்களைத் திடீரென மறித்த கும்பல் ஒன்று ஓட்டோவில் பயணித்தவர்களை நடுவீதியில் இறக்கிவிட்டுச் சாரதியை கடத்திச் சென்றதாக முறையிடப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் பயணித்தவர்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதன் காரணத்தினால் பொலிஸார் மருதனார்மடம் பகுதியில் ஓட்டோவை மடக்கிச் சாரதியை மீட்டனர். கடத்தல் குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். சாரதி காதல் விவகாரத்திற்கு உதவி புரிந்தார் என்பதன் பெயரிலேயே மேற்படி கடத்தல் இடம்பெற்றதாக தெரிவிக்கப் படுகின்ற போதும் அது தொடர்பில் விசாரணைகளின் பின்னரே உறுதிப்படுத்த முடியும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,10)

## வீதியைக் கடந்த முதியவர் விபத்தில் சாவு

நீர்வேலியில் வீதியை நடந்து கடந்தவர், பிராடோ வாகனம் மோதியதால் படுகாயமடைந்த சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நீர்வேலி சிறுப்பிட்டியை அண்மித்த பகுதியில் நேற்றிரவு விபத்து இடம்பெற்றது. நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கந்தையா வேலாயுதபிள்ளை (வயது - 78) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். வாகனம் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டதோடு சாரதி கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (4)


**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள KIA-RIO கார் விற்பனைக்கு.

தொடர்பு.0779384243,0777740958

**வீட்டுடன் காணிவிற்பனைக்கு**

யாழ்ப்பாணம் K.K.S வீதி நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில் அரசடி சந்தியில் 2 1/2 பரப்பு காணி வீடு கடையுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு. வர்த்தக நிலையங்கள் அமைக்க உகந்தது.தரகர் தேவையில்லை.

தொடர்பு.0769369637

**வாடகைக்கு**
**தனியார் /களஞ்சிய சாலைக்கு**

A9 வீதிக்கும் கேர தீவு வீதிக்கும் இடையில் கைதடிப் பிள்ளையார் கோயிலிலிருந்து 1km தூரத்தில் அமைந்துள்ள சுற்று மதிலுடன் கூடிய நன்கு விசாலமான வீடு வாடகைக்கு உண்டு தனியார் / களஞ்சியசாலைக்கு உகந்தது.

தொடர்பு.0777493841

**நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்**
**கண்டாவளை மணல் வழங்குவதற்கான கூறு விலை கோரல்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் திருப்பணி வேலைகளுக்காக மணல் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம், வழித்தட அனுமதிப் பத்திரம் உள்ள மணல் விநியோகஸ்தர்களிடம் இருந்து குறிகட்டுவான் இறங்குதுறை வரை கொண்டு வந்து தருவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பத்துடன் அனுமதிப் பத்திரங்கள் இணைத்து "செயலாளர் ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு" எனும் முகவரிக்கு **25.08.2016 அன்று மாலை 5.00 மணிக்கு** முன்னதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைப்பதுடன் விண்ணப்பக்கவரின் (என்வலப்) இடது பக்க மூலையில் "கண்டாவளை மணல் கூறுவிலை விநியோகம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**அன்னையின் சேவையில்,**
**பொ.அன்பரசன்,**
**செயலாளர், அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு.**

**அரைக்கும் ஆலை இயந்திரங்கள் விற்பனைக்கு**

பரந்தன் -முல்லைத்தீவு பிரதான வீதியில் பரந்தனுக்கு அண்மித்த பகுதியில் இயங்கும் அரைக்கும் ஆலையொன்றின் இயந்திரங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு.0770879026

Galaxy Star
வெற்றி வாரம் 084 திகதி 17.08.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 05 06 07 50
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 35,33,420/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2792 திகதி 17.08.2016
02 23 29 61 N 04
ரூ.1,26,18,725/-
2016.08.20 ஆம் திகதி சனிக்கிழமை

**வேலை ஆள்கள் தேவை**
**(நெல்லியடிக் கிளைக்கு)**

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வேலை ஆள்கள் தேவை.
01. விற்பனைப் பிரதிநிதிகள் (மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் கட்டாயம்)
02. கூலி ஆள்கள்
நேரில் வரவும்.

K.K.S Road, Chunnakam, Jaffna
(சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக)

**STUDY IN CANADA**

A/L பரீட்சையின் பின் CANADA நாட்டில் உயர் கல்வியினைத் தொடர வாய்ப்பு!
* Bio Medical Science
* Computer Science
* Law
* Nursing
* Management Courses

➡ அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் மூலமான ஆங்கில வகுப்புக்கள்
➡ மிகக் குறைந்த கட்டணங்கள்
➡ வங்கி நிலுவை ஏற்பாடுகள்
➡ நிராகரிக்கப்பட்ட விசா சம்பந்தமான ஆலோசனைகள்

Aug 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளவும் (ஆலோசனைக் கட்டணம் உண்டு).

Note: Must be come with Guardians

WINSTAR VISA CONSULTANTS
106, தபாற்பெட்டிச் சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி.
070 2363676


## "No Excuses for Goodness and Success"

*01 ஆம் பக்கத்திலிருந்து...*

இந்த செயலமர்வின் போது, இலங்கை சந்தை ஆராய்ச்சி செயலகத்தினால் (LMRB) முன்னெடுக்கப்பட்டிருந்த நாடு தழுவிய ஆய்வின் பெறுபேறுகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இலங்கையர்களாகிய நாம், எமது நாளாந்த வாழ்வில் இலக்குகளை எய்தாமைக்கு சராசரியாக நான்கு சாக்குப்போக்குகளை கூறுவதாக கண்டறியப்பட்டுள்ளது. முதலாவது காரணமாக, "நேரமில்லை" என்பது சுமார் 80 சதவீதமான பதிலளிப்பவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து "தோற்றுவிடுவோம் என்ற பயம்" அல்லது "எய்துவதற்கான இயலுமை காணப்படுகிறதா என்பதில் சந்தேகம்" என 45 சதவீதமானவர்களும், "முயற்சி செய்வதில் பயனில்லை" என 38 சதவீதமானவர்களும், "எவ்வாறு செய்வது என்பது எனக்குத் தெரியாது" என 26 சதவீதமானவர்களும் தெரிவித்திருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Foundation of Goodness இன் ஸ்தாபகர் குஷில் குணசேகர கருத்துத் தெரிவிக்கையில், நாடு எனும் வகையில் முன்நோக்கிச் செல்வதற்கு, இந்த இலக்குகளை எய்த அனைத்து இலங்கையர்களும் 'ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியுள்ளது என்பது இந்த ஆய்வுப் பெறுபேறுகள் மூலமாக கண்டறியப்பட்டுள்ளது.

"தோற்றுவிடுவோம் என்ற பயம்" என்பதை பிரதான சாக்குப்போக்காக தெரிவிப்பவர்கள் தொடர்பில் ஜயந்தி குரு-உதும்பலா தெரிவிக்கையில், "தமது எதிர்பார்ப்பு இலக்குகளை நோக்கிப் பயணிக்கும் போது, அவர்களை இந்த சாக்குப்போக்கு தடையாக அமைந்துவிடக்கூடாது. வேண்டாம் என்பதை நிறுத்துவதற்கான காலம் இதுவாகும். சாக்குப்போக்கு தெரிவிக்காமல், இயற்கையாகவே தம்முள் காணப்படும் திறனை ஊக்குவித்துக் கொள்ள வேண்டும். மாற்றம் படிப்படியாகவே ஏற்படும். எமக்காக நேரத்தை ஒதுக்கி, எம்முன் காணப்படும் பயம் மற்றும் தடைகளை ஓரங்கட்டினால், எமது கனவுகளை நனவாக்கிக்கொள்ளும் பயணத்தில் நாம் காணப்படுவோம். இதுபோன்ற செயலமர்வுகள் மக்கள் மத்தியில் திறமையை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருக்கும் என்பதுடன், சாக்குப்போக்குகள் தெரிவிப்பதை மாற்றி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முக்கிய பங்கை வகிக்கும்" என்றார்.

"எம் முன்னால் தடைகள் காணப்படுகின்றன. எவரெஸ்ட் மலையை ஏறும் முன்னர் பெருமளவான தடைகளை நான் கடக்க வேண்டியிருந்தது. இது எனது வாழ்நாள் கனவாகும். இந்த தடைகளை தகர்த்து முன்நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. அதன் மூலமாகவே உயர்ந்த நிலையை எய்த முடிந்தது" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

Foundation of Goodness என்பது பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் மத்தியில் செயலாற்றி வருவதுடன், தமது தடைகளை கடந்து வர மக்களுக்கு உதவிகளை வழங்குகிறது.

குணசேகர தெரிவிக்கையில், "எமது அனுபவத்தின் மூலமாக, மக்கள் அதிகளவு கவலையுறும் சாக்குப்போக்குகள் அவர்களில் காணப்படும் இயலுமைகளை முழுமையாக அனுபவிக்க முடியாமல் செய்கிறது. அவர்கள் இதை உணர்ந்தவுடன் மாற்றம் உடனே நடைபெறுகிறது. இது சுய பெறுமதியை வழங்கும் செயன்முறையாக மாற்றமடைகிறது" என்றார்.

"இந்த ஆய்வு பெறுபேறுகளை குறிப்பிட்டு, இந்த செயலமர்வை முன்னெடுப்பது என்பது அனைத்து இலங்கையர்களுக்கும் தமது இலக்குகளை எய்துவதற்கு காணப்படும் தடைகளை அறிந்து கொள்ள உதவியாக அமைவதுடன், அந்தசாக்குப்போக்குகளை அவர்கள் கடந்து வருவதற்கு உதவியாக அநைந்திருக்கும் எனக்கருதுகிறோம். மக்களால் இதை செய்ய முடியும் என்பதை நாம் அறிவோம். ஆனாலும், நாம் இந்த சாக்குப்போக்குகளை செயற்பாடுகளாக மாற்றுவது பற்றி கவனம் செலுத்த வேண்டும்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்



## சம்பந்தன்...

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் உறுதிமொழியை அடுத்து போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

'எங்களுடைய பிரச்சினைகளை விளங்கிக்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பரவிப்பாஞ்சானுக்கு நேரில் வந்தமை, இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள எங்களுடைய காணிகளுக்குள் நாங்கள் மீள் குடியேறுவோம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது' என்று போராட்டத்தில் கலந்து கொண்ட திருமதி சயம்புநாதன் வதனி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை காலை, பரவிப்பாஞ்சான் பகுதிக்குச் சென்ற மக்கள் தமது காணி களில் உள்ள இராணுவத்தை உடனடியாக வெளியேறுமாறும், மீள்குடியேற்றத்தை உறுதிப்படுத்துமாறும் கோரி போராட்டத்தில் குதித்தனர்.

இராணுவ முகாம் முன்பாகச் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட மக்களின் தொடர் போராட்டம் இரவு பகலாக இடம்பெற்றது. போராட்டத்தை மேற்கொள்ளும் மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக இராணுவத்தினர் இரவுவேளை அங்குள்ள மின் விளக்குகளை நிறுத்தினர்.

போராட்டத்தில் குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை பங்கு கொண்டதால் தமக்கான உணவை இராணுவ முகாம் முன்பாகச் சமைத்து உண்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்களின் காணிகளில் 4 ஏக்கர் காணியை விடுவிப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு முன்வந்துள்ளதாகவும், அந்தக் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் எனவும் மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமை நாயகம் முன்னர் தெரிவித்திருந்தார். மாவட்டச் செயலாளரின் உறுதிமொழியின் பிரகாரம் இன்றுவரை தமது காணிகள் விடுவிக்கப்படவில்லை என்று தெரிவித்தே மக்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

எமது காணிகளை அபகரித்துள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறுவதாகப் பல தடவைகள் எமக்குத் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் இங்கிருந்து வெளியேறவில்லை, பலரும் பல உறுதிமொழிகளைக் கூறி எம்மை ஏமாற்றத் திட்டம் போடுகின்றார்கள். உறுதிமொழிகளை நம்பி ஏமாறுவதற்கு நாம் தயாராக இல்லை. செயல் வடிவில் எமது கண்களூடாகக் காணும் போதே நம்புவோம். பாதுகாப்பு அமைச்சின் செயலர் அல்லது மீள்குடியேற்ற அமைச்சர் பரவிப்பாஞ்சானுக்கு வருகை தந்து, எமது கண் முன்னே இராணுவத்தை வெளியேற்ற வேண்டும். அப்போது தான் போராட்டத்தைக் கைவிடுவோம். இல்லையென்றால் எத்தனை நாள்களானாலும் இராணுவ முகாம் முன்பாகவே தங்கியிருப்போம் என்று அந்த மக்கள் உறுதிபடத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்று மதியம் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் நேரில் சென்று அந்த மக்களைச் சந்தித்தனர்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அங்கிருந்தவாறு கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி ஆகியோரிடம் அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார்.

'பரவிப்பாஞ்சான் மக்கள் இரண்டு வாரங்களில் அவர்களுடைய காணிகளில் மீள்குடியேற்றப்படுவார்கள். சம்மந்தப்பட்ட தரப்பினருடன் பேசியுள்ளேன்' என்று அந்த மக்களிடம் அவர் உறுதியளித்தார். எதிர்க்கட்சித் தலைவரின் உறுதிமொழிக்கு அமைய அந்த மக்கள் நேற்று மாலை போராட்டத்தைக் கைவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5-21)

## மகிந்த....

குற்றச்சாட்டுக் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சட்ட வரைவைத் தவறாக நிறைவேற்றவில்லை. ஆசனத்தில் அமர்ந்திருக்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடுவில் வந்து இருந்தனர். நாடாளுமன்றத்துக்கு வந்தால், அங்கு எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்காக நாடாளுமன்ற நடைமுறை உள்ளது. சட்ட வரைவு கொண்டுவரப்பட்டால் அது தொடர்பில் விமர்சிக்க, எதிர்ப்புத் தெரிவிக்க, எதிராக வாக்களிக்க முடியும். அதைவிடுத்து லிப்டன் சுற்று வட்டத்தில் செய்வதை நாடாளுமன்றத்தில் செய்ய முடியுமா? காணாமற்போனோர் பணியகம் பற்றிய சட்டத்தில் எவரையும் தண்டிப்பதாகக் குறிப்பிடப்படவில்லை. காணாமற்போனமை குறித்து தேடிப் பார்ப்பதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன செய்வது என்பது குறித்து பின்னர்தானே நாம் முடிவெடுப்போம். - என்றார்.

அந்த சட்டத்தை நீக்க நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பொது எதிரணியினர் குறிப்பிடுகின்றனரே என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், அவர்கள் (மகிந்த ஆதரவு அணியினர்) மிகவும் தடுமாறுகின்றனர். ஏனெனில், காணாமற்போகச் செய்தவர்கள் அங்குதானே இருக்கின்றனர். அதற்கு உத்தரவு வழங்கியவர்கள். அதுதான் பிரச்சினை. அந்த விடயம் வெளியே வரும்.

எக்னெலிகொட, ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், தாஜுதீன் ஆகியோரைக் காணாமற்போகச் செய்தவர்கள் யார்? உபாலி தென்னகோனைக் கொன்றவர் யார்? உள்ளிட்ட பல தகவல்கள் இதனூடாக வெளிவரும். - என்றார். (த-5)

அரசவேலைவாய்ப்பை எதிர்நோக்கியிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் தடைதாண்டல், பதவி உயர்வு பரீட்சைகளுக்குத் தோற்ற இருக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஒரு நற்செய்தி

OLIARAZI ஒளிஅரசி வழங்கும்

போட்டிப் பரீட்சைக் கையேடு




பொது அறிவு, பொது விவேக வினாத் தொகுப்பு
(A/L, SLEAS, SLAS, இதர புதிய வேலைவாய்ப்புப் பரீட்சைக்கானது.)




அரச வெற்றிடங்களும் போட்டிப் பரீட்சைகளும்
கடந்த மாத அரச வர்த்தமானிப் பத்திரிகைத் தொகுப்பு

பரிசுக்கான போட்டிகள்

| | | |
|---|---|---|
| கவிதைப் போட்டி | - | 02 |
| குறுக்கெழுத்துப் போட்டி | - | 11 |
| பாலர் வர்ணம் தீட்டுதல் போட்டி | - | 12 |

ஓகஸ்ட்-2016 இதழுடன் இலவச இணைப்பு

ஒவ்வொருமாத ஒளி அரசியுடனும் 12 பக்க கையேடாக இலவசமாகக் கிடைக்கின்றது. தேவைப்படுவோர் உதயன்/சுடர் ஒளி முகவர்களிடம் இன்றே ஒரு ஒளி அரசியை முற்பதிவு செய்து கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 071 862 8369, 077 656 9617

இவரைக் காணவில்லை



புளியம்பொக்கணை சந்தி, நாகேந்திரபுரத்தைச் சேர்ந்த கனகலிங்கம் இளங்கீரன் (இளங்கோ) என்பவர் கடந்த (02.08.2016) அன்று தொடக்கம் காணாமல் போயுள்ளார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 694 7023 / 076 941 9285
077 959 1262

பதவி வெற்றிடம்

கொழும்பு 13-இல் இயங்கிவரும் எமது சற்லைட் கேபிள் டி வி உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் உண்டு. தொடர்பு கொள்ளவும்.

1) களஞ்சிய காப்பாளர்
2) கணக்குப்பிள்ளை
3) டிஸ் அன்ரனா பொருத்துநர்கள்
4) எலற்ரோனிக் றிப்பேர் செய்யக்கூடிய Teachnicians
5) எலக்ரோனிக் பொருள்கள் விற்பனை செய்யக் கூடிய விற்பனையாளர்கள்
6) வான் சாரதி, ஆட்டோ சாரதி

திறமைக்கு ஏற்ப சம்பளம் ரூபாய் 20,000/- இல் இருந்து 50,000/- வரை கிடைக்கும். தேவையாயின் உணவு, தங்குமிடம் கிடைக்கும். வயது வரம்பு கிடையாது. முன் அனுபவம், மொழியறிவு, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன மேலதிக திறமையாகக் கணிக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

SATS-TECH ENGINEERS (pvt) LTD
51/102, WOLFENDHAL STREET, COLOMBO-13
CONTACT-077 7710785

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா மீதான முறைப்பாடுகளின் விசாரணைகள் முடியும் தறுவாயில்

## விளைவை விரைவில் எதிர்கொள்வார் என்கிறார் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா

கொழும்பு, ஓக. 18
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிரான இரண்டு முறைப் பாடுகள் குறித்த விசாரணைகள் 90 வீதம் முடிந்துவிட்டன. அதன் விளைவுகளை அவர் விரைவில் எதிர்கொள்வார்.
இவ்வாறு அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
அவர் தெரிவித்துள்ளதாவது-
கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகள் கிடைத்தன. முறைகேடான வகையில் விமானப் படைக்கு, 7 மில்லியன் டொலர் செலவில், மிக் போர் விமானங்களைக் கொள்வனவு செய்தது முதலாவது முறைப்பாடு.
டி.ஏ.ராஜபக்ச நினைவிடத்தை புனரமைப்பதற்கு 90 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியது இரண்டாவது முறைப்பாடு.
இந்த இரண்டு முறைப்பாடுகள் தொடர்பாகவும், நடத்தப்படும் விசாரணைகள் 90 வீதம் பூர்த்தியாகியுள்ளன. இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு அவர் விரைவில் பதிலளிக்க வேண்டும்.
எழுத்து மூலமான ஆதாரங்கள் ஆவணங்களின் அடிப்படையில் தான் நாமல் ராஜபக்ச விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் குறித்தும் ஊழல்கள் குறித்தும், விசாரிப்போம் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம்.
அதனைத்தான் நாம் செய்கிறோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது குடும்பத்துக்கு வெள்ளையடிக்க முனைகிறார். அதற்குக் காலம் தாமதமாகிவிட்டது.
சட்டத்தை மீறாத படையினர் எவரும் காணாமற்போனோர் பணியகத்தால் இலக்கு வைக்கப்படமாட்டார்கள். இந்தப் பணியகம் வெளிநாட்டுச் சக்தியின் அழுத்தங்களுக்காக அமைக்கப்பட்டதல்ல.
இலங்கையில் எல்லாமே வெளிப்படையாகவும், சட்டரீதியாகவும் நடைபெறுகிறது என்று அனைத்துலக சமூகத்துக்குக் காட்டவே காணாமற்போனோர் பணியகம் அமைக்கப்பட்டது.
இதனை நாம், அனைத்துலக சட்டங்கள், மனித உரிமைச் சட்டங்களுக்கு மதிப்பளிப்பதாகவே பார்க்கிறோம் - என்றார். (ந-5)



மாணவர் கல்வி வலுவூட்டலின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 42 மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் 2016ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் இவை வழங்கப்பட்டன. துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ளீர்க்கப்பட்டுள்ள 22 மாணவர்களுக்கும் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 8ஆம் திகதி ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்திலும் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் இருந்து உள்ளீர்க்கப்பட்ட 20 மாணவர்களுக்கு சைக்கிள்கள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 11ஆம் திகதி வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் மக் கள் தொடர்பகத்திலும் நடைபெற்றன. (ந-21)

# தனித்துத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுங்கள் பார்க்கலாம்

## விமல், கம்மன்பிலவுக்கு மகிந்த அமரவீர சவால்

கொழும்பு, ஓக. 18
நடைபெறவுள்ள தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியுமா என்று தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ச மற்றும் பிவிதுரு ஹெல உறுமயவின் உதய கம்மன்பில ஆகியோருக்கு சவால் விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீர.
அவர் தெரிவித்துள்ளதாவது-
விமல் வீரவன்சவும், உதய கம்மன்பிலவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உதவியுடன்தான் தப்பிப் பிழைத்தவர்கள். அவர்களுக்கென்று தனியானவாக்கு வங்கி கிடையாது. தமது அரசியல் நலனுக்காக, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பின்னால் ஒட்டிக் கொண்டவர்கள் அவர்கள்.
ஐ.நா. பணியகம் முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தி அனைத்துலக சமூகத்துக்கு கோபத்தை ஏற்படுத்தினார் விமல் வீரவன்ச. அதன் காரணமாகவே மகிந்த ராஜபக்ச அரசு தோற்கடிக்கப்படுவதற்கான வழி திறக்கப்பட்டது.
ராஜபக்ச அரசை 162 நாடுகளின் எதிரியாக இவர்களே மாற்றினர். அவர்கள் பற்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் நன்றாக அறிவார்கள் - என்றார். (ந-5)

# ஆதனவரி மதிப்பீட்டுக்கு ஒத்துழைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.18
ஆதனவரி மதிப்பீடு செய்யும் உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் தெரிவித்தார்.
பருத்தித்துறை நகரசபைக் குட்பட்ட இடங்களில் ஆதனவரி மதிப்பீடுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு பொது மக்கள் சரியான-நேர்மையான தகவல்களை வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.
சுமார் 15 வருடங்களின் பின்னர் ஆதனவரி மதிப்பீடு நடைபெறுகின்றது. விலை மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் வீடு களுக்குச் சென்று மதிப்பீடு செய்யவுள்ளனர். இதற்கு அனைத்துப் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-422)

# மாணவியுடன் துர்நடத்தை

## அயல் வீட்டு இளைஞன் கைதானார்

கொழும்பு, ஓக. 18
வீட்டில் எவரும் இல்லாத நேரத்தில் 14 வயதான பாடசாலை மாணவியைப் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று கூறப்படும் 17 வயதான இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.
மாணவியின் மூத்த சகோதரியால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இளைஞனைப் பொலிஸார் கைது செய்தனர்.
முறைப்பாடு செய்த 21 வயதான மூத்த சகோதரியுடன் 14 வயதான பாடசாலை மாணவி வசித்துள்ளார். கடந்த 11 ஆம் திகதி தனது தங்கையை அருகில் உள்ள வீட்டில் இருக்கும் பெண்ணின் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு, கொழும்பு சென்றுள்ளார். மாலை வீடு திரும்பியபோது, இரண்டு பாதணிகள், செல்போன் மற்றும் பணப்பை என்பன வீட்டுக்குள் கிடந்துள்ளன.
செல்போன் மற்றும் பணப்பை என்பன அருகில் உள்ள வீடொன்றில் வசிக்கும் இளைஞனுடையது என்பதை சகோதரி அறிந்து கொண்டுள்ளார்.
அந்த இளைஞனுக்கும் தனது தங்கைக்கும் இடையில் அண்மைய காலமாகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளமையை தான் அறிந்திருந்தாகவும் மாணவியின் சகோதரி பொலிஸாரிடம் கூறியுள்ளார்.
பெரியம்மாவின் வீட்டுக்குச் சென்றிருந்த நேரத்தில் காதலன் தன்னை துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று தனது தங்கை கூறினார் என்றும் யுவதி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ந-5)

# வடக்குக்கும் தெற்குக்கும் வெவ்வேறான சட்டங்கள் நடைமுறையில் இல்லை

## அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 18
தெற்கில் சிங்கள இளைஞர், யுவதிகள் கடத்திச் செல்லப்படும்போது அதனை அரச பயங்கரவாதம் என்றும் வடக்கு, கிழக்கில் இளைஞர், யுவதிகள் கடத்திச் செல்லப்படும்போது அது அரச நிர்வாகம் எனவும் இரண்டு அர்த்தங்களில் பார்க்க முடியாது.
இவ்வாறு தேசிய கலந்துரையாடல்கள், சகவாழ்வு அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.
சகவாழ்வு, சங்கத்தினை உருவாக்குதல் மற்றும் புதிய சட்டவாக்கம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது-
நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க இடமளிக்க முடியாது. காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் அமைப்பது தொடர்பில் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. காணாமற்போதல் எனப்படுவது, வெள்ளை வான்களில் கடத்திச் செல்லப்படுவதே.
வேறு ஒன்றுமல்ல. வான் ஒன்றில் பொலிஸ் உடையில் வருவோரால் ஒருவர் அழைத்துச் செல்லப்படுவாராயின், அழைத்துச் செல்லப்படுபவரது உறவினர்கள் அது தொடர்பிலான தகவல்களைத் தெரிந்து கொள்வார்களாயின் காணாமற்போனவர்கள் என்ற விடயத்துக்கான தேவை இருக்காது.
நாட்டின் நீதியை சமாதானத்தை நாம் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொருவரும் விரும்பும் வகையில் செயற்பட முடியாது. ஒரு காலத்தில் அது நடந்தது. அது தற்போது சாத்தியமில்லை. இது இந்தக் காலப் பகுதிக்கு உரியது மாத்திரமல்ல.
88, 89 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிங்கள இளைஞர்கள் பலர் காணாமற் போயுள்ளனர். 60 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமற் போயுள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். ஜெனிவா சென்று முறைப்பாடு செய்தார்.
இந்த நாட்டில் வடக்குக்கும் தெற்குக்கும் வெவ்வேறான சட்டங்கள் இல்லை. இன அடிப்படையில் சட்டங்கள் தேவையில்லை. அவ்வாறு யரேனும் கூறினால் அதுவே பிரிவினைவாதம். தெற்கில் சிங்கள இளைஞர்கள், யுவதிகள் கடத்திச் செல்லப்படும்போது அது அரச பயங்கரவாதம். வடக்கு-கிழக்கில் இளைஞர், யுவதிகள் கடத்திச் செல்லப்படும்போது அது அரச நிர்வாகம். எப்படி அவ்வாறு கூற முடியும். இரண்டுமே ஒன்றுதான்.
பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் எதிரான களங்கத்தைத் துடைத்தெறிய வேண்டும். நற்பெயரைக் காப்பாற்ற வேண்டும். தவறிழைத்தவர்கள் எங்கும் இருக்கிறார்கள். நாடாளுமன்றில், அமைச்சரவையில், ஏன் இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் தவறிழைத்துள்ளார்கள் அதனாலேயே பலா சிறையில் இருக்கின்றார்கள் - என்றார். (ந-5)

வீடு வாடகைக்குத் தேவை
02 பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
077 072 4810

பெண் வேலையாள்கள் தேவை
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்திலுள்ள சைவ, அசைவ உணவகத்துக்கு சப்ளையர்ஸ் பெண்கள் இருவர் தேவை. (வயது 25-35)
021 221 7819, 077 990 1340

வீடு வாடகைக்கு உண்டு
பத்தமேனி அச்சுவேலியில் (பஸ்தரிப்பிடத்துக்கு அருகில்) சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு.
அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 086 8673

பெயர்மாற்றம்
உடுப்புக்குளம், உப்புமாவெளி, அளம்பில், முல்லைத்தீவு என்னும் முகவரி கொண்ட மீரா மொகிதீன் கன்சில்புகாரி நிசார் என்னும் பெயருள்ள நான் எனது பெயரை இன்று தொடக்கம் நிரஞ்சன் என்று மாற்றிக்கொள்கின்றேன். இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்பதை அறியத்தருகிறேன்.
(கே.136) (13.18)
க.நிரஞ்சன்

வேலையாள்கள் தேவை
நல்லூர், செட்டித்தெரு, இல. 83 இல் அமைந்துள்ள ஜெயசாயி சுப்பர் சென்ரருக்கு (புடைவைக்கடை) வேலையாள்கள் (ஆண், பெண்) தேவை. 19.08.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமுகம் தரவும்
தொடர்பு: 021 373 7545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துரை

யாழ்ப்பாணம், ஓக.18
சமூக விஞ்ஞானமும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய கருத்துரை நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு புத்தூர் கதிர் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. புத்தூர் ஆரம்பப் பாடசாலை அதிபர் இ.கோகுலராகவன் இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கவுள்ளார். (ற)

## சுகாதார சீர்கேட்டுடன் உணவகம்; ரூ. 42,000 தண்டம் விதித்தது மன்று

யாழ்ப்பாணம், ஓக.18
சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகத்தின் உரிமையாளர் இரண்டாவது தடவையாகவும் சுகாதாரப் பரிசோதகரிடம் சிக்கினார். நீதிமன்றத்தில் அவர் முற்படுத்தப்பட்ட போது கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் இவருக்கு 42 ஆயிரம் ரூபா தண்டம் வித்தார்.
ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள உணவகத்துக்குச் சென்ற சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்ஜீவன், சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் உணவகம் இயங்கி வருவதை அவதானித்தார்.
உணவக உரிமையாளருக்கு எதிராக கடந்த 11ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதால் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் இவருக்கு எதிராகத் தாக் கல் செய்யப்பட்ட ஆறு குற்றச்சாட்டுக் களுக்கும் தலா 7ஆயிரம் ரூபா வீதம் 42 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.
கடந்த பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி உணவகத்தில் காணப்பட்ட சுகாதாரச் சீர்கேடு காரணமாக குறித்த உரிமையாளருக்கு எதிராக சுகாதாரப் பரிசோத கரால் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையைத் தொடர்ந்து இவருக்கு நீதிவான் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்திருந்தார். (ற-115)

## ஆதன வரி மீள் மதிப்பிடுதல் தொடர்பான பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஓக.18
யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் ஆதன வரிகளை மீள் மதிப்பீடு செய்வது தொடர்பான பயிற்சி வகுப்புகள் சபைகளின் செயலாளர்களுக்கும் வருமான பரிசோதகர்களுக்கும் நடத்தப்படவுள்ளன.
பயிற்சி வகுப்புகள் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக பயிற்சி நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை சபைகளின் செயலாளர்களுக்கும் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை வருமானப் பரிசோதகர்களுக்கும் மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரை நடத்தப்படவுள்ளன.
யாழ்.மாவட்ட விலை மதிப்பீட்டாளர் எஸ்.சுரேஷ் வளவாளராகக் கலந்து கொள்வார். சபைகளின் செயலாளர்களையும், வருமானப் பரிசோதகர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்.
யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் பலவற்றில் இன்னமும் ஆதன வரி அறவீடு நடக்காததால் சபைகள் போதிய நிதி இன்றி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன. யாழ்.மாவட்ட விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் போதிய அலுவலர்கள் இல்லாததால் பல சபைகளில் இன்னமும் காணிகளுக்கு வரி மதிப்பிடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
தற்போது ஆதனவரி அறவிடும் யாழ். மாநகரசபை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய நகர சபைகள் நல்லூர், மானிப்பாய், வடமராட்சி தெற்கு மேற்கு ஆகிய பிரதேச சபைகள் போன்றவற்றில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பிலிருந்து வந்திருந்த விலை மதிப்பீட்டாளர்களால் ஆதனவரி மீளாய்வு செய்யப்பட்டது. ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வரி அறவிடப்படல்வேண்டும் என்பது விதிமுறையாகும். இந்த சபைகளில் ஆதன வரி மீளாய்வு இவ்வருடம் இடம்பெற வேண்டும்.
ஏனைய சபைகளில் கடந்த 40 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி அறவீடே தற்போதும் இடம்பெறுகின்றது. யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் ஆதனவரி அறவீடு இடம்பெற்றால் ஒவ்வொரு சபையும் தமது சொந்த வருமானத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளமுடியும் என உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களால் தெரிவிக்கப்பட்டது. (ற-9)


## மரண அறிவித்தல்

### சண்முகம் சிவஞானம்

(இளைப்பாறிய கிளை முகாமையாளர் - மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ.சங்கம்)



தோற்றம் 10.02.1940 மறைவு 15.08.2016

ஆனந்தா வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவஞானம் 15.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - செல்லம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரராணியின் அன்புக் கணவரும், முத்துலிங்கத்தின் (கனடா) அன்புச் சகோதரனும்,நாகேஸ்வரி, காலஞ்சென்ற தங்கத்துரை மற்றும் இந்திராணி, சந்திராதேவி, சௌந்தரராணி ஆகியோரின் மைத்துனரும், தர்ஷினி, கல்யாணி, பிங்கலன் (கனடா), கலையரசி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தர்மசீலன் மற்றும் ரமேஸ்குமார் (சோபிதா நகை மாடம்),சர்மிலா,சர்வேந்திரன் (டோகா) ஆகியோரின் அன்பு மாமனும், அபிலாஷினி, பிரதாஜினி (Nation Lanka Finance plc) கஜேந்திரன், தர்மேந்திரன், தர்ஷிகன், பாவனா, பவீனா, பிரகதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மானிப்பாய் வடகிழக்கு,**
**மானிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 225 5633** (ஜே.3829) (13.18)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமார் விஜயகுமார்



சுப்பர்மடம், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமார் விஜயகுமார் 16.08.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமார்-செல்லக்கிளி தம்பதியரின் மகனும் சித்திராதேவியின் அன்புக் கணவரும் செந்தில்குமார் (லண்டன்), காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் அஜித்குமார் (லண்டன்), மீரா, இராசதுரை, ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாளினி(லண்டன்), பிரியா, நிறோஜன் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும் அனிஷின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சுப்பர்மடம் சித்திர வடிவேல் (நடனி) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுப்பர்மடம்,**
**பருத்தித்துறை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 556 5129**

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தேவராணி தவகோபால்

(மில்க்வைற் தொழிற்சாலை உரிமையாளர் அவர்களின் மனைவி)

கள்ளமில்லா உள்ளமும் கபடமில்லா மனமும்
வேசமில்லா புன்னகையும் கொண்ட தாயே!
அள்ள அள்ளக் குறையாத உங்கள் அன்பை இழந்து
சொல்லொண்ணாத் துயர் கொண்டு ஆண்டுகள் பதினான்கானதுவே!
ஆறாது உங்கள் பிரிவு என்றும் மாறாது உங்கள் பாசம்
எம் கண்கள் உள்ளவரை கண்ணீராய் சொறியும் உங்கள் நினைவு
உங்கள் ஆத்மா இறைவனில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

த.பெ.இல.77,
மில்க்வைற், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## நினைவஞ்சலிகள்

### முதலாம் ஆண்டு



அமரர் அருளம்பலம் அருள்செல்வன்
திதி: பூரணை 18.08.2016
தோற்றம் 26.06.1969 மறைவு 29.08.2015

### 13ஆம் ஆண்டு



அமரர் குமாரவேலு அருளம்பலம்
திதி: அமாவாசை
தோற்றம் 31.10.1934 மறைவு 29.06.2003

அன்போடும் பண்போடும்
அனைவரையும் நேசித்து
பண்பின் சிகரமாய்
அவனியில் என்றும்
புகழாய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வங்களை
இழந்து ஓராண்டும்
பதின்மூன்று ஆண்டுகளும்
ஓடி மறைந்தாலும் என்றும்
உங்கள் நினைவுகளோடு......

**குடும்பத்தினர்.**
**(சகோதரி)**
**077 976 0407**
'மனோன் மணிவாசா'
ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமுண்டு

## விசாரணைக் குழு அமைக்கப்பட்ட 40ஆவது நிமிடத்தில் கையளிப்பேன் என்கிறார் வடக்கு உறுப்பினர் லிங்கநாதன்

யாழ்ப்பாணம், ஓக. 18

விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக என்னால் முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களுக்குரிய ஆதாரங்களை, விசாரணைக்குழு அமைத்து 40 நிமிடங்களுக்குள் சமர்ப்பிப்பேன்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக விசாரணை முன்னெடுக்கக் கோரும் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர், அமைச்சர்கள் தொடர்பில் முன்னெடுக்கும் விசாரணையை யாரும் தடுக்க முடியாது. அவ்வாறு தடுத்தால் வெளிப்படைத்தன்மையை நாம் மூடி மறைக்கின்றோம் என்ற நிலைமைதான் ஏற்படும்.

கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்றசபை அமர்வில், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக என்னால் பிரேரணை முன்மொழியப்பட்டது.

> "விசாரணைக் குழு அமைக்கப்பட்டு 40 நிமிடத்தில் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படும். எல்லா ஆதாரங்களும் யாழ்ப்பாணத்தில்தான் உள்ளன. பாதுகாப்பின் நிமித்தம் ஓரிடத்தில் வைக்கப்பட்டுள்ளன என்று கூறினார் ஜி.ரி.லிங்கநாதன்."

ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் வழிமொழிந்தார். முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அந்தப் பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சபையிலிருந்து இடைநடுவில் வெளியேறினார். அடுத்த நாள் முழுங்காவிலில் நடந்த பொது நிகழ்வில், அமைச்சர் ஐங்கரநேசன் பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சமாட்டார் என்று கூறினார். இந்த விடயத்தில் முதலமைச்சர் ஒரு நீதியரசராக நடக்கவில்லை. எது எப்படியிருப்பினும் அமைச்சருக்கு எதிராகப் பிரேரணை கொண்டு வரப்பட்டு 6 மாதங்கள் கடந்துள்ளன. ஆனால் விசாரணை முன்னெடுக்கப்பட வில்லை.

"அமைச்சர்களுக்கு எதிராக ஒரு முறை குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதற்கு ஆதாரம் சமர்ப்பிக்கப்படவில்லை" என்று முதலமைச்சர் ஊடகத்துக்கான செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். விசாரணைக் குழு அமைக்கப்பட்டு 40 நிமிடத்தில் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படும். எல்லா ஆதாரங்களும் யாழ்ப்பாணத்தில்தான் உள்ளன. பாதுகாப்பின் நிமித்தம் ஓரிடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இங்கு முக்கியமானவிடயம், ஆதாரங்களை வைத்துக் கொண்டே 6 மாதங்கள் சென்று விட்டன. இனி இரு ஓய்வுபெற்ற நீதிபதிகள், ஓய்வு பெற்ற மாவட்டச் செயலர், இந்த விசாரணைக்கு எவ்வளவு காலம் நீடிக்கப் போகின்றதோ தெரியவில்லை. முதலமைச்சரின் குழு தனது விசாரணை அறிக்கையை லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கும், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும் அனுப்பி வைக்க வேண்டும் - என்றார். (ம-5-101)

# வீட்டுத் தோட்டங்களை அமைத்தால் நாடு தானாக அபிவிருத்தியடையும்

## வவுனியா மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.18

ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத் தோட்டம் இருந்தால் நாடு தானாக அபிவிருத்தியடையும். இது உண்மை. இதனை உணர்ந்து கொண்டு செயற்படுங்கள்.

இவ்வாறு வவுனியா மாவட்ட செயலர் ரோகணபுஸ்பகுமார தெரிவித்தார்.

தேசிய உணவு உற்பத்திச் செயற்றிட்டம் 2016-2018 வீட்டுத் தோட்ட ஊக்குவிப்புத் திட்டத்துக்கான மரக்கன்றுகள், விதைகள் வழங்கும் நிகழ்வு வவுனியா விவசாய விதை உற்பத்தி பண்ணையில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது. தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட செயலர் விவசாயிகளுக்கு விதைகள் மரக்கன்றுகள் வழங்கினார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

பெண்கள் வெற்றிகரமாக வீட்டுத்தோட்டத்தைச் செய்ய வேண்டும். அதன் மூலம் அவர் களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும். கடந்த காலங்களில் அரசு இதுபோன்று மரக்கன்றுகளை இலவசமாக வழங்கியது. வெற்றிகரமாக அந்த செயற்றிட்டங்கள் அமையவில்லை. பல பிரச்சினைகள் ஏற்பட்டன. மரக்கன்றுகளை எம்மிடம் வாங்கிச்சென்றுவிட்டு அதனை வீடுகளில் உரிய வகையில் பராமரிக்கத் தவறியமையால் அவை வாடிப்போயின. பயன் பெறவில்லை. வீட்டுத்திட்டங்களில் இந்த மரக்கன்றுகளைக் கொடுத்தோம். அங்கும் உரிய வகையில் பராமரிப்பு இடம்பெறவில்லை.

தற்போது ஒரு கிராம அலுவலர் பிரிவில் 20 பேர் வீதம் 4 ஆயிரம் பேருக்கு வழங்குகின்றோம். மாங்கன்றுகள். கொய்யாக் கன்றுகள், யம்புகன்றுகள் மற்றும் மரக்கறி விதைகள் வழங்குகின்றோம். இதன்மூலம் சிறந்த பயனைப் பெறுவீர்கள். நஞ்சற்ற முறையில் உற்பத்தி செய்யுங்கள். வீட்டுத்தோட்டம் வெற்றியளித்தால் நாட்டின் தேசிய அபிவிருத்தி வெற்றியடையும்- என்றார்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ரி.யோகேஸ்வரன், உதவி விவசாய ஆணையாளர் ஆர். விஜயகுமார், மாவட்டவிவசாய பணிப்பாளர் திருமதி ஈஸ்வரன், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். (ந-402)



தண்டவாளத்தில் கூட்டமாக நின்ற யானைகள் மீது ரயில் மோதியதில் சம்பவ இடத்திலேயே யானைக்குட்டி உட்பட 4 யானைகள் சாவடைந்தன. நேற்று முன்தினம் இரவு வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தலைமன்னாரில் இருந்து இரவு 10.30 மணியளவில் கொழும்பு நோக்கி பயணித்த ரயிலே யானைகளை மோதியது. சம்பவ இடத்துக்கு வந்த செட்டிகுளம் பொலிஸார் மற்றும் வனவளத் திணைக்கள அதிகாரிகள் உயிரிழந்த யானைகளின் உடலங்களை மீட்டனர். (ந-21,56)

# பனை, தென்னை வள அ.கூட்டுறவுச் சங்க உற்பத்தியை அதிகரிக்க உதவி தேவை

## யாழ். மாவட்டச் செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.18

யாழ். குடாநாட்டு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசிடம் இருந்து உதவித் திட்டங்களைப் பெற்றுத்தர வேண்டும். இவ்வாறு யாழ். மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கொண்ட குழுவினர் கடந்த வாரம் யாழ். மாவட்டச்செயலர் ந. வேதநாயகனை செயலகத்தில் சந்தித்தனர். அதிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என். கணேசன் இதுபற்றித் தெரிவித்ததாவது:

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசிடம் இருந்து திட்டங்களைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தோம். போத்தலில் அடைக்கும் பனங்கள்ளை நவீன முறையில் ரின்களில் அடைத்து விநியோகிப்பதற்கு உரிய உதவித் திட்டங்களைப் பெற்றுத் தருமாறு கேட்டோம். சங்கங்களின் பனை வெல்ல உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசிடம் இருந்து மானியத்தைப் பெற்றுத் தருமாறும் கோரினோம்.

தற்போது பனங்கட்டி, பனம் வெல்லம் போன்றவற்றின் உற்பத்திகள் அதிகரித்துள்ளன. அவற்றின் பாவனையும் மறுபுறத்தில் அதிகரித்துள்ளது.

அவற்றின் உற்பத்திகளை மேலும் அதிகரிப்பதற்குச் சமாசம் திட்டமிட்டுள்ளது.

உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசிடம் இருந்து மானியத்தைச் சங்கங்கள் எதிர்பார்த்துள்ளன. அதனைவிட சங்கங்களுக்குத் தேவையான ஏனைய உதவித் திட்டங்களையும் கேட்டிருக்கிறோம்.

உரிய தரப்பினருடன் விரைவில் தொடர்பு கொண்டு உரையாடித் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலர் உறுதியளித்தார் - என்றார். (ந-17)

# கிராம அபிவிருத்திக்கு அர்ப்பணிப்போடு செயற்படுங்கள்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை

அச்சுவேலி, ஓக.18

பல்லாயிரம் உயிர்களின் விதைப்புக்கு உள்ளாகிய எமது பிரதேசம் எதிர்கொண்ட பாதிப்புக்களில் இருந்து விடுபட வேண்டும். கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது கிராமங்களை அபிவிருத்தி செய்வதில் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும்.

இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி மீன்பிடி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன். கிராம அபிவிருத்தி அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதிமூலம் கிராம அபிவிருத்திச்சங்கங்களுக்கு தளபாடத்தொகுதி, மகளிர்கிராம அபிவிருத்திச்சங்கங்களுக்கு சமையல் பாத்திரத்தொகுதி, தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்குத் தையல் உபகரணத்தொகுதி என்பன வழங்கும் நிகழ்வு கிராம அபிவிருத்தித்திணைக்கள அலுவலகத்தில் நடை பெற்றது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் ... தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிராமத்தின் முதுகெலும்பாக விளங்கும் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் வலுவூட்டப்பட வேண்டும் என்ற நோக்குடன் அபிவிருத்திக்கான உதவிப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அவை உரிய நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் உயர் வளப் பயன்பாட்டுடன் பயன்படுத்த ... பாதிப்பில் இருந்து விடுபட வேண்டும். கிராமங்கள் அபிவிருத்தியடையும் போது பிரதேசம் அபிவிருத்தி அடையும்.

சமையல் பாத்திரத் தொகுதியைப் பெற்றுக் கொண்டவர்கள், மரணச்சங்குகள் மற்றும் போராளிக் குடும்பங்கள், மாற்று வலுவுடையோர் குடும்பங்களுக்கு இலவசமாகவழங்கவேண்டும். ஏனையவர்களுக்கு நியாயமான கட்டணத்துக்கு வழங்க வேண்டும். சேவை நோக்குடன் பயன்படுத்த வேண்டும் – என்றார்.

நிகழ்வில் வடக்குமாகாணசபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் உட்பட பலர் உரையாற்றினர். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்கான பயணம் உரை

யாழ்ப்பாணம், ஓக.18
சமர்ப்பன் தியான நிலையத்தின் ஸ்தாபகரான தெய்வீக ஸ்ரீ சிவகுருபானந்த் சுவாமி அமைதிக்கான பயணம் என்னும் கருப்பொருளில் நாளை மாலை 4 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் உரையாற்றுவார்.
800 ஆண்டுகள் பழைமையான சமர்ப்பன் தியானக் கலை இமயமலையில் தோற்றம் கண்டது. மனதையும் ஆன்மாவையும் ஒரு நிலைப்படுத்தி நிம்மதியான வாழ்வுக்கு நம்மை வழிநடத்துவதே இந்தச் சமர்ப்பன் தியானக் கலையாகும்.
உரையைச் செவிமடுப்பதற்கு பன்னிரெண்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் கலந்து கொள்ள முடியும் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
(ற-ரி7)

# தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க 24 கிளைகளுக்கு உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.18
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 44 கிளை நிலையங்களுக்கும் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில், 24 கிளை நிலையங்களுக்கே தேர்தலை நடத்தக் கூடியதாக இருந்தது என்று சங்கத்தின் தலைவர் ந. உமாகரன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கடந்த வாரம் கிளை நிலையங்களுக்கான கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்பட்டது. 20 வரையிலான கிளை நிலையங்களுக்குப் போதிய உறுப்பினர்கள் வராமையால் தேர்தல் நடத்தப்படவில்லை. 24 கிளைகளுக்கும் ஒருவாறு தேர்தல் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
தேர்தலை நடத்த முடியாத கிளை நிலையங்களுக்கு மீண்டும் தேர்தலை நடத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.
(ற-17)

# சிவமகாராசாவின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஓக.18
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினருமான சிவமகாராசாவின் 10ஆவது நினைவு தினம் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை சங்க வளாகத்தில் நடைபெறும்.
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் கி. கிருஷ்ணவேல் தலைமையில் நடைபெறும் நினைவு தின நிகழ்வில், வடமாகாண சபையின் உறுப்பினர் பா. கஜதீபன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ற-17)

# வடக்கு – கிழக்கு இணைப்பே நல்லிணக்கத்துக்கு ஒரேவழி

## மக்கள் கருத்தறியும் செயலணியிடம் வவுனியா மக்கள் கருத்து

வவுனியா, ஓக. 18
நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் முதலில் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகளுக்கு அப்பால் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் தங்களுடைய பிரச்சினைகள் தொடர்பாகப் பரஸ்பரம் புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி ஆட்சி வேண்டும் என்று வடக்கு மாகாண சபை பிரேரணையை நிறைவேற்றுகின்றது. கிழக்குமாகாண சபை உட்பட முஸ்லிம் அமைப்புக்கள் இணையக் கூடாது என்று கூறுகின்றன. தமிழ் பேசும் மக்கள் நாங்களே இவ்வாறு ஒருவருக்கு ஒருவர் விதண்டா வாதம் பேசினால் பிரச்சினைகளைக் கண்டிப்பாக தெற்கு புரிந்து கொள்ளாது. நல்லிணக்கமும் ஏற்படாது.
இவ்வாறு மக்கள் கருத்தறியும் செயலணியிடம் வவுனியா மக்கள் தெரிவித்தனர்.
போர்க் குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது, காணாமற்போனவர்களுக்கான அலுவலகத்தை அமைப்பது தொடர்பாக மக்கள் கருத்தறியும் நல்லிணக்கச் செயலணியின் வவுனியா வலய அமர்வு நேற்று வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
வடக்கு - கிழக்கு மக்களுடைய பிரச்சினைகளை தெற்கு புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் நல்லிணக்கம். நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் முதலில் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட வேண்டும். தமிழ் மக்களுடன் என்ன பிணக்கு உள்ளது , எதை எதிர்பார்க்கின்றார்கள், அவர்களுக்குத் தமிழ் மக்கள் மீதுள்ள வெறுப்பு என்ன போன்ற பல விடயங்களை இங்குள்ள தமிழ் மக்கள் கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களிடம் கேட்டறிய வேண்டும். எமக்கும் அவர்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.
நாட்டில் 70 வீதம் சிங்கள மக்கள் இருக்கின்றபோது வெறும் 20 வீதமுள்ள நாங்கள் அவர்களை எதிர்க்க முடியாது. அவர்கள் எங்களைப் புரிந்து கொண்டாலே நல்லிணக்கத்துக்குச் செல்ல முடியும். அதைத்தான் ஜனாதிபதியும் கூறுகின்றார். இதற்கு ஒரே வழி வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு இரண்டு மாகாணங்களிலும் உள்ள மக்கள் பரஸ்பரம் புரிந்து கொண்டு எங்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதே. எங்களுடைய தமிழ் அரசியல்வாதிகளும் சரி மற்றையவர்களும் சரி, தாம் அரசியலை நடத்துவதற்கு மக்களை தூண்டி விடுகின்றார்கள். அதற்கு அப்பால் இரு இனங்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டும்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள், அரசியல் கைதிகளுடைய பிரச்சினைகள், காணி அற்று முகாம்களில் இருக்கும் மக்களுடைய பிரச்சினைகள், இராணுவ ஆக்கிரமிப்பு பிரச்சினை போன்வற்றை இங்குள்ள எமது பத்திரிகைள் தான் வெளிக்கொண்டு வருகின்றன. அது சிங்கள மக்களுக்கு விளங்கப் போவது இல்லை. அவை சிங்களப் பத்திரிகைகளில் வெளி வருவதில்லை. அவர்கள் எங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.
வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்கள் உண்மையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெற்கில் உள்ள சிங்கள மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நல்லிணக்கம் ஏற்படும்.
நீதியைப் பொறுத்த வரையில் நாட்டில் நல்ல முறையில் இருந்தாலும், தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் நீதிதுறையினர் சரியான முறையில் நீதியை வழங்கவில்லை என்றுதான் கூற முடியும். வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகளுக்கு நீதி கிடைக்கவில்லை, பல கொலைகளை செய்தவர்கள் இன்றும் நடமாடுகின்றனர். அவர்கள் தண்டிக்கப்படவில்லை. குமாரபுரம் கொலை வழக்கின் தீர்ப்பு அண்மையில் வெளியானது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டபோதும், அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று தெரிவிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள்.
2009ஆம் ஆண்டு நடந்த படுகொலைகளுக்கு இன்று வரை தீர்வுகள் கிடைக்கவில்லை. தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொலைகள் மற்றும் சம்பவங்களுக்கான நீதி சரியான முறையில் வழங்கப்படுவதில்லை. நீதித்துறையும் சீர் செய்யப்பட்டுப் பாரபட்சம் இன்றி செயற்படவேண்டும்.
சர்வதேசம் இங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டே ஆக வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். இவை அனைத் தும் எங்கள் எதிர்பார்ப்பின் படி நடந்தால் தேசிய நல்லிணக்கத்தை இலகுவாக எட்ட முடியும். மாவீரர்களின் தூபிகள் சீர் செய்யப்பட வேண்டும். இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்கள், போராளிகளை நினைவுகூர அனுமதிக்க வேண்டும்- என்றனர்.
(ற-2)

# வலி.மேற்கில் வாய்க்கால்கள் சிமெந்தால் அடைப்பு

யாழ்ப்பாணம், ஓக.18
வலி.மேற்குப் பிரதேச சபைக் குட்பட்ட வாய்க்கால்கள் சில பொதுமக்களுக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் சிமெந்து உட்கட்டுமானத்தில் அடைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
சங்கானை-சுழிபுரம் பிரதேசத்துக்குட்பட்ட வாய்க்கால்களே சட்டவிரோதமான முறையில் மூடப்பட்டு அல்லது அடைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கள ஆய்வு மூலம் திரட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
தனிப்பட்ட நோக்கத்துக்காக வாய்க்கால்களை அடைத்தவர்கள் எதிர்வரும் பெரும்போக மழைக்கு முன்னர் அவற்றை சீர்செய்ய வேண்டும் என வலி.மேற்குப் பிரதேச சபையினர் கேட்டுள்ளனர்.(ற-50)

# முருகபக்தி மாநாடு 2018ஆம் ஆண்டு இலங்கையில்

கொழும்பு, ஓக. 18
முருகபக்தி மாநாடு 2018 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ளது. அதற்கான ஞானச் செங்கோல், தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெற்ற முருகபக்தி மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.
திருமதி சாந்தி திருநாவுக்கரசு (மீள்குடியேற்ற புனர்வாழ்வு, இராஜாங்க அமைச்சின் செயலாளர்) உமாமகேஸ்வரன் (பணிப்பாளர் இந்து மதப் பண்பாட்டுத் திணைக்களம்) பி.பத்மநாதன் (வேந்தர் யாழ். பல்கலைக்கழகம்) சிவஸ்ரீ ச.பத்மநாபன் (விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரிடம் செங்கோலை தவத்திரு பாலயோகி சுவாமிகள் கையளித்தார்.
நிகழ்வு தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெற்றது. 2012 ஆம் ஆண்டு மலேசியாவில் தவத்திரு பாலயோக சுவாமிகள் தலைமையிலும் 2014 ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்தில் வே.கணேசகுமார் தலைமையிலும், இந்த முறை திருமதி சரஸ்வதி படையாட்சியின் தலைமையிலும் இந்த மாநாடு இடம்பெற்றது.
(ற-4)

# சமுதாயம் சார் சீர்திருத்தப் பணிக்கு உட்படுத்தப்பட்டோருக்கு கருத்தரங்கு

கிளிநொச்சி, ஓக. 18
கிளிநொச்சி மாவட்டத்தின் நீதிவான் மன்றால் சமுதாயம் சார் கட்டளைச் சட்டத்தின் கீழ் சீர் திருத்தப் பணிகளுக்கு உட்படுத்தப்படுபவர்களுக்கான விசேட விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்ற வளாகத்தில் நடைபெற்றது.
சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் மாவட்டப் பணிப்பாளர் செ.யோ.றொசாந் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றின் பதில் நீதிவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம், தர்மபுரம் வைத்தியசாலையின்



மருத்துவர் சுரேன், கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகள் சங்க தலைவி எஸ்.விஜயராணி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். போதைப் பொருள் பாவனைகளால் ஏற்படும் பாதிப்புகள், குடும்ப வன்முறைகளால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் மது போதையில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமை, மது போதையில் வாகனம் செலுத்தியமை, கசிப்பு வைத்திருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றசாட்டுக்ளுடன் தொடர்புபட்டு நீதிமன்றால் தண்டிக்கப்பட்டு தண்டப்பணம் செலுத்த முடியாதவர்கள் மற்றும் சீர்திருத்த கட்டளைச் சட்டத்துக்கு உட்படுத்தப்பட்டோர் என 125க்கும் மேற்பட்டோர் சமுதாயம் சார் சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
1999 ஆம் ஆண்டின் 446ஆம் இலக்க சமுதாயம் சார் சீர் திருத்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சமுதாயம் சார் சீர்திருத்த பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருபவர்களுக்கு இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு வளவாளர்களால் விழிப்புணர்வு கருத்தரங்குகள் மற்றும் உள வளத்துணைக் கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. (ற-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகர நிறையைவிடக் குறைந்த நிறையில் பிஸ்கெட் பொதிகள்

## 2 லட்சம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று

யாழ்ப்பாணம், ஓக. 18
பொறிக்கப்பட்ட நிறைக்குக் குறைவாக பிஸ்கெட் பொதி செய்து, விற்பனை செய்த நிறுவனத்துக்கு 2 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. குறித்த பிஸ்கெட் பைக்கெற்றுக்களை சந்தையில் இருந்து மீளப் பெற்று உரிய நிறையில் பொதி செய்து சந்தைப்படுத்துமாறும் உத்தர விடப்பட்டுள்ளது.

சந்தையில் உள்ள பிஸ்கெட் பைக்கெற்றுக்களின் நிறையைப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவருக்குப் பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி த.வசந்த சேகரன் தெரிவித்தார்.

மாத்தறைப் பகுதியில் பிஸ்கெட் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

கடந்த வருடம் யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர், யாழ். நகரப்பகுதியில் உள்ள விற்பனை நிலையமொன்றில் பிஸ்கெட் பைக்கெற்றை வாங்கிய போது அதில் 8 பிஸ்கெட்கள் இருந்தன.

நிறை 100 கிராம் என பொறிக்கப்பட்ட பிஸ்கெட் பைக்கெற் 15 முதல் 20 கிராம் குறைவாகவும், 190 கிராம் நிகர நிறை பொறிக்கப்பட்ட பிஸ்கெட் பைக்கெற் 10 முதல் 20 கிராம் குறைவாகவும் பொதி செய்யப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

400 கிராம் நிகர நிறையுடைய தெனப் பொறிக்கப்பட்ட பைக்கெட்டில் 180 கிராம் நிறையுடைய பிஸ்கெட்கள் பொதி செய்யப்பட்டிருந்தன. 250 கிராம் எனப் பொறிக்கப்பட்டதில் 225 கிராம் நிறை காணப்பட்டது.

நிகர நிறைக்கும் குறைவாக பொதியுடன் கூடிய நிறை காணப்பட்டதனால் பொறிக்கப்பட்ட நிறைகள் இருக்கின்றனவா எனப் பரிசோதனை செய்து பார்த்தபோது, 100 கிராம் எனப் பொறிக்கப்பட்ட பொதிகளில் 85 கிராம் நிறை உடைய பிஸ்கெட்டுக்கள் பொதி செய்யப்பட்டிருந்தன.

பல பிஸ்கெட் மாதிரிகள் யாழ். மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் பெறப்பட்டு நிறைகள் பரிசீலனை செய்யப்பட்டன. பெறப்பட்ட பிஸ்கெட் மாதிரிகளின் நிறைகள் குறைவாகக் காணப்பட்டதால் உரிய நிறுவனத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, நிறை குறைவாகக் காணப்பட்ட பிஸ்கெட் பைக்கெற்றுக்களைச் சரியான முறையில் பொதி செய்து விற்பனை செய்யுமாறு யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவுறுத்தல் விடுத்தது.

எதிர்காலத்தில் நிகர நிறைக்கு நிகரான நிறையில் பிஸ்கெட் பொதி செய்யப்படும் என்று குறித்த நிறுவனம் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனாலும், அந்த நிறுவனம் அவ்வாறு செயற்படவில்லை என்பது பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்வனவு செய்த பிஸ்கெற்றின் நிகர எடையைப் பரிசீலனை செய்தபோது தெரியவந்தது.

பிஸ்கெட் நிறுவனத்துக்கு எதிராகக் கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றால் நிறுவன உரிமையாளருக்கு அழைப்புக் கட்டளை விடுக்கப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிஸ்கெட் தயாரிப்பு நிறுவனத்துக்கு நீதிமன்று 2 லட்சம் தண்டம் விதித்ததுடன், கடுமையாக எச்சரிக்கையும் விடுத்தது.

நிகர நிறைக்குக் குறைவாக பொதிசெய்யப்பட்ட பிஸ்கெட்கள் அனைத்தையும் சந்தையில் இருந்து மீளப்பெற்று சரியான நிறையில் பொதி செய்து விற்பனை செய்யுமாறு ஒரு மாத கால அவகாசம் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பிஸ்கெட்களின் நிகர நிறையில் விசேட கவனம் செலுத்தி, நிகர நிறையைப் பரிசீலனை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவருக்குப் பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் நிறைகள் குறைவாகப்பிஸ்கெட் உள்ளிட்ட நிறையிடப்பட்ட பொருள்கள் விற்பனை செய்தால், உரிய நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி தெரிவித்தார். (ற-4,106)



இருபாலை - கோண்டாவில் வீதியில், கோண்டாவில் சந்திக்கு அருகில் போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் இளைஞர் ஒருவரை, ஹெல்மெட் அணியாத நிலையில் ஏற்றிச் சென்றார். (ற-5-101)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தியடைய புலம்பெயர்ந்தோர் உதவ வேண்டும்

## லயன்ஸ் கழகங்களின் புதிய ஆளுநர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஓக.18
புலம் பெயர் உறவுகள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் உதவ முன்வர வேண்டும். வடக்கு-கிழக்கு மக்களின் தியாகத்தால் தான் புலம் பெயர் உறவுகள் வெளிநாடுகளில் ஸ்தீரமான நிலையில் வாழ்கின்றனர். புலம் பெயர் உறவுகள் காலத்தின் தேவை அறிந்து நன்றியறிதலுடன் உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

இவ்வாறு லயன்ஸ் கழகங்களின் புதிய ஆளுநர் மருத்துவர் வை.தியாகராசா தெரிவித்தார்.

அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலைக்குக் கொழும்பு இன்னர் லயன்ஸ் கழக செயற்றிட்ட தலைவர் இம்மானுவேல் ஆர். யோசேப்பின் அனுசரணையுடன் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணத் தொகுதி கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற கையளிப்பு நிகழ்வில் பிரதமவிருந்தினராககலந்து கொண்டு லயன்ஸ் ஆளுநர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:
லயன்ஸ் கழக நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, இலங்கைக்கு நூறு மில்லியன் ரூபா உதவித்திட்டங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டு உதவிகள் வழங்கப்படுகின்றன. அதில் பெரும்பகுதி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

> தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்வாதாரத்துக்கும் புலம் பெயர் உறவுகள் நன்றியறிதலுடன் உதவிகளை வழங்க முன்வர வேண்டும். வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக் களின் தியாகத்தால் தான் புலம் பெயர் உறவுகள் சர்வதேச ரீதியில் ஸ்தீரமான நிலையில் வாழ்கின்றனர்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான வைத்திய சேவையை வழங்கும் நிலைய முக்கியத்துவம் உள்ள இடத்தில் அமைந்துள்ளது. 85 ஆயிரம் மக்களுக்கு வைத்திய சேவை வழங்கும் நிலையில் உள்ளது என வைத்தியசாலை பொறுப்பதிகாரி கூறினார்.

வைத்தியசாலையின் தேவையை அறிந்து லயன்ஸ் கழகம் காலத்துக்குக் காலம் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. தற்பொழுது வழங்கப்பட்டுள்ள குருதிப் பெருக்கைக் கட்டுப் படுத்தும் உபகரணம் உள்ளிட்ட முதலுதவித் தொகுதி வைத்திய சாதனங்கள் கொழும்பு லயன்ஸ் கழகத்தால் இம்மானுவேல் யோசேப்பின் முயற்சியால் வழங்கப்படுகின்றன, இது பாராட்டுக்குரியது.

தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்வாதாரத்துக்கும் புலம் பெயர் உறவுகள் நன்றியறிதலுடன் உதவிகளை வழங்க முன்வர வேண்டும். வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் தியாகத்தால் தான் புலம்பெயர் உறவுகள் சர்வதேச ரீதியில் ஸ்திரமான நிலையில் வாழ்கின்றனர். அவர்கள் உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும், காலத்தின் தேவை அறிந்து மேலும் உதவிகளை வழங்க முன்வர வேண்டும் - என்றார்.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மருத்துவர் செல்வி எஸ் சிந்துஜா, இம்மானுவேல் ஆர். யோசேப் உள்ளிட்ட பலர் உரையாற்றினர். (ற-11)

# அமைச்சுப் பதவியை வேறொருவருக்கு கொடுப்பது என்றாலும் நான் தயார்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஓக.18
என்னை நிறுத்தி விட்டு, இன்னொருவருக்கு அமைச்சுப் பதவி கொடுப்பது என்றாலும் அதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன். இவ்வாறு வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் நேற்றுமுன்தினம் விவாதத்தில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
கணவன் மனைவியுடன் சந்தேகத்தோடு வாழ்க்கை நடத்தியதைப் போன்று, கடந்த 3 ஆண்டுகளும் முதலமைச்சர் செயற்பட்டிருக்கின்றார். நாம் ஒரு சதம் கூட ஊழல் செய்யவில்லை. எமக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு கூட இன்னமும் போதாமல் இருக்கின்றது. நாம் அப்படியிருக்கின்ற நிலைமையிலும் பணியாற்றுகின்றோம்.

எம் மீது களங்கம் சுமத்தப்பட்டுவிட்டது. இந்த விசாரணை நடைபெற்றேயாக வேண்டும். அதில் எந்த மாற்றமும் இல்லை. எமது நன்மதிப்பு சார்ந்த பிரச்சினை இது. விசாரணை வெளிநபர்களைப் பயன்படுத்தியே நடத்தப்படவேண்டும். உறுப்பினர்களை நியமிக்கவேண்டாம். வேண்டுமானால் சிங்களவர்களை நியமியுங்கள். அவர்கள் ஒழுங்காக விசாரணை செய்வார்கள்.

ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளுபவர்கள் ஒப்பந்தத் தொகையின் ஒரு சதவீதத்தை எங்களுக்குத்தருகின்றோம் என்கின்றார்கள். நாம் அதனை வாங்குவதில்லை. நீங்கள் தரமான வீதியைப் போட்டாலே போதும். பொருளாதார வலயத்துக்கு இடத்தைத் தெரிவு செய்து கொடுப்பதற்குக் கூட முதுகெலும் பில்லை.

இந்த விசாரணை விரைவாக நடத்தப்பட வேண்டும் - என்றார். (ற-5)

### கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக. 18
தொண்டமானாறு வெளிக் கள நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

பேராசிரியர் திருமதி சிவசாந்தினி குகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள் விரைவில்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.18

இலங்கையின் தேசிய பொருளாதாரக் கொள்கை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டுக்கான வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் திட்டங்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



சீனாவுக்குச் சென்றுள்ள பிரதமர் பிரதான பல்தேசியக் கம்பனிகள் நூறுக்குள்ளும் முதல்தர தொழில் முயற்சிகள் ஐந்நூறுக்குள்ளும் உள்ளடங்கக்கூடிய 'சொங்ஜிங்' வெளிநாட்டு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய பிரதமர், இலங்கையில் சிறிய வர்த்தகச் சந்தையே காணப்படுவதால், உலகில் பல்வேறு நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட சொங்ஜிங் வெளிநாட்டு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத் தலைவர் யு யெங், இலங்கையின் திட்டம் வெளியிடப்படும் நிலையில், எமது நாட்டு முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிப்போம் என்று தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்தில் நிர்மாணத்துறை செயற்பாட்டில் ஈடுபடத் தமது நிறுவனம் விருப்பத்துடன் உள்ளது. இங்கு ரின்மீன், மாணிக்கக்கல், ஆபரண உற்பத்திக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் களஞ்சியசாலை என்பவற்றை அமைக்க உத்தேசித்துள்ளோம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதனூடாக இலங்கையின் பரந்த வர்த்தகச் சந்தைக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு சீன முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான சீனத் தூதுவர் யீ சியென் லீ யெங், ஆசியாவில் பெரிய பொருளாதார அபிவிருத்தியை எட்டும் இலங்கையின் நோக்கத்தை அடையச் சீனா முழுமையாக ஒத்துழைப்பு வழங்கும் என்று குறிப்பிட்டார். (ந-5)

### பங்களாதேஷ் பாதுகாப்பு அதிகாரிகளுடன் சந்திப்பு

பங்களாதேஷ் தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் பிரதிநிதிகளுக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சிக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் இரு நாடுகளினதும் பாதுகாப்பு அமைச்சின் ஒரு சில அதிகாரிகள் பங்கேற்றனர் என்று பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஹமிதுர் ரஹ்மான் சௌத்திரி தலைமையில் வந்துள்ள 24 உறுப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகள் குழு பாதுகாப்புச் செயலாளருடனான சந்திப்பில் பங்கேற்றது.

இலங்கைக்கான கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டிருக்கும் இந்தப் பிரதிநிதிகள் குழுவில் பங்களாதேஷின் இராணுவம், கடற்படை, கூட்டுப்பணிகளின் உறுப்பினர்கள் மற்றும் பங்களாதேஷின் சிவில் சேவை உறுப்பினர்கள் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாகப் பேச்சு இடம்பெற்றது. நிகழ்வைநினைவு கூரும் வகையில், நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன. (ந-5)

# பொலிஸ்மா அதிபரின் அறிவிப்பு சட்டத்துக்கு முரண் என தீர்ப்பு

கொழும்பு, ஓக.18

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர பொலிஸ்மா அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர், கிளிநொச்சி மூத்த பொலிஸ் அத்தியட்சகர் இடமாற்றம் செய்யப்படுவார் என்று அறிவித்தமையானது சட்டத்துக்கு முரணானது எனவும் அதிகாரமற்ற அறிவிப்பு என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்தர பொறுப்பேற்ற பின்னர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றகூட்டமொன்றில் கலந்துகொண்டபோது, கிளிநொச்சி மூத்த பொலிஸ் அதிகாரி பாலித சிறிவர்தனவை இடமாற்றம் செய்யவேண்டி ஏற்படும் எனத் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபரின் இந்த அறிவிப்பு சட்டத்துக்கு முரணானது எனவும், இது ஓர் உரிமை மீறல் எனவும் தெரிவித்து இந்த அறிவிப்பின் பிரகாரம் பொலிஸ்மா அதிபர் செயற்படுவதை நிறுத்துவதற்கு உத்தரவிடுமாறும், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை மூத்த பொலிஸ் அதிகாரி பாலித சிறிவர்தன முன்வைத்தார்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தலைமை நீதியரசர் கே.சிறீபவன் தலைமையிலான குழுவால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

உயர் பதவியில் உள்ள பொலிஸ் அதிகாரியொருவரை இட மாற்றம் செய்வதற்கு பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரம் இல்லை என்றும், பொலிஸ் ஆணைக் குழுவுக்கே அதிகாரம் உள்ளது எனவும் விசாரணையின் பின்னர் தலைமைநீதியரசர் அறிவித்தார்.

இந்த அடிப்படைக்கு எதிராக பொலிஸ்மா அதிபர் செயற்படுவாராயின் அது சட்டத்துக்கு முரணானது. அத்துடன் பொலிஸ்மா அதிபரின் அறிவிப்பு, அதிகாரம் அற்ற ஓர் அறிவிப்பு எனவும் தலைமை நீதியரசர் சுட்டிக்காட்டினார். (ந-5)

# பாடசாலைப் பரிசோதகர் முறையை மீளக் கொண்டுவர அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக.18

பாடசாலைகள் தொடர்பில் முன்னர் நடைமுறையில் இருந்துள்ள பாடசாலைப் பரிசோதகர்கள் பதவிகளை மீளவும் செயற்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. முன்னர் போன்று இல்லாமல் இனிப் பரிசோதகர்களாக நியமிக்கப்படுபவர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும். ஆசிரியர்களின் செயற்றிறன் தொடர்பிலான ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இந்த அதிகாரங்களில் அடங்கும்.

இந்தப் புதிய திட்டமானது விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட விருக்கின்றது. மாணவர்களைத் தொடர்ந்து தரம் 13 வரை தமது கல்வியைத் தொடரும்படி செய்வதற்கான செயற்திட்டத்தின் கீழ் இதுவும் நடைமுறைக்கு வரவிருக்கின்றது.

இந்தத் திட்டத்தின்படி பாடசாலைப் பரிசோதகர்கள் பாடசாலைகளில் வகுப்பறைக்குச் சென்று பாடவிதானத்துக்கு அமைவாக அவர்கள் கல்வி அறிவைப் பெற்றிருக்கிறார்களா என்பதை அறிவதற்கு மாணவர்களிடம் கேள்விகளைக் கேட்பார்கள். அதேநேரம் ஆசிரியர்களின் செயல்திறனைக் கண்டறிவதற்கான கேள்விகளையும் அவர்களிடம் கேட்பார்கள்.

மேற்கண்ட தகவல்களை வெளியிட்ட கல்வி அமைச்சின் உயர்நிலை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டிருக்கின்றது. பரிசோதகர் வரப் போகிறார் என்ற எச்சரிக்கையுடன் ஆசிரியர்களும், மாணவர்களும் விழிப்புடன் இருப்பார்கள்.

பிரிட்டனில் கடைப்பிடிக்கப்படும் மாதிரியில் இந்தத் திட்டம் இங்கும் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த உதவியும் ஆதரவும் தருவதாக பிரிட்டிஷ் கவுன்சில் வாக்களித்திருக்கிறது.

ஆசிரியர் மற்றும் மாணவர்களின் ஆற்றுகை தொடர்பாக ஆராய்ந்து பரிசோதகர்கள் அதிபர்களுக்கும் கல்வித் திணைக்களத்துக்கும் உரிய நடவடிக்கைக்காக அறிக்கை வழங்குவார்கள். இந்த நடைமுறையை செயல்படுத்தும் அதிகாரத்தை கல்வி அமைச்சு கொண்டிருக்கும். - என்றார். (ப)

### சு.க. தொகுதி அமைப்பாளர் பதவிகள் பறிப்பு

மகிந்த ஆதரவு தொகுதி அமைப்பாளர்கள், பதவிகளில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று நீக்கப்பட்டனர்.

மகிந்த ஆதரவு அணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களாக இன்னமும் பதவி வகித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களை பதவிகளிலிருந்து ஜனாதிபதி நீக்கினார்.

சுதந்திரக் கட்சியின் 40 தொகுதி அமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று நியமனம் வழங்கப்பட்டது.

மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்த யாப்பா அபேவர்தன, காமினி லொக்குகே, சி.பி.ரத்நாயக்க, கெஹலிய ரம்புக்வெல மற்றும் பவித்திரா வன்னியாராச்சி ஆகியோரின் தொகுதி அமைப்பாளர் பதவிகளே பறிக்கப்பட்டன. (ந-5)

# போரை முடித்தது யாரென மக்களுக்குத் தெரியுமாம்

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஓக.18

யார் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள்என்று மக்கள் நன்கு அறிவார்கள்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனது மகனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை நேற்றுமுன்தினம் மகிந்த பார்வையிட்டார். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

வடக்கின் போரை முடிவுறுத்தியதில் தமக்கும் பங்குண்டு என்று சிலர் கூறுகின்றனர். அவற்றை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மக்கள் முட்டாள்கள் இல்லை. போர் முடிவுறுத்தப்பட்டமை குறித்துப் பலர் பல கருத்துக்களைக் கூறமுடியும். மக்கள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டுள்ளனர். எனது மகன் சிறைச்சாலையில் நன்றாக இருக்கின்றார். அது பற்றி பேசுவதற்கு ஒன்றும் இல்லை - என்றார். (ந-5)

# சட்டவிரோத சிறுநீரக விற்பனையில் கைதானோரின் உடல்நிலை பாதிப்பு

கொழும்பு, ஓக.18

சட்ட விரோத சிறுநீரக வியாபாரம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியப் பிரசைகளின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர்களது சட்டத்தரணிகள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இது தொடர்பான வழக்கு அழைக்கப்பட்டபோது கருத்துக்களைத் தெரிவித்த சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி அஜந்தா லக்மால், தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு இந்தியப் பிரசைகளின் சிறுநீரகங்கள் நீக்கப்பட்டுள்ளன என்று அறிவித்தார்.

சிறைச்சாலைக்குள் அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் குடிதண்ணீர் வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களை உடனடியாக மிரிஹானையில் அமைந்துள்ள முகாமுக்கு மாற்ற வேண்டும் என்று சட்டத்தரணி வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோள் அடுத்த வழக்குத் தினத்தில் ஆராயப்படுமென்று கூறிய நீதிபதி சந்தேக நபர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட விரோத சிறுநீரக வியாபாரம் தொடர்பாகச் சில மாதங்களுக்கு முன்னர் இந்த சந்தேக நபர்கள் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமலின் நிறுவன பணிப்பாளரான விமானப் பணிப் பெண் கைதானார்

## கறுப்புப் பணச் சுத்திகரிப்புச் சட்டத்தில்

கொழும்பு, ஓக. 18

கறுப்புப் பணச் சுத்திகரிப்புச் சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் வெளிப்பட்ட இருவேறு சட்டவிரோதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விவகாரங்கள் குறித்து விமானப் பணிப் பெண்ணான நித்தியா சேனாதி சமரநாயக்க நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயத்தில் முதன்மைச் சந்தேக நபரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவரான விமானப் பணிப்பெண் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச்சென்ற நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் 2 ஆம் இலக்க விசாரணை அறையின்பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மொஹம்மட் சாஜித் தலைமையிலான குழுவால் நித்தியா சேனாதி சமரநாயக்க பணி நிமித்தம் புதுடில்லி நோக்கிச் செல்ல இருந்த நிலையில் கைது செய்யப்பட்டார். அவர் கொழும்பு மேலதிக நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

நாமல் ராஜபக்சவுக்குச் சொந்தமானது என்று கூறப்படும் ஹலோ கோப் நிறுவனத்தின் 100 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்த விதம் தொடர்பில் இடம்பெற்ற விசாரணைகளின்போது வெளிப்படுத்தப்பட்ட, நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான என்.ஆர். கன்சல்டன் மற்றும் கவர்ஸ் கோப்ரேசன் ஆகிய நிறுவனங்கள் ஊடாகக் கறுப்புப் பணச் சுத்திகரிப்புச் சட்டத்தின் கீழ் புரியப்பட்டது என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு உதவி ஒத்தாசை புரிந்தார் எனும் குற்றச்சாட்டில் விமானப் பணிப்பெண் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நித்திய சேனாதி சமரநாயக்க என்.ஆர்.கன்சல்டன் மற்றும் கவர்ஸ் கோப்ரேசன் ஆகிய இரு நிறுவனங்களினதும் பணிப்பாளராகக் கடமையாற்றியவர் என நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு மன்றுக்கு அறிவித்துள்ளது.

நாமலும் அவருக்குக் கறுப்புப் பணச் சுத்திகரிப்புக்கு உதவியதாகக் கூறப்படும் சுதர்சன பண்டார கனேகொடவும் கைது செய்யப்பட்டு கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

'ஊழல் ஒழிப்புக் குரல்' அமைப்பின் தலைவர் வசந்த சமரசிங்கணும், சுஜானி போகொல்லாகம என்ற பெண்ணும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகவில்லை. சுஜானி போகொல்லாகம கொழும்பின் பிரபல தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், வீட்டிலிருந்து பணிக்குச் சென்ற விமானப் பணிப் பெண்ணான நித்தியா கட்டுநாயக்கவில் கைதானார்.

நீதிமன்றில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரை முற்படுத்தினர். நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றுக்குத் தெரிவித்ததாவது:

நாமல் ராஜபக்ச ஹலோ கோப்ஸ் நிறுவனத்தின் பங்குகளைக் கொள்வனவு செய்ய சட்டவிரோதமாக உழைத்தார் என்று கூறப்படும் தொகையானது அவருக்குச் சொந்தமான இரு நிறுவனங்கள் விற்பனை செய்யப்பட்டு பெறப்பட்டது. அந்த நிறுவனங்கள் ஊடாகவே கறுப்புப் பணச் சுத்திகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் வெளிப்படுத்தப்பட்டது. இரு நிறுவனங்கள் தொடர்பில் தேடியபோது அவை நாமல் ராஜபக்சவுக்குச் சொந்தமான என்.ஆர். கன்சல்டன் மற்றும் கவர்ஸ் கோப்ரேசன் எனத் தெரியவந்தது. இந்த நிறுவனங்கள் அனைத்தினதும் பங்குகள் நாமல் ராஜபக்சவுக்குச் சொந்தமானவை. இரண்டு நிறுவனங்களும் தமது கறுப்புப் பணத்தை ரொஹான் ஹிரியாகொல்ல என்பவர் தலைமை தாங்கும் பொஸ்டன் எனும் நிறுவனத்தின் ஊடாகச் சுத்திகரித்துள்ளனர். இது தொடர்பில் கொடுக்கல் வாங்கல் பத்திரங்களையும் வங்கிக் கணக்குகளையும் மையப்படுத்திய விசாரணைகளில் உறுதியானது.

இதன்படி என்.ஆர்.கன்சல்டன் நிறுவனம் 15 மில்லியன் ரூபாவையும் கவர்ஸ் கோப்ரேசன் நிறுவனம் 30 மில்லியன் ரூபாவையும் பொஸ்டன் நிறுவனத்தில் இட்டுபின்னர் மீளத் தமது கணக்குகளுக்குள் உள்ளீர்த்துள்ளன.

என்.ஆர்.கன்சல்டனின், கவர்ஸ் கோப்ரேசனின் பணிப்பாளராக நித்தியா சேனாதி சமரநாயக்க எனும் இந்தச் சந்தேகநபர் செயற்பட்டுள்ளார்.

என்.ஆர். கன்சல்டன் குறித்து 25 கொடுக்கல் வாங்கல் பத்திரங்களும் கவர்ஸ் கோப்ரேசன் தொடர்பில் 14 கொடுக்கல் வாங்கல்களும் ஆராயப்பட்டுள்ளதுடன் அவை மன்றுக்குக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமையவே நடைபெற்றுள்ளன என்பது விசாரணையில் உறுதியானது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் உள்ளிட்ட சந்தேக நபர்களை மன்றில் முற்படுத்திய போது கூறிய அனைத்து விடயங்களும் இந்தச் சந்தேக நபர் தொடர்பிலும் பொருத்தமானது. இது குறித்த விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. ஆகவே சந்தேக நபரான இந்தப் பெண்ணை விளக்கமறியலில் வைக்கவேண்டும் எனும் கோரிக்கை மன்றில் முன்வைக்கப்பட்டது.

மன்றில் கருத்துக்களை முன்வைத்த சந்தேக நபரின் சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ், தமது சேவைபெறுநர் பெயரளவுப் பணிப்பாளராகவே இருந்தார் என்றும் அவருக்குக் குறித்த இரு நிறுவனங்கள் ஊடாகவும் எவ்வித கொடுப்பனவுகளும் கிடைக்கப் பெறாத நிலையில் அவருக்கு பிணை வழங்கவேண்டும் எனவும் வாதிட்டார்.

நீதிவான் லங்கா ஜயரத்ன நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அது குறித்து விசாரித்தார்.

அவர் பெயரளவுப் பணிப்பாளராக இருந்தாலும், ஏதோ பிரதிபயனுக்காகவே இந்த நடவடிக்கைகளை செய்துள்ளார் என்றும், பணம் பெற்றிருக்கலாம் எனத் தமக்கு சாதாரண சந்தேகம் இருக்கின்றது. அது குறித்தும் விசாரணை செய்யப்படுகின்றது என்றும் பொலிஸ் பரிசோதகர் சாஜித் இதன்போது நீதிவானுக்குப் பதிலளித்தார்.

இரு தரப்பு விடயங்களையும் ஆராய்ந்த நீதிவான் லங்கா ஜயரத்ன, சந்தேக நபர் குறித்த குற்றச்சாட்டுடன் சில தொடர்புகளைக் கொண்டுள்ளமை தெளிவாவதால் விசாரணை நிறைவடையவில்லை என்பதை மையப்படுத்தி சாட்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்பதைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ந-5)

> நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் உள்ளிட்ட சந்தேக நபர்களை மன்றில் முற்படுத்தியபோது கூறிய அனைத்து விடயங்களும் இந்த சந்தேகநபர் தொடர்பிலும் பொருத்தமானது. இது குறித்த விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. ஆகவே சந்தேக நபரான இந்தப் பெண்ணை விளக்கமறியலில் வைக்க வேண்டும். – எனும் கோரிக்கை மன்றில் முன்வைக்கப்பட்டது.



பத்தாம் நாள் உள்வீதியுலா

## பதினோராம் திருவிழா

### நல்லைக் கந்தனை நாடுங்கள்

நல்லைக் கந்தன் பெயரை
தினமும் சொல்லச் சொல்ல
நாவெல்லாம் இனிக்குதே
எல்லையிலாப் பேரானந்தம்
வந்து மெய் மறக்கச் செய்யுதே
கல்லைக்கூட கனியச் செய்யும்
அவன் கருணையுள்ளம் தெரியுதே
தொல்லை தீர அவன் நாமம்
சொன்னால் தீவினை யாவும் அகலுமே
உள்ளக் கமலமெலாம் அவன்
பாதக் கழல் சேர துடிக்குதே

- க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

### எனக் கின்பமே வா

பல்லவி

எனக்கின்பமே – வா

அனுபல்லவி

ஏராகம் பழனிப்பதி இலங்குங் கந்தசுவாமி நாதா (எனக்கின்பமே)

சரணம்

இரவும் பகலும் ஏத்தித் தொழும்
ஏழை யடியார்க் கிரங்கு வாய்நீ
எழிலார் நல்லூர் வாழும் வாசனே
ஏத்தும் யோக சுவாமி நேசனே (எனக்கின்பமே)

- சிவத்திரு யோகர்சுவாமிகள்.

### சஞ்சலங்கள் சங்கரிப்பாய்!

குன்றாடி பெற்றெடுத்த குமரவடி வேலவனே!
நின்றாடி எம்மினத்தை நீளுலகில் காத்திடையா
மன்றாடி வேண்டுகின்றோம் மாதவத்தையே புரந்து
குன்றாடி நின்றென்றும் குவலயத்தைக் காத்திடையா!

காலச் சுழற்சியிலே களமாடி எமையாளும்
கோலத் திருமுருகா கொழுகொம்பாய் நீயிருந்து
ஞாலத்தில் நல்லருளை நமக்கென்றும் நல்கிடுவாய்!
சாலச் சிறந்தொளிரச் சஞ்சலங்கள் சங்கரிப்பாய்!

கந்தனே! உந்தன் கோயில் கருணையின் களமேயையா!
சந்ததம் எம்மைக் காத்துச் சாந்தியை யீந்திடையா!
சிந்தனை சிதறாவண்ணம் கீர்த்தியைத் தந்திடையா!
வந்தனை செய்வோர்தம்மை வளம்பெற வைத்திடையா!

– கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்.

நல்லைக்கந்தனுக்கு
இன்று (18.08.2016) வியாழக்கிழமை
பதினோராம் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :



தரணீஸ் மோட்டார் சைக்கிள் நிலையம்
கரடிப் போக்கு சந்தி,
கிளிநொச்சி.
(சி.24272) (13.18)
தொடர்பு: 021 228 0053

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சியின் அரசமைப்பு எதுவாக இருக்கப்போகிறது...?

இந்த நாட்டின் எந்தவொரு இனத்துக்கும் பாதிப்பை விளைவிக்க வல்ல சட்டங்களை தடை செய்தாக வேண்டும். புதிய அரசமைப்பில் சிறுபான்மை மக்களுக்கான காப்பீடுகள் உருவாக்கப்பட வேண்டும்.

கல்முனையில் கடந்த வாரம் நடைபெற்ற தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் கலந்து கொண்ட நல்லிணக்கப் பொறிமுறைகள் குறித்த கலந்தாலோசனைக் கூட்டத்தில், மேற்கண்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

★நாட்டின் பாதுகாப்புப்படைகள் பல்லினங்களையும் கொண்டவையாக அமைக்கப்பட வேண்டும்.

★அரச கரும மொழிச்சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

★தனது பொறுப்பை, சேவையை சரியாகச் செய்யாத மக்கள் பிரதிநிதிகளின் பதவியைத் திருப்பிப் பெறத்தக்க முறையொன்று தேவை.

★அபிவிருத்தித் திட்டங்கள், ஆட்சியில் உள்ள கட்சியை, ஆளும் தரப்பினரை அடிப்படையாக வைத்து வழங்கப்படக்கூடாது. மாவட்ட ரீதியில் அவற்றை வழங்குவதற்கு வகை செய்யப்பட்டாக வேண்டும்.

★நாட்டில் வேலை இல்லாப் பிரச்சினைக்கு அடிப்படைக்காரணமான கல்வி முறையின் ஒவ்வாத தன்மையை விலக்கி, திறன் விருத்திக் கல்விமுறையாக அதை மாற்ற வேண்டும்.

★அரசியல்வாதிகளில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டி இடுவோருக்கான அடிப்படைக் கல்வித் தகைமை கட்டாயமாக்கப்பட வேண்டும்.

★குற்றச் செயல்களுக்கு விரைவாகத் தீர்வு கிடைக்கக்கூடிய வகையில் நீதி - சட்ட முறைமைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் - போன்றவையும் கலந்தாலோசனைக் கூட்டத்தில் விரிவாக முன்வைக்கப்பட்டன.

இதேவேளை--

புதிய அரசமைப்பை உருவாக்கும் உபகுழுவில் ஆராயப்பட்ட அம்சங்களையும் தொட்டுப் பார்ப்பது பொருத்தம். அங்கு முன்வைக்கப்பட்ட குறிப்பிடத்தக்க கனதியுள்ள அம்சங்கள் வருமாறு:

★ மாகாண முதல்வர்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக வழங்காது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஊடாகவே நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

★அதேவேளை, மாகாண முதல்வர்களை உள்ளடக்கிய தேசிய காணி ஆணைக்குழுவை அமைப்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும்.

★ மேலும், காணி , பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக மாகாண அரசுகளுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற மாறுபட்ட ஒரு கருத்தும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தும் மேலெழுந்துள்ளது.

எது எப்படியோ, மத்திய அரசின் பிரபலஸ்தர்கள், எந்தப் பாதையில் நடைபோடப்போகிறார்கள் என்பதைப் பொறுத்தே இறுதி முடிவு அமையப் போகிறது!

அதுவரை- அதற்கிடையில் - நல்லாட்சி எத்தகைய தில்லுமுல்லுகளை உருவாக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

நல்லாட்சியின் தற்போதைய செயற்பாடுகளைப் பார்க்கும்போது, தமிழ் மக்களுக்கு வாய்ப்பான, செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்பது குறித்துத் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுவதாகக் காணோமே...?

# சுதந்திரக்கட்சி யாருக்குச் சொந்தம்?

**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் மயுர சமரக்கோனின் கருத்து**

லங்காதீப சிங்களமூலம்
தமிழில் வீ.எஸ்.ரீ

இலங்கையின் அரசியலில் பிரதான கட்சிகளான ஐ.தே. கட்சி மற்றும் சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவங்கள், தற்போதும் பிரபுத்துவ வர்க்கத்தை மையப் படுத்தியே அமைகின்றன. அது ஒன்றில் உயர் வர்க்க நிலச் சுவான்தார் பிரிவினராகவோ, அன்றேல் ஆங்கிலப் புலமை, வெளிநாட்டுப் பல்கலைக்கழக கல்வி பெற்ற பிரிவினராகவோ அமையும். இவையுமன்றேல் பாரம்பரிய அரசியல் அனுபவம் கொண்ட பிரிவினராக அமையும். இந்தப் பிரிவுகளுக்குள் அடங்காது தமது திறமையை வெளிப்படுத்தி அரசியலில் ஈடுபடுபவர்களால் முன்னேறுவது சிரமமே.

இதற்குப் பொருத்தமான உதாரணமாக அமைபவர்கள் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோராவர். ஆங்கிலம் பேசும் பரம்பரையைச் சேர்ந்தவர்களல்ல அந்த இருவரும். அதே போன்று தத்தமது முயற்சியினால் அரசியலில் பிரவேசித்து உயர்ந்தவர்களேயன்றி பரம்பரை அரசியல்பின்னணிகொண்டவர்களல்ல. ஆயினும் உயர்வர்க்க அரசியல்வாதிகள் பிரேமதாசவின் முன்னால் சிரித்துப்பேசி, அவரின் பின்னால் அவரை விமர்சிப்பவர்களாகவே இருந்துள்ளனர். அத்தகைய தரப்பினர்களது பொறாமை காரணமாகப் பிரேமதாச பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது.

இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலையும் பிரேமதாசவுக்கு இருந்த நிலையை ஒத்ததே. அவருக்கு உண்மையில் விசுவாசமாக நடந்து கொள்பவர்கள் அவரது அமைச்சரவை யில் உள்ளனரா என்பது சந் தேகமே. அவரது அதிகாரத்தைக் கருதியே இன்று பலர் அவருக்குத் தாம் ஆதரவு வழங்குவதாகக் காட்டிக் கொள்கின்றனர். சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இத்தகைய நிலைப்பாடு கொண்டோரே. அன்று மகிந்தவுக்கு ஆதரவு வழங்கி அதன் மூலம் வசதிவாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டோர், இன்று மகிந்தவைப் புறம் தள்ளி மைத்திரிபால சிறிசேன பின்னால் திரள்வது அவர் வசமுள்ள அதிகாரங்கள் மீதான மோகம் காரணமாகவே. மைத்திரிபால சிறிசேன எப்போது தமது அதிகாரத்தை இழக்கிறாரோ, அந்தவேளை இவர்களெல்லாம் அவரைக் கைவிட்டு, அதிகாரம் படைத்தவர் கள் பின்னால் அணி திரள்வார்கள். இதுவொன்றும் அதிசயமானதல்ல.

இலங்கை அரசியலின் போக்கும் ஆரம்பகாலமுதல் இத்தகையதே. ஜனாதிபதி மைத்திரிபால இதனை ஓர் அளவுக்குப் புரிந்து கொண்டிருப்பதால், ஐ.தே. கட்சியுடன் நல்லிணக்கப்பாட்டுடன் நடந்து கொள்ள அவரால் முடிகிறது. இதனாலேயே இன்று ஜனாதிபதி மேற்கொள்ளும் தீர்மானங்கள் தொடர்பாக ஐ.தே.கட்சிக்காரர்களால் நேரடி அழுத்தம் மேற்கொள்ள முடிகிறது. தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகளில் கூட ஐ.தே.கட்சிக்காரர்கள் ஜனாதிபதியைப் பாதுகாக்கும் வகையிலேயே வாதம் செய்கின்றனர். மைத்திரிபால சிறிசேன எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காத விதத்திலேயே ஐ.தே.கட்சியுடன் தொடர்புகளைப்பேணி வந்துள்ளார். அந்த வகையில் தேசிய அரசு என்பது மைத்திரிபால தரப்புக்கல்லாது, ஐ.தே.கட்சிக்கே வரப்பிரசாதமாக ஆகியுள்ளது. தேசிய அரசமைக்க மைத்திரிபால முன்வந்திருக்கா விட்டால் அது ஐ.தே. கட்சிக்குப் பெரும் சவாலாக ஆகியிருக்கும். ஐ.தே. கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அரசமைத்திருந்தாலும்அது சந்திரிகா காலத்தில், 2002-2004 ஆண்டுகள்கால இடைவெளியில் அரசை நிர்வகித்த விதத்தில் சிக்கல்களையும், சிரமங்களையும் ஏற்படுத்தியிருக்கும். ஒரு சாதாரண மனிதரானபடியால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறத் தமக்கு உதவிய ஐ.தே. கட்சிக்கு நன்றிக் கடனாக, தேசிய அரசொன்றை நிறுவ மைத்திரி வாய்ப்பளித்தாலும், அது சுதந்திரக்கட்சிக்குப் பின்னடைவையே ஏற்படுத்தியது. இங்குதான் மகிந்த, மைத்திரிபால சிறிசேனவிலிருந்து வேறுபடுகிறார். மைத்திரிபாலவின் தற்போதைய நிலையில் மகிந்த இருப்பாரானால், ஐ.தே.கட்சியால் நிறைவேற்று அதிகாரத்தைத் தாம் விரும்பும் விதத்தில் செயற்படுத்துவிக்க இயலாது போயிருக்கும். அரசை முற்றுமுழுதாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மகிந்தவால் முடிந்திருக்கும். சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களின் விருப்பமும் அதுவே. அரசியல் கபடத்தனம் மிக்க ரணிலை அடக்கி வைத்து நிர்வகிக்கும் திறன் மகிந்தவுக்கு உண்டு.

சுதந்திரக்கட்சி மகிந்த தரப்பு, மைத்திரி தரப்பு எனப் பிளவுபடுவதைத் தவிர்க்க இயலாது. அதேபோன்று இந்த இரு தரப்புக்களும் ஒரு போதிலும் இணைந்து செயற்படப் போவதில்லை. அவ்விதம் இணைவதாயின், மகிந்தவுக்கு நிறைவேற்றுப் பிரதமர் பதவி வழங்கி, மைத்திரி அதிகாரமற்ற ஜனாதிபதிப் பதவியை வகிக்கத்தக்க வகையில் அரசமைப்பு திருத்தப்படவேண்டும். அவ்விதம் இடம்பெறுவதற்கான வாய்ப்பு அமைய மைத்திரிபால தரப்பினர் இடமளிக்கப் போவதில்லை. அதேவேளை சுதந்திரக் கட்சிக்குள் பிரபலத்துவம் ஈட்டத்தக்க வேளை, மைத்திரிபாலவுக்கு இன்னமும் அமையவில்லை. மற்றொரு புறம் ஐ.தே.கட்சியினரோ அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதை இலக்காகக் கொண்டே காய் நகர்த்துகின்றனர். அதற்கு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வெற்றி அவசியமானதொன்று. தற்போது கூட்டணிக்குள் நிலவும் அதிகாரப் போட்டியில் அது அவ்வளவு இலேசான ஒன்றல்ல. இத்தகைய சவால்களைச் சமாளிக்க வேண்டுமானால் மைத்திரிபால சிறிசேன, தமது ஜனாதிபதிப் பதவிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்தி நாட்டில் நல்லாட்சியை நிலைநிறுத்துவது தான் ஒரேயொருவழியாகும். அரசின் முக்கிய செயற்பாடுகள், திட்டங்களில் அவரது தீர்மானங்கள் உறுதிமிக்கவையாக அமைவதில்லை.

> இலங்கை அரசியலின் போக்கும் ஆரம்பகாலமுதல் இத்தகையதே. ஜனாதிபதி மைத்திரிபால இதனை ஓர் அளவுக்குப் புரிந்து கொண்டிருப்பதால், ஐ.தே. கட்சியுடன் நல்லிணக்கப்பாட்டுடன் நடந்துகொள்ள அவரால் முடிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தன் சுய நலத் தேவைக்காக, தன்னை முழுமையாகப் பாதுகாத்துக் கொண்டு, தனது நண்பனை அரச குற்றம் இழைக்கத் தூண்டி, நாடு விட்டு நாடு சென்று திரும்பி வந்து பால் குடிக்காத பூனைகளாகக் கடமையாற்றி, எவருடைய கண்களிலும் படாத வாறு, மேலதிகாரிகளுக்கும் தெரிந்தும் தெரியாதவாறு சமயவாதிகளாக நடமாடுகின்றனர்.
> இது தர்மமா? அதர்மமா? உங்களால் முடியுமா? இந்தியாவில், நின்றிருந்த நேரம் ஏதாவது விபத்தோ, இழப்போ, தடுப்போ ஏற்பட்டிருந்தால் குரு தப்பி விடுவார். சீடன் மாட்டிக் கொள்வார்.

## போருக்குப் பின்னரான நிர்வாக ரீதி

# மாற்றங்களும் தீர்வுகளும்

கருடன்

போருக்குப் பின்னரும், தேர்தலுக்கு முன்னரும் ஒரு சில நிர்வாகங்களில் எதேச்சாதிகாரமாகச் சில தலையீடுகளை மேற்கொண்டதுண்டு. வெறித்தனம் கொண்டதுமுண்டு. மிக்க சுதந்திரமாக வெளியில் சென்று சுபகருமங்களைக் கடமை நேரத்தில் முடித்தவிட்டு, நேரத்துக்காய் வந்து கையொப்பம் இட்டு, ஒழுங்காகச் சம்பளம் எடுத்தவர்களும் உண்டு. இவர்களுக்கு மேல் மட்டங்களில் அரசியல் செல்வாக்கும், தனிப்பட்ட செல்வாக்கும் இருந்தது. செலவு வைக்கப்படாத பணப்புழக்கமுமுண்டு. சித்திர புத்திர நாயனாரின் பதிவேட்டை வைத்துத்தான் கண்டு பிடிக்கலாம் முக்கியமாக நிதிமோசடி, நிர்வாக மோசடி, நீதி மோசடி, கதிரைமோசடி, பயண மோசடி, குடும்ப மோசடி, அதிகார மோசடி, பணய மோசடி, பக்தி மோசடி என்ற விதத்தில் பல ஊழல்களை அடுக்கிக்கொண்டே போகலாம். மேற்கூறப்பட்டவற்றுள் பயண மோசடி ஒன்றை வைத்து ஏனைய மோசடிகள் எவ்வாறு நடந்து இருந்திருக்கும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம். இது கற்பனையல்ல!

ஒரு பெரியவர். அரச ஊழியர். நிரந்தரமற்றவர். கதிரைக்குப் பாரமானவர். கதிரையைக் கைப்பற்றியவர். எது எப்படியோ அரச பொது விதிகளுக்குக் கட்டுப்பட்டவர். இவருக்கு ஒரு நண்பர், அவரும் அரச ஊழியர்! இரண்டுபேரும் சேர்ந்தால் ராஜாவும் மந்திரியும் போல, பிறகு கேட்கவா வேணும்? ராஜா பணத்தை வீசி எறிந்து எதையும் சாதிப்பார். மந்திரி அப்படிப் பணத்தை விளையாட இவர் விடமாட்டார். இப்போ மந்திரி இவர் சொன்னபடி எதற்கும் தலையாட்ட வேண்டும். இல்லாவிட்டால் மந்திரியின் குடும்பம் நாதியற்றுப் போய்விடும். குரு சிஷ்யர் என்றால் அப்படித்தானிருக்க வேண்டும். ராஜாவான குருவானவர் ஒருமுறை இந்தியாவுக்குப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது. நாட்டை விட்டு பிற நாட்டுக்குப் போவதாக இருந்தால், முதலில் தாம் சார்ந்த திணைக்கள அனுமதியைப் பெற்றேயாக வேண்டும். ராஜா பெற்றுவிட்டார். இவருக்கு ஒரு வருத்தம் என்னவென்றால், போகவர ஒரு துணைவேண்டும். இத்தருணமாய் இவரது நண்பரும் மந்திரியுமான உதவியாளர்தான் ராஜாவிடம் அகப்பட்டுக்கொண்டார். குரு சீடனை ஆட்கொள்ளும் பாங்கை இப்போது பாருங்கள். இது அரச அதிகார துஷ்பிரயோக மோசடிக்குள் வருகிறது. குரு (அரச ஊழியர்) சொல்கிறார்.

"சேர்! நீங்களும் என்னோடு இந்தியாவுக்கு வாருங்கள் அதற்கு நீங்கள் எவரிடமும் அனுமதிபெறத் தேவையில்லை. கொழும்புக்குப் போய் வருவதாக•மட்டும் (சொந்த அலுவல் என்று) சொல்லி விடுப்பு விண்ணப்பத்தைக் கொடுத்து விட்டு வாருங்கள். மிச்சத்தை நான் கவனிக்கிறேன்" என்று நண்பருக்குக் கூறி, வீட்டுக்கும், மனைவி பிள்ளைகளுக்கும் உண்மையைக்கூறாது, மொத்தத்தில் வீடு, கடமை, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், அரசு, சமூகம், தெய்வம் எல்லோரையும் ஏமாற்றி கொழும்பு மட்டுமல்ல, இந்தியா சென்று பத்து நாள்கள் தங்கியிருந்து, கோயில், குளம், படங்கள், யாவுமே பார்த்து ஒரு கரைக் கண்டு மீண்டும் நல்லபிள்ளைகளாக இலங்கை வந்து கடமையைப் பொறுப்பெடுத்துக் கொண்டனர்.

### முடியுமா?

தன் சுயநலத் தேவைக்காக, தன்னை முழுமையாகப் பாதுகாத்துக் கொண்டு, தனது நண்பனை அரச குற்றம் இழைக்கத் தூண்டி, நாடு விட்டு நாடு சென்று திரும்பி வந்து பால் குடிக்காத பூனைகளாகக் கடமையாற்றி, எவருடைய கண்களிலும் படாதவாறு, மேலதிகாரிகளுக்கும் தெரிந்தும்–தெரியாதவாறு சமயவாதிகளாக நடமாடுகின்றனர். இது தர்மமா? அதர்மமா? உங்களால் முடியுமா? இந்தியாவில், நின்றிருந்த நேரம் ஏதாவது விபத்தோ, இழப்போ, தடுப்போ ஏற்பட்டிருந்தால் குரு தப்பிவிடுவார். சீடன் மாட்டிக் கொள்வார். இந்தக் குருவுக்கு இது மட்டுமல்ல, இன்னும் பல பல வித்தைகள் செய்வது சர்வ சாதாரணமே. இத்தகு திரு விளையாடல்களுக்கு இன்னுமொரு பட்டம் கொடுத்தேயாக வேண்டும். கொடுக்காவிட்டால் கொடுக்கப்பண்ணி விடுவார். மேலும் வேறொன்று, தனக்குப் பிடிக்காதவர்களைத் தனது கையாள்களைக் கொண்டு நொறுக்கி விடவும் தயங்க மாட்டார். உங்களால் முடியுமா?

### நல்லாட்சி

தேர்தலின் பின்னர் பையப் பையச் சட்டங்கள் உயிர் பெற்றாலும், நல்லாட்சியில் போருக்குப் பின்னர் நிர்வாகங்களில் ஏற்பட்ட தொய்வுகளுக்கும், மோசடிகள், நட்டங்களுக்கும், மேலதிகாரிகளின் பாராமுகங்களுக்குமான ஒரு விசாரணைக் குழுவாவது நியமிக்கப்படுமானால், சம்பந்தப்பட்டவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஒரு பரிகாரம் அல்லது ஒரு நிவாரணமாவது கிடைக்குமே! இல்லாவிட்டால் சித்திரபுத்திரனாரின் விசாரணைக்கு முன்பதாக கதிரைகளுக்கு வாழ்வளிக்க வேண்டும். உலகிலே பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் பட்டபாட்டையும், விட்டு ஓடியதையும் இந்த உலகம் மனனம் பண்ணியே வைத்திருக்கிறது. தப்பமுடியுமா?

### தற்போது

ஒரு சில அரச நிர்வாக வேலைத்தளங்களில் கையொப்பங்கள் சரியாகப் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை சில அலுவலர்கள் வெளியே வீட்டு வேலைகளையும், பிள்ளைகளின் பள்ளிக்கூட ஏற்றி இறக்கல் வேலைகளையும் கவனித்து வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. வடமாகாணத்தில் கடமைகளையும், கதிரைகளையும் கவனிக்காமல் தலைமைகள் மௌனிக்குமாயின், யாழ்ப்பாணத்தை ஆண்டவனால்கூடக் காப்பாற்ற முடியாமல் போய்விடும்! ஐஸ் அடிக்கும் அலுவலர்களுக்கு கடமைப் பட்டியல் சரியாகப் பகிரப்படாததே மூல காரணம்! முருகா!

## இந்த அநியாயத்தை தடுத்து நிறுத்துவார் யாரோ?

கீழ் குறிக்கப்படும் குற்றச் செயலைத் தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரிகளுக்கு இதை எழுதுகின்றேன். யாழ்.மாவட்ட நீதித்துறை அதிகாரிகளே! காவல்துறைஅதிகாரிகளே! யாழ். மாவட்ட செயலக அதிகாரிகளே! வடமாகாண முதலமைச்சர் மற்றும் கடற்றொழில் கிராம அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளே!விவசாய அமைச்சர், நல்லூர்பிரதேசசபை அதிகாரிகளே! யாழ். மாவட்ட கரையோர பாதுகாப்பு அதிகாரிகளே! கீழ் குறிக்கப்படும் குற்றச் செயலை தடுத்து நிறுத்த எவரால் முடியுமோ? தயவு செய்து இந்தக்குற்றச்செயலை தடுத்து நிறுத்தி மக் களுக்கு பாதுகாப்பை தாருங்கள். இந்தச் செய்தி இரண்டு தரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டும், சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை வேதனையுடன் எழுதுகிறேன்.

யாழ்.மாவட்ட நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 4 கிராமங்கள், மணியம்தோட்டம்,நாவலடி, பெரியதோட்டம்,உதயபுரம் என்பவையாகும். இந்தக் கிராமங்களைச் சேர்ந்த கடற்கரை அருகாமையில் சுமார் 50ஏக்கர் காணியில் களவாக மண் அகழ்வு நடைபெறுகின்றது. இது கடல் மட்டத்திலிருந்து 10அடி ஆழம் வரை எடுக்கப்படுகின்றது.கடலின் கரையில் இருந்து 25மீற்றர் தூரத்தில் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

இரவு, பகல் என்றில்லாமல், தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதற்குள்கடல்நீர் உட்புகுந்தால் மேற்குறிப்பிட்ட கிராமங்களின் கிணறுகள் யாவும் உவர்நீராய் மாறும். இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களாகிய நாங்கள் பாதிக்கப்படுவோம். இதைப் பொலிஸாருக்கு அறிவித்தால், அவர்கள் வருவதை மண் ஏற்றுபவர்களுக்கு தெரிவிப்பதற்கென அவர்களது ஆள்கள் பல இடங்களில் காவல் இருப்பதால், உடனடியாக மண் ஏற்றுபவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்று விடுகின்றனர். சில வேளைகளில் மண்ணை வீதியில் பறித்துவிட்டுச் செல்கின்றனர். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து பார்வை இடலாம். இந்தக் குற்றச்செயலால் வீதியின் அருகில் குடியிருப்பவர்கள் குறிப்பாக, வயதானவர்கள் இரவில் தூங்க முடியாமல் அவதிப்படுகின்றனர். தயவு செய்து இந்தக் குற்றச்செயலை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தச் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம். ஊடகத் துறையினரும் இதைப்பார் வையிடலாம்.

நலன்விரும்பி.

## பேராற்றுப் பாலம் உரிய திருத்தத்துக்கு உட்படுத்தப்படுமா?

மாரிகால வெள்ளம் ஆரம்பிக்கும் முன்னர் எங்கள் போக்குவரத்துக்கு இருக்கும் ஒரேயொரு பாலமான பேராற்றுப்பாலத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்தில் எடுத்து திருத்தித் தருவார்களா? 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் முத்துஐயன்கட்டு இடதுகரையையும் வலதுகரையையும் இணைக்கும் இந்தப் பாலம் திருத்தப்பட்டது. அது திருத்தப்படவில்லை, திருத்திக் கெடுக்கப்பட்டது என்றே செல்லவேண்டும். பாலம் திருத்தப்பட்டதற்கு முன்னர், எங்களில் எவரும் மழை வெள்ளத்தில் இடம்பெயர்ந்ததே இல்லை. ஆனால் பாலம் திருத்தப்பட்டதன் பிறகு ஒவ்வொரு மாரிகாலத்தில் ஏற்படும் வெள்ளத்தால் இடம்பெயரவேண்டிய நிலை வந்துள்ளது. வெள்ளத்தோடு வரும் இலைகுலைகள், மரம் என்பவை பாலத்துக்குக் கீழ் அடைவதால் வெள்ளம் பாய்ந்தோட முடியாது மேவி குடிமனைகளுக்குள் வருகின்றது.

அதுமட்டுமன்றி வெள்ளம் பாலத்தை மேவிப் பாயும்போது 650க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வைத்திய தேவைக்கோ பிற தேவைக்கோ செல்வதாயின் பல கிலோமீற்றர் சுற்றியே பயணிக்க வேண்டி யுள்ளது.

எதிர்காலத்தில் இந்த இடர்கள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களம் உரிய கவனம் செலுத்தவேண்டும். தவறின் பெரும் மனித அவலத்தைத் தடுக்க முடியாது.

முத்துஐயன்கட்டு இடதுகரை மா. குமார்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook :
Twitter : U

# பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில் ஜேர்மனி, சுவீடன் இறுதியாட்டத்தில்

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் ஜேர்மனி, சுவீடன் அணிகள் இறுதிக்குத் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதியில் ஜேர்மனியை எதிர்த்து கனடா மோதியது. முதல் பாதியில் 1:0 என்று முன்னிலை வகித்தது ஜேர்மனி. இரண்டாம் பாதியிலும் கனடாவால் பதிலடி கொடுக்க இயலவில்லை. மாறாக ஜேர்மனியின் சார்பாகப் பிறிதொரு கோல் பதிவாக, முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் பிரேஸில், சுவீடன் அணிகள் மோதின. கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் எந்தவொரு அணியும் ஏக ஆதிக்கம் செலுத்தவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சுவீடன் இறுதிக்குத் தகுதி பெற்றது.

கனடா, பிரான்ஸை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும், ஜேர்மனி, சீனாவை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும், சுவீடன், அமெரிக்காவை 1:1 என்று சமன் செய்தும், பிரேஸில், ஆஸ்திரேலியாவை 0:0 என்று சமன் செய்தும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன. (ம-ரி4)






# ஆஸிக்கு அதிர்ச்சி வைத்

# கவனித்து அனுப்பியது சேர்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றது சேர்பியா.

சேர்பியாவுடன் ஒப்பிடுகையில் ஆஸ்திரேலிய அணி மிகவும் பலம்வாய்ந்த அணியாகவே கருதப்படுகிறது. இந்த இரு அணிகளும் நேற்றுத் தமது காலிறுதியில் மோதின. ஆஸ்திரேலியா வெற்றிபெறும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருந்தாலும், சேர்பியாவும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தியது.

ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் மேலும் ஆதிக்கத்தைச் செலுத்திய அந்த அணி 73:71 என்ற புள்ளிகள் அடிப்படையில்போராடிவெற்றிபெற்று, ஆ
அதிர்ச்சித் தோல்வியை வழங்கியது.

ஏனைய காலிறுதி ஆட்டங்களில் பிரா
68:63 என்ற புள்ளிகள் அடிப்படையில
ஜப்பானை 110:64 என்ற புள்ளிகள் அ
ஸ்பெய்ன், துருக்கியை 64:62 எ
அடிப்படையிலும் வெற்றிபெற்று அரை
பெற்றன.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதி
ஸ்பெய்னை எதிர்த்து சேர்பியாவும், நாளை
இரண்டாவது அரையிறுதியில் அமெரிக்
பிரான்ஸும் மோதவுள்ளன.

# 10 கிலோ மீற்றர் நீச்சலில் நெதர்லாந்து தங்கம் வென்றது



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற 10 கிலோ மீற்றர் நீச்சல் போட்டியில் நெதர்லாந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

நெதர்லாந்தின் சா[illegible]களமிறங்கிய [illegible] ஒருமணித்தியாலம், 52 நிமிடங்கள், 58 செக்கன்களில் இலக்கை அடைந்து, தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். கிரீஸ் நாட்டின் ஸ்பைடன் 52 நிமிடங்கள், 58 செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், பிரான்ஸின் மார்க் அன்ரனி ஒலிவர் 53 நிமிடங்கள், 02 செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-ரி4)

# உலக ச

# அமெ. ஜ

அமெரிக்க ஜிம்னா
சீமொன் பைல்ஸ் த
ஒலிம்பிக் தங்கத்
சாதனையைச் சமப்
நேற்று நடைபெற்
(உடற்பயிற்சி) போட்
தமாக 15.966 புள்

# இது

# பதக

அமெரிக்க நீச்ச
மைக்கல் பெல்ப்
இலங்கை மதி
கிட்டத்தட்ட 80
ரூபாக்களை வா
மாக அறவிட்டு
ஒலிம்பிக் தொ
நடத்திவரும் ரி
ஜெனிரோ நகரம்
அமெரிக்க ஒலி
சம்மேளனம்,
ஒலிம்பிக் தொ
பதக்கம் வெல்லு
வொரு வீரர்,
கனைகளுக்கு
தொகையான
தொகையை வ
வருகிறது. தங்க
கம் வெல்லும் வீ
25 ஆயிரம் அ

# விபத்தில் சிக்கியும் தங்கம் வென்றார் இத்தாலியின் சைக்கிள் பந்தய வீரர்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான சைக்கிள் பந்தயத்தில், இத்தாலி நாட்டு வீரர் விபத்தில் சிக்கிய போதிலும், அதிலிருந்து மீண்டு தங்கம் வென்று சாதித்துள்ளார்.

வீரர்கள் மிக விரைவாகச் சென்றுகொண்டிருந்த போது அவர்களிடையே விபத்து ஏற்பட்டது. படுகாயமடைந்த தென்கொரிய வீரர் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நான்கு வீரர்கள் நிலத்தில் வீழ்ந்ததில் சிராய்ப்புக் காயங்களுக்கு ஆளாகினர். இவர்களில் இத்தாலி வீரர் எலியா ஸ்வானியும் ஒருவர். அவரது பயணம் சில செக்கன்கள் ஸ்தம்பித்துப் போனலும், அதிலிருந்து மீண்டு மீண்டும் தனது பந்தயத்தைத் தொடர்ந்து தங்கம் வென்றார்.

விபத்துக்குக் காரணமாக இருந்த பிரிட்டனின் வீரர் மார்க் கெவண்டிஸ், தனது தவறுக்காக மக்களிடமும் சக வீரர்களிடமும் மன்னிப்புக் கேட்டார். (ம-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

acebook : UTHAYAN.PRINT
witter : UTHAYANPRINT



# ஒலிம்பிக் கனவைக் கைவிட்டு சக வீராங்கனைக்கு உதவியவர்

## ரியோவில் ஓர் நெகிழ்ச்சிச் சம்பவம்




ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 5,000 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தின்போது காயமடைந்த அமெரிக்க வீராங்கனைக்கு நியூசிலாந்து வீராங்கனையொருவர் தனது போட்டி மனப்பாண்மையை கைவிட்டு, உடனடியாக உதவியமை நெகிழவைக்கும் சம்பவமாகப் பதிவாகியது.

ஆட்டம் ஆரம்பித்து சில செக்கன்களில் ஓடுபாதை மாறும்போது வீராங்கனைகள் எதிர்பாராத விதமாக மோதிக்கொண்டனர். இதில் அமெரிக்க வீராங்கனை டி அக்கோடினா காயமடைந்து கீழே விழுந்தார். ஏனைய போட்டியாளர்கள் தமது இலக்கை நோக்கி விரைந்து கொண்டிருந்தபோதிலும், நியூசிலாந்து வீராங்கனை நிக்கி ஹம்ளின் உடனடியாக அவருக்கு உதவிசெய்ய முன்வந்தார். அவர் அமெரிக்க வீராங்கனையை தூக்கி இலக்கை அடைய உந்துதலைக் கொடுத்தார்.

சில மீற்றர் தூரம் சென்றதும் அமெரிக்க வீராங்கனை மீண்டும் விழுந்தார். ஹம்ளின் மீண்டும் உதவி செய்து, அவர் இலக்கை அடையக் காரணமாக இருந்தார். இவர்கள் இருவரும் தாம் விரைந்து கொண்டிருந்த கதியில் தொடர்ந்து சென்றிருந்தால், மூன்றாவது, நான்காவது (மூன்றாவது அமெரிக்க வீராங்கனை, நான்காவது நியூசிலாந்து வீராங்கனை) இடங்களைப் பிடித்திருக்க முடியும் என்று–சொல்லப்படுகிறது. ஆனால் குறித்த விபத்தால் அவர்கள் கடைசியாகவும் (அமெரிக்கா), கடைசிக்கு முதலிடத்திலுமே (நியூசிலாந்து) வந்தனர்.

இலக்கை அடைந்த பின்னர் அமெரிக்க வீராங்கனை அக்கோடினா தொடர்ந்து நடக்க முடியாமல் சக்கர நாற்காலியில் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போதும் நியூசிலாந்து வீராங்கனை அவர் அருகில் சென்று ஆறுதல் வழங்கினார். இந்தச் சம்பவம் ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்றைய தினம் பதிவான ஓர் நெகிழ்ச்சிச் சம்பவமாக அமைந்தது. (ம–ரி4)

## முப்பாய்ச்சலில் அமெ. வேட்டை

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் தங்கம், வெள்ளி என இரு பதக்கங்களைக் கைப்பற்றியது அமெரிக்கா.

அமெரிக்காவின் சார்பாகக் களமிறங்கிய கிறிஸ்ரியன் ரெய்லர் 17 மீற்றர் 86 சென்ரிமீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கம் வென்றார். வில் கெய்ல் 17 மீற்றர் 76 சென்ரிமீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், சீனாவின் டொங் பின் 17 மீற்றர் 58 சென்ரிமீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம)

## உயரம் பாய்தலில் கனடாவுக்குத் தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கனடாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

கனடாவின் சார்பாகக் களமிறங்கிய டிரக் ரொயின் 2 மீற்றர் 38 சென்ரி மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து, தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். கட்டாரின் பார்ஸ்ஹிம் 2 மீற்றர் 36 சென்ரி மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், உக்ரைன் வீரர் பொக்டான் 2 மீற்றர் 33 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம–ரி4)





## ...த்தியம்
## ...சர்பியா

...ற்று, ஆஸ்திரேலியாவுக்கு ...பது.
...ல் பிரான்ஸ், கனடாவை ...படையிலும், அமெரிக்கா, ...ரிகள் அடிப்படையிலும், ...:62 என்ற புள்ளிகள் ... அரையிறுதிக்குத் தகுதி

...யிறுதி ஆட்டமொன்றில் ..., நாளை நடைபெறவுள்ள ... அமெரிக்காவை எதிர்த்து (ம)


## ...க சாதனையைச் சமன்செய்த ...ம. ஜிம்னாஸ்டிக் வீராங்கனை

...ஜிம்னாஸ்டிக் வீராங்கனை ...பல்ஸ் தனது நான்காவது ...தங்கத்தை வென்று, உலக ...யைச் சமப்படுத்தியுள்ளார்.
...டைபெற்ற ஜிம்னாஸ்டிக் ...சி) போட்டியில் ஒட்டுமொத் ...966 புள்ளிகளைப் பெற்று தங்கத்தை வென்றார். அமெரிக்க வீராங்கனை வெள்ளிப்பதக்கத்தையும், பிரிட்டன் வீராங்கனை வெண் கலப் பதக்கத்தையும் வென்றனர். இதன் மூலம் ஓர் ஒலிம்பிக் தொடரில் அதிகதங்கப் பதக்கங்களை வென்ற சாதனையை பைல்ஸ் சமன் செய்துள்ளார். (ம–ரி4)

## ...துக்குத்தான் நாங்கள் ...தக்கமே வெல்லுறதில்ல

...க்க நீச்சல் வீரர் ...ல் பெல்ப்ஸுக்கு ...கை மதிப்பில் ...ட்ட 80 லட்சம் ...ளை வரிப்பண ...றவிட்டுள்ளது ...க் தொடரை ...ரும் ரியோ டி ...ரா நகரம்.
...க்க ஒலிம்பிக் ...னம், ரியோ ...க் தொடரில் ... வெல்லும் ஒவ் ... வீரர், வீராங் ...ளுக்கு பெரும் ...யான பணத் ...கயை வழங்கி ...து. தங்கப் பதக் ...ல்லும் வீரருக்கு ...யிரம் அமெரிக்க டொலர்களும், வெள்ளிப் பதக்கம் வெல்லும் வீரருக்கு 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களும், வெண்கலப் பதக்கம் வெல்லும் வீரருக்கு 10 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும் பரிசாக வழங்கி வருகிறது. இதனால் ஒலிம்பிக்கை நடத்தும் நகரான ரியோ டி ஜெனிரோ நகரம் வெற்றி வரி என்ற அடிப்படையில் பெல்ப்ஸுக்கு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 80 லட்சம் ரூபாக்களை வரிப்பணமாக அறவிட்டுள்ளது.


இந்தத் தொகை பெல்ப்ஸுக்கு ஒரு விடயமே [illegible]. அவரின் வருடாந்த வருமானம் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 800 கோடிகள். (ம–ரி4)



## பிரான்ஸ் வீரர் தகுதி நீக்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தடைதாண்டல் போட்டியில் பிரான்ஸ் வீரர் விதிமுறைகளுக்கு முரணாகப் போட்டியை ஆரம்பித்ததால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டார்.

வெல்கம் பெலோசியன் என்ற வீரரே அவ்வாறு தகுதி நீக்கம் செய்யப்பட்டவராவார். தகுதி நீக்கம் செய்யப்பட்டதும், அவர் களத்தில் வீழ்ந்து அழத் தொடங்கினார். ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்ல கடந்த நான்கு வருடமாகக் கடும் முயற்சிகளை எடுத்தேன். நான் செய்த சிறு தவறால் எனது நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்ய இயலாமல் போனது என பெலோசியன் தெரிவித்தார். (ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? துலாம்

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை சுவுய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



## சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள் வரை

இடமாற்றம், வெளியூர் மாற்றம், வீடு மாற்றம், வாகன மாற்றம், உத்தியோக மாற்றம் என ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டே இருக்கும்.
3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குரு இருப்பதால் சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகள் சாதகமாகும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். நீண்ட நாளைய கடன் வசூலாகும். பால்ய நண்பர்களால் பணவரவு பெருக வழிபிறக்கும்.

**குரு பார்வை கொடுக்கும் பலன்கள்!**
நவக்கிரகத்தில் நன்மை தரும் கிரகம் என்று வர்ணிக்கப்படும் குரு, உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். அங்கிருந்து கொண்டு உங்கள் ராசிக்கு 4,6,8 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே அந்த இடங்கள் புனிதமடைகின்றன. அந்தந்த இடங்களுக்கு ஆதிபத்யங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெறும். விதியை மாற்றியமைக்கும் ஆற்றல் வியாழனின் பார்வைக்கு உண்டு.
அதன்படி 4,6,8 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். கட்டிய வீட்டைப் பராமரிக்கும் எண்ணமும் மேலோங்கும். தாய்வழி ஆதரவு பெருகும். பழைய கடன்களை கொடுத்து மகிழ்வீர்கள்.
6ம் இடத்தைக் குரு பார்ப்பதால், உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் அகலும். பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். பரபரப்பாகச் செயற்படுவீர்கள். எதிரிகளின் தொல்லை குறையும். இனி உங்கள் முன்னேற்றத்துக்கு இடையூறு ஏற்படாது. கடன் தலைக்கு மேல் இருக்கிறதே, சொத்துக்களை விற்று அடைக்க வேண்டுமோ? என்று நினைத்தவர்கள், வேறு வழிகளில் பணம் வந்து கடனைக் கொடுத்து நிவர்த்தி செய்வீர்கள். அது நண்பர்களின் உதவியாகவும் இருக்கலாம், அல்லது நல்லவர்களின் உதவியாகவும் இருக்கலாம்.
8ம் இடத்தை குரு பார்ப்பதால், இல்லத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். காசி முதல் இராமேஸ்வரம் வரை செல்லும் புனிதப் பயணங்கள் உருவாகும். பணம் சம்பாதிக்க வெளிநாடு செல்லும் யோகம் உருவாகும். வாகனங்களை மாற்ற முன்வருவீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குழந்தைகளின் சீர்வரிசைச் சாமான்களை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள்.
குரு, சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): எதிர்பார்த்த இடத்திலிருந்து தொகை வந்து சேரும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். கலகம் விளைவித்தவர்கள் விலகுவர். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகாரத்துவ யோகம் உண்டு. கடிதம் கனிந்த தகவலைக் கொண்டு வந்து சேர்க்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.
குரு, சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல மாற்றங்கள் வரும். நீங்கள் தொடங்கும் தொழிலுக்காக, கூட்டாளிகள் பணம் கொடுத்து உதவுவார்கள். புதிய பாதை புலப்படும்.

*(தொடரும்)*

---

லக்ஸ்மன்

# விவசாயம் + மீன்வளம் + சுற்றுலா = வெட்டுக்கழி

விவசாயம், மீன்வளம், சுற்றுலாத்துறை இந்த மூன்று விடயங்களிலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது நெடுந்தீவின் மிகப் பெரிய நீர்த்தேக்கமான வெட்டுக்கழி. ஆரம்பத்தில் நெடுந்தீவின் விவசாய அபிவிருத்திக்குக் கை கொடுத்த இந்த நீர்த்தேக்கம் பின்னாளில் மீன்பிடிக்கும், இன்றுவரை சுற்றுலாத்துறைக்கும் உதவி வருகிறது. நெடுந்தீவில் நெல்வளம் செழிக்க, கோதுமையும் தலைகாட்ட இந்த நீர்த் தேக்கமும் ஏனைய சிறிய 80 குளங்களும் விவசாயிகளுக்கு உதவியதுடன் ஏனைய சிறு தானியப் பயிர்களின் விளைச்சலுக்கும் காரணமாக இருந்துள்ளன. 1814ஆம் ஆண்டு காலப் பகுதிவரை நெடுந்தீவு ஓர் உன்னதமான விவசாயப் பிரதேசமாக இருந்துள்ளது என்பது வரலாறு.

சுமார் 2 ½ கிலோமீற்றர்வரை சுற்றளவைக் கொண்ட இந்தக் குளத்தை வெட்டியவன் சோழப் பேரரசின் ஒரு மன்னனான குளக்கோட்டன் எனச் சொல்லப்படுகின்றது. வெட்டுக்கழியின் இன்றைய வயது 1575 ஆகும். குளக்கோட்டனின் வருகை சாலிவாகன சகாப்தம் 358 வருடமாகும். அதாவது கி.பி. 436 ஆம் ஆண்டு இந்த நீர்த்தேக்கம் மட்டுமன்றி, ஏனைய குளங்களும் உவர்த் தன்மையடைந்தன. 1814இல் ஏற்பட்ட இயற்கை இடரும் அதனால் கடல் நீர் நாலாதிசைகளிலும் தீவின் உள்ளே புகுந்து கொண்டமையும் இதற்கான காரணமாகும். நெடுந்தீவின் நிர்வாகியாக இருந்த எட்வேட் நோளன் தனது உல்லாசமான பொழுதுபோக்குக்காக வெட்டுக்கழியுடன் கடல்நீரை இணைத்துத் தோண்டிய கால்வாய் வெட்டுக்கழி பிரதேசத்தை அண்டிய விவசாய நிலங்களை உவர்த்தன்மை கொண்டதாக மாற்றியமைத்தது. நெடுந்தீவு வைத்திய சாலைக்கு மேற்குப்புறத்தில் உள்ள இந்தக் கால்வாய் இப்போதும் நோளன் கால்வாய் என அழைக்கப்படுகின்றது. கடல் நீருடன் கலந்த வெட்டுக்கழியை நீர்வளம் உவராக மாற்ற கால்வாயூடாக மீன்கள் கழிக்குள் புகுந்து கொள்ளத் தொடங்கின. மாரிகாலங்களில் மழைநீரும் கடல் நீரும் கலந்து கொள்ளும் இந்தக் காலங்களில் அதிகமான மீன்களும் இறால்களும் இங்கே துள்ளி விளையாட வெட்டுக்கழி உள்ளூரில் காணப்படும் பிரதான மீன்பிடித்தளமாகவும் மாறி விடுகிறது. கழியின் நீர் மட்டம் படிப்படியாகக் குறைந்ததும் வீச்சுவலைகள் சகிதமும் கரப்புக் கூடு தென்னங்குத்திகளையே பயன்படுத்தி பாய்ச்சு மீன்பிடித்தல் என்பனவும் இடம் பெறும். இங்கு





மீன்பிடிப்பதை வெட்டுக்கழியின் சுற்றாடலை அண்டிய மக்களே ஓர் உபதொழில் போன்று மேற்கொள்வார்கள். 1954 தொடக்கம் 1964ஆம் ஆண்டு வரை மிகக் கூடுதலாக மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. கடல் மீன்களை விட மிகவும் சுவையான இவற்றுக்கு அப்போது நல்ல கிராக்கி இருந்துள்ளது. மதியவேளைக்குப் பின்னரே இந்த மீன்கள் பிரதான வீதியோரமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். கடலில் பிடித்து வரப்படும் சிறயா மீன்களைவிட வெட்டுக்கழியில் பிடிக்கப்படும் இந்த ரக மீன்கள் ருசியானவை என மக்கள் கூறுவதுண்டு. மீன்கள் தவிர இறால் வகைகளும் இங்கே பிடிக்கப்பட்டன. ஆறு அங்குலத்துக்கு அதிகமான நீளம் கொண்டாதாகவே இவை காணப்பட்டன. இவை மெல்ல மெல்ல அருகிப்போக கோடை காலங்களில் சொட்டு நீர் கூட, இன்றிக் கடும் வறட்சிக்குள் இக்கழி சிக்கிக்கொள்ளும். சோழகக் காற்றுக் காலங்களில் சுற்றாடலில் உள்ள மக்களுக்கு பல அசௌகரியங்களும் ஏற்படுத்துகின்றன. புழுதிப் புயலாக வீசும் காற்றினால் மக்கள் குறிப்பிட்ட தூரத்துக்குப் பயணிப்பது தொல்லைகள் நிறைந்ததாகின்றது. வீடுகளில் உள்ள மக்கள் கூட சிரமங்களை எதிர்கொள்வர். இது மட்டுமன்றி நயினாதீவு, அனலைதீவு மற்றும் தென் பகுதிகளில் உள்ள [illegible] ணால் அவை வெள்ளை நிறத்தோற்றம் கொண்டதாகவும் மாற்றி விடுகின்றன.
இதிலிருந்து மக்களைப் பாதுகாக்க வெட்டுக்கழியை ஆழப்படுத்தல் வேண்டும் என 1954 இல் ஆலோசிக்கப்பட்ட போது பின்னர் அது கிடப்பில் போடப்பட்டு விட்டது.
1998இல் மீண்டும் இதனை நன்னீர்த் திட்டமாக மாற்றியமைக்கவும் நன்னீர் வளர்ப்பை முன்னெடுக்கவும் நெடுந்தீவில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கருத்தரங்கில் ஆராயப்பட்டது. இதன்போது அதில் கலந்துகொண்ட முன்னாள் யாழ். மாவட்டச் செயலர் எஸ். சண்முகநாதன் வெட்டுக்கழியை ஆழமாக்குவது உவர்த் தன்மையைப் போக்குவதற்கு மட்டும் அல்ல கடலுணவுகளான மீன், இறால் போன்றவைகளை வளர்ப்பதற்கு வாய்ப்பாகவும் இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார்.
தற்சமயம் உவர்தன்மையை நீக்கும் பொருட்டு இதனைச் சுற்றிப் பெரிய அணைக்கட்டு போடப்பட்டுள்ளது. இதனை ஆழப்படுத்துவது சாத்தியமற்றது. புவியியல் ரீதியில் இதனை ஆழப்படுத்தும் பட்சத்தில் மீண்டும் அது உவர்த்தன்மை கொண்டதாக மாறலாம். இந்தப் பகுதிகளைச் சேர்ந்த குளங்களின் கீழ் உவர் நீர் காணப்படுவதாகவும் புவியியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். எனினும் நன்னீர் மீன் வளர்ப்புத்திட்டத்தை ஆலோசனைகளுக்கமைய செயற்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தால் அதன் மூலம் மக்கள் பயன்பெற முடியும்.
விவசாயம், மீன்வளம் மட்டுமன்றிச் சுற்றுலாத்துறையிலும் அது முக்கியத்துவம் பெறுகின்றது. வெளிநாடுகளைச் சேர்ந்த பறவை இனங்கள் மாரிகாலத்தில் இங்கே நிறைய வருகின்றன. அவை உல்லாசப் பயணிகளை வெகுவாகக் கவர்கின்றன. குதிரைகளை மட்டுமன்றி இந்தப் பறவைக் கூட்டங்கள் உல்லாசமாக நீந்திக் களிப்பதையும் பார்த்து மகிழ்வதற்கென்றே கடந்த காலங்களில் உல்லாசப் பயணிகள் பெருமளவில் வருவதுண்டு. மாரிகாலங்களில் மிக அழகாகத் தென்படும் தீவும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் தங்கி நிற்கக்கூடிய வாடிவீட்டு வசதியும் அப்போது இருந்துள்ளதும் இதற்கான பிரதான காரணமாகும். வெட்டுக்கழியைச் சுற்றி மரங்களை நடுகை செய்யவும் பறவைகள் தங்கிக்கொள்ளக்கூடியதாக சிறிய மரங்களைக்கழியின் உள்ளே நடுவதற்கும் அந்தப் பகுதியை பறவைகள் சரணாலயமாக மாற்றியமைப்பதற்கும் திட்டம் வகுக்கப்பட்டது. எனினும் எல்லாமே கைவிடப்பட்டதுபோல் தெரிகின்றது.
வெட்டுக்கழி பிரதேசத்தின் முக்கியத்துவம் உணரப்படவேண்டும். அதனை பயன்படுத்தக்கூடியதான திட்டங்களை முன்னெடுப்பதனூடாக உல்லாசப் பயணத் துறையை விரிவுபடுத்தவும் முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்களைத் தூர விலக்கிவிடும் சீரான உடற்பயிற்சி

– கு.கணேசன்

சென்ற வாரம் உலக அளவில் மொழி வித்தியாசமின்றி எல்லா தினசரிகளிலும் வந்த செய்தியின் சுருக்கம் இதுதான்: சர்வதேச அளவில் முறையாக உடற்பயிற்சி செய்யாததால் ஆண்டுக்கு 50 லட்சம் பேர் சாவடைகின்றனர்.

சமீபத்தில் சிட்னி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மெலடிடிங் தலைமையில் 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்துள்ளனர். இதில், உடற்பயிற்சி செய்யாததால் இதய நோய், பக்கவாதம், நீரிழிவு, மார்பகப் புற்றுநோய், குடல் புற்றுநோய் ஆகிய ஐந்து முக்கிய நோய்களால் பாதிக்கப்பட்டு, வருடத்தில் சுமார் 50 லட்சம் பேர் இறப்பதாகத் தெரிய வந்துள்ளது. இவர்களது ஆராய்ச்சி முடிவு திலான்செட் மருத்துவ இதழில் வெளி வந்துள்ளது.

இது குறித்து ஆய்வுக் குழுவில் இடம்பெற்ற பேராசிரியர் உல்ப் எக்லண்ட், இயந்திரகதியிலான வாழ்க்கைச் சூழலில், உடலுழைப்பு குறைந்துவிட்டது. உணவுமுறையும் மாறிவிட்டது. இயற்கை உணவுகள் நம்மைவிட்டு விலகிவிட்டன. அந்த இடத்தைச் செயற்கை உணவுகளும், பதப்படுத்தப்பட்ட உணவுகளும் ஆக்கிரமித்துக்கொண்டன. நவீன தொழில்நுட்ப வசதிகளால், ஒரே இடத்தில் அமர்ந்து பணிசெய்வது அதிகரித்துவிட்டது. இதனால், இளமையிலேயே உடற்பருமன், நீரிழிவு, இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, பக்கவாதம் என்று நோய்களின் வரிசை நீள்கிறது. இவற்றின் சிகிச்சைக்காக கோடிக் கணக்கில் செலவாவதுடன், உற்பத்தித் திறனும் பாதிக்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

**அமர்ந்தே இருப்பது ஆபத்து!**

புகைபிடிப்பது, உடற்பருமன், இரத்தக் கொதிப்பு ஆகியவைதான் இதய நோய்க்கு முக்கியக் காரணங்களாக உலக சுகாதார நிறுவனம் இதுவரை சொல்லி வந்தது. இப்போது இந்தப் பட்டியலில் குறைந்த உடலியக்கமும் (Physical Inactivity) சேர்ந்துள்ளது.

"நான் புகைபிடிப்பதில்லை; எனக்குக் கொழுப்பு இல்லை; உடல் எடை சரியாகத்தான் இருக்கிறது. ஆகவே, எனக்கு மாரடைப்பு வராது என இறுமாப்புடன் இருக்காதீர்கள். நீங்கள் ஒரே இடத்தில் 8 மணி நேரம் அமர்ந்து வேலை செய்பவராக இருந்தால் அல்லது தினமும் 5 மணி நேரம் தொடர்ந்து டிவி பார்ப்பவராக இருந்தால், புகைப்பதால் வரும் மாரடைப்பைப்போல் 10 மடங்கு வாய்ப்பு உள்ளது" என்று எச்சரிக்கிறார் உல்ப் எக்லண்ட்.

குழந்தைகளைச் சாப்பிட வைக்கவும், குறும்பு செய்யாமல் இருக்கவும் டிவி அல்லது யூடியூபுக்கு முன்னால் உட்கார வைக்கிறோம். இடைவிடாமல் அவர்கள் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். இதனால் ஏற்படும் பாதிப்புக்களை நாம் கருத்தில்கொள்வதே இல்லை. இளம் வயதிலேயே நீரிழிவு வருவதற்கு இன்சுலின் எதிர்ப்புத் தன்மை உடலில் உண்டாவதுதான் முக்கியக் காரணம். உடற்பயிற்சி இல்லாத உடலில், இது உடனடியாக ஒட்டிக்கொள்ளும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. அதேசமயம், நடைப் பயிற்சியால் இந்த ஆபத்துக்களைத் தவிர்க்கலாம். டென்மார்க், ஸ்கான்டினேவியா போன்ற நாடுகளில் பெரும்பாலானோர் நடந்தும் சைக்கிளிலும் வேலைக்குச் செல்கின்றனர். இவர்களுக்கு இந்த மாதிரியான பாதிப்புகள் குறைவாகவே காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். தினமும் காலையில் நடந்தால் போதும். வாரத்துக்கு 150 நிமிடங்கள் நடைப் பயிற்சி என்பதுகூடச் சரியாகாது. இப்போதுள்ள வாழ்க்கை முறைக்கு, கண்டிப்பாக ஒரு மணி நேரம் நடக்க வேண்டும்–என்கின்றனர்.

> "நடைப் பயிற்சி செய்யும்போது என்டார் பின் எனும் ஹார் மோன் சுரக்கிறது. இது மன அழுத்தத்தைக் குறைத்து, மன அமைதிக்கு வழிசெய்கிறது. நாள் முழுவதும் உற்சாகமாக உழைப்பதற்கு இது உதவுகிறது. தினமும் 8 மணி நேரம் வேலைக்கு ஒதுக்கு வதைப் போல் நடைப் பயிற்சிக்கும் ஒரு மணி நேரம் ஒதுக்குங்கள். மாலை நேரத்தில் குழந்தைகளை விளையாட விடுங்கள். இளம் வயது நீரிழிவு, மாரடைப்பு உள் ளிட்ட பெரும்பாலான நோய்களிலிருந்து தப்பி விடலாம்!

**நீரிழிவு கட்டுப்படும்**

நீரிழிவு நோயாளிகளின் தசைகளில் சோம்பலுடன் சுருண்டு கிடக்கும் மெல்லிய குருதிக் குழாய்கள், நடைப்பயிற்சியின்போது பலகி.மீ. அளவுக்கு விரிந்து கொடுக்கின்றன. புதிய குருதிக் குழாய்கள் ஏராளமாகத் தோன்றுகின்றன. இதனால், தசைகளில் இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. குருதியில் மிகுந்திருக்கும் சர்க்கரையைப் பயன்படுத்த இப்போது அதிக இடம் கிடைக்கிறது. இதன் மூலம் குருதிச் சர்க்கரை குறைகிறது. டைப் 2 நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இன்சுலின் தேவையான அளவுக்குச் சுரக்காது. அப்படியே சுரந்தாலும், அது முழுவதுமாக வேலை செய்யாது. இன்சுலினை ஏற்று, சர்க்கரையைப் பயன்படுத்தி சக்தி தருவதற்கு, இவர்கள் உடலில் இன்சுலின் ஏற்பான்கள் தயாரில்லை. அதேவேளையில், இன்சுலின் ஏற்பான்கள் முழு ஒத்துழைப்பு கொடுத்தால், இந்த நிலைமையைச் சரி செய்துவிடலாம். இதற்கு நடைப் பயிற்சிதான் உதவ முடியும். தினமும் நடைப் பயிற்சி செய்யும்போது, உடலில் செயற்படாமலிருக்கும் இன்சுலின் ஏற்பான்கள் தூண்டப்படுவதால், மீண்டும் அவை உத்வேகத்துடன் செயற்படத் தொடங்குகின்றன. இதனால், இதுவரை பயன்படாமல் இருந்த இன்சுலின், இந்தஏற்பான்களுடன் இணைந்து, குருதிச் சர்க்கரையைக் குறைத்து, நீரிழிவைக் கட்டுப்படுத்துகிறது.

**மாரடைப்பு தடுக்கப்படும்**

குருதிக் குழாய்களின் மீள்திறனை நடைப் பயிற்சி அதிகப்படுத்துவதால், இரத்தக் கொதிப்பு கட்டுப்படுகிறது. வேகமாக நடக்கும்போது இதயத் துடிப்பு அதிகரிப்பதால், இதயத் திசுக்களுக்கு குருதி ஓட்டம் அதிகரிக்கிறது. நடைப் பயிற்சி இதயத்துக்குத் தீமை செய்கின்ற எல்.டி.எல். கொலஸ்டிராலைக் குறைத்து, நன்மை செய்கின்ற ஹெச்.டி.எல். கொலஸ்ரோலை அதிகப்படுத்துகிறது. குருதிக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. இதனால் மாரடைப்பும் பக்கவாதமும் தடுக்கப்படுகின்றன.

ஒரு மணி நேரம் வேகமாக நடக்கும்போது 300 கலோரி வரை செலவாகிறது. கொழுப்பு கரைவதன் மூலமே இந்த சக்தி கிடைக்கிறது. இதன் பலனாக, உடலில் தேவையற்ற கொழுப்பு கரைகிறது. குருதி கொலஸ்ரோல், உடல்பருமன் ஆகிய பாதிப்புகளும் குறைகின்றன. நடைப் பயிற்சி என்பது காற்றை உள்வாங்கிக்கொள்ளும் ஏரோபிக் பயிற்சி என்பதால், காற்றில் உள்ள ஒட்சிசனை, சுவாச மண்டலமும் இதய குருதி நாள மண்டலமும் அதிக அளவில் பயன்படுத்திக்கொள்கின்றன. இதன் மூலம் இதய இயக்கம் வலிமை பெறுகிறது. நுரையீரலின் சுவாசத் திறன் அதிகரிக்கிறது. ஆஸ்துமா, ஒவ்வாமை உள்ளிட்ட சுவாச நோய்கள் கட்டுப்படுகின்றன. நடக்க நடக்க எலும்புகள் பலம் பெறுவதால், எலும்பு வலுவிழப்பு நோய் (Osteoporosis) நெருங்குவதில்லை. வெறும் வயிற்றில் இரண்டு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு நடந்தால், மலச்சிக்கல் நீங்கி, குடல் புற்றுநோயைத் தடுக்கிறது. நடைப் பயிற்சி செய்யும் பெண்களுக்கு ஹார்மோன்கள் சீராகச் சுரப்பதால், மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதும் தவிர்க் கப்படுகிறது.

**இரண்டாவது இதயம்**

தினமும் நடைப் பயிற்சி செய்பவர்களுக்குக் கால் தசைகள் இரண்டாவது இதயம்போல் செயற்படுகின்றன. வேகமாக நடக்கும்போது, கால்களில் குருதிக் குழாய்களுக்குப் பக்கத்தில் உள்ள தசைகள் தூண்டப்பட்டு, இதயம் செயற்படுவதுபோல் வலுவான அழுத்தத்துடன் குருதியை உடல் முழுவதும் அனுப்புகின்றன. நடைப் பயிற்சி செய்பவர்கள் இப்படி இரண்டு இதயங்களுக்குச் சொந்தக்காரர்கள் ஆவதால், நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கின்றனர். நடைப் பயிற்சி செய்யும்போது என்டார்பின் எனும் ஹார்மோன் சுரக்கிறது. இது மன அழுத்தத்தைக் குறைத்து, மன அமைதிக்கு வழிசெய்கிறது. நாள் முழுவதும் உற்சாகமாக உழைப்பதற்கு இது உதவுகிறது.

தினமும் 8 மணி நேரம் வேலைக்கு ஒதுக்குவதைப்போல் நடைப் பயிற்சிக்கும் ஒரு மணி நேரம் ஒதுக்குங்கள். மாலை நேரத்தில் குழந்தைகளை விளையாட விடுங்கள். இளம் வயது நீரிழிவு, மாரடைப்பு உள்ளிட்ட பெரும்பாலான நோய்களிலிருந்து தப்பிவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச் சொத்தைப் பேண்



சந்திரன் ஒரு துடிப்பான மாணவன். அவனிடம் பல நல்ல பண்புகள் இருந்தன. ஆனால் ஒரே ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்து, மகிழ்வது சிறு வயது முதலே அவனுக்குப் பொழுதுபோக்கு. சிறு வயதிலே சில குறும்புக்கார வயது வந்த மாணவர்கள் செய்யும் இப்படியான செயல்களைப் பார்க்கப் பார்க்கச் சந்திரனுக்கும் இதே போன்ற பழக்கம் தொற்றிக் கொண்டது. புகைவண்டி, பேரூந்துப் பயணங்களிலே மின் குமிழ்களைக் கழற்றி எடுப்பது, இருக்கைகளிலுள்ள மேலுறைகள், றபர், பஞ்சு ஆகியவற்றைப் பிய்த்து எடுப்பது சந்திரனின் வழக்கமான செயல்களாகி விட்டன. பலமுறை அதிகாரிகளிடம் பிடிபட்டு எச்சரிக்கப்பட்டும் சில வேளைகளில் குற்றப் பணம் செலுத்தியும் அவனுடைய பழக்கம் மாறவில்லை. சந்திரனுடைய இந்தக் கெட்ட பழக்கம் பற்றி அவன் படித்த பாடசாலை அதிபருக்கும், அவனுடைய பெற்றோர்களுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது. அவர்களும் அவனைப் பல முறை எச்சரித்துள்ளார்கள். சந்திரன், தான் இனி அப்படி நடப்பதில்லை எனக் கூறினாலும் மீண்டும் மீண்டும் அவ்வாறே செய்து வந்தான்.

அன்று அவனது பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டிகள் நடந்து கொண்டிருந்தன. போட்டிகள் முடிந்து உரைகள் ஆற்றப்பட்டு, பரிசில்களும்வழங்கப்பட்டுநன்றியுரையும் கூறி முடிய இரவு ஏழு மணிக்கு மேலாகி விட்டது. நல்ல இருட்டு. சந்திரனுடைய சைக்கிளிலும் விளக்கு இல்லை. அவன் வேறு மின்விளக்கும் எடுத்து வரவில்லை. தெருவில் மின் விளக்கு வெளிச்சம் இருந்ததால் அவனால் அந்த வெளிச்சத்தில் சைக்கிளை ஓடக் கூடியதாக இருந்தது.

சந்திரனோடு கூடி வந்த மாணவர்கள் எல்லாம் இடைவழியில் தங்கள் தங்கள் வீடுகளில் நின்று கொண்டார்கள். ஒரே ஒரு மாணவன் மட்டும் சந்திரனோடு வந்து கொண்டிருந்தான். அவனும் சந்திரனுடைய வீட்டுப் பக்கம்தான் போக வேண்டும். இருவரும் ஒருவரையொருவர் முந்திச் செல்வதற்காக மிக வேகமாக சைக்கிளைச் செலுத்தி வந்து கொண்டிருந்தார்கள். சந்திரன் மற்ற மாணவனை முந்தி வேகமாக வந்து கொண்டிருந்தான். அப்போது தான் வலது பக்கம் பிரிந்து போகும் பாதையால் திரும்பிப் போக வேண்டியதை உணர்ந்தான். அந்த இடத்தில் மின் விளக்குகள் இல்லாமலிருந்ததால் இருட்டாக இருந்தது. சரியாகப் பாதை தெரியாவிட்டாலும் இருட்டில் மங்கலாகத் தெரிந்த சில அடையாளங்களைக் கொண்டு சைக்கிளைத் திருப்பினான். நல்ல வெளிச்சம் இல்லாததால் சைக்கிள் பாலத்தின் வலது கட்டில் மோதியது. சந்திரன் தலை குப்புற விழுந்தான். நெற்றியில் கல்லடிபட்டு குருதி வடிந்து கொண்டிருந்தது. பின்னால் வந்த மாணவன் சந்திரன் கிடந்த காட்சியைக் கண்டு "ஐயோ" என்று அலறி விட்டான். அவனுக்குப் பின்னால் மின் விளக்குடன் சைக்கிள்களில் வந்தவர்கள் சந்திரனுடைய நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு கைக்குட்டையை நீரில் நனைத்து காயத்துக்குக் கட்டுப் போட்டார்கள். அவர்களில் ஒருவர் "இந்த இடத்தில் இருந்த மின்விளக்கை இரண்டு நாளைக்கு முன்னாலே எவனோ கழட்டிப் போட்டான். வெளிச்சமில்லாததாலதான் இந்தப் பையனுக்கு இப்பிடி ஆகிப் போச்சு" என்று அனுதாபப்பட அவர் கூறிய வார்த்தைகள் சந்திரனுடைய உள்ளத்தில் ஈட்டியாகப் பாய்ந்தன. இரண்டு நாள்கள் முன்னாலே தானும் நண்பன் ஒருவனும் தெரு மின் விளக்கைக் கழற்றியது இப்படித் தனக்கே எமனாக வந்து விட்டதை எண்ணி மனம் வருந்தினான். பெற்றோரால் ஆசிரியரால் திருந்த முடியாத சந்திரன் தன் செயல்களால் தானே தண்டனை பெற்றுத் திருந்திவிட்டான்.

சைக்கிளில் வந்தவர்களின் உதவியோடு வீடு சென்ற சந்திரன் பொதுச் சொத்தைப் பராமரிப்பதிலும் பிறருக்கு உதவுவதிலும் இப்போது முதலாளாக நிற்கிறான்.



## மழையே வருவாய்

இலைகள் காயுது பயிர்கள் காயுது
மழையே நீ வருவாய்
எங்கள் வீட்டு மரங்கள் காயுது
இப்போதே வருவாய்
மழையே வருவாய் மழையே வருவாய்
முகில்கள் ஊடாக
பார்த்து மகிழ்வேன் நீயும் வருவாய்
பசுமை தருவாயே.

## உலகப் பழமொழிகள்

**திபெத்**

1. தேனீசேர்க்கும்தேனைப்போல மற்றவர்களுக்குப் பயன்படுவதாக இருக்கவேண்டும், மனிதன் தேடும் செல்வம்.
2. அறிஞன் தவறு செய்வதில்லை. ஆனால் செய்து விட்டால் அதைத் திருத்தவே முடியாது.
3. இருட்டில் ஓடினால் தடுக்கி விழவே நேரும்
4. முட்டையைத் திருடுபவன் எருதையும் திருடுவான்.
5. பணிபவனை கோழை என்று நினைப்பவன் முட்டாள்.
6. இதயம் உறுதியானால் சுண்டெலி கூடச் சாதனை புரியும்.
7. கன்றும் முட்டையும் வேண்டுமென்றால் பசுவையும் கோழியையும் பயமுறுத்தக் கூடாது.

## வரலாற்றில் இன்றைய தினம்

1590 - இங்கிலாந்தில் விநியோகப் பணியை முடித்துவிட்டு, றனோக் குடியிருப்புக்குத் திரும்பிய ஆளுநர் ஜோன் வைற் தமது, குடியேற்றக் குடியிருப்பு வெறுமையாக இருப்பதைக் கண்டார். இதன் பின் இது தொலைந்த குடியிருப்பு எனவும் பெயர் பெற்றது.

1783 - பெரிய பிரித்தானியாவின் கிழக்குக் கரையில் பெரிய தொரு எரி நட்சத்திரம் கடந்து சென்றமை அவதானிக்கப்பட்டது.

1868 - பிரான்ஸ் வானியலாளர் பீர்ஜான்சனால் ஹீலியம் வாயு கண்டறியப்பட்டது.

1877 - அஸாப் ஹோலால் செவ்வாயின் இரண்டாவது சந்திரன் எனக் கண்டறியப்பட்டது.

1891 - மார்டினிக் சூறாவளியில் 700 பேர் உயிரிழந்தனர்.

1903 - றைற் சகோதரர்களின் முதலாவது விமானப் பறப்புக்கு நான்கு மாதத்துக்கு முன்னர் ஜேர்மன் பொறியியலாளர் கார்ல் ஜதோவால், சுயமாக ஆக்கப்பட்ட மோட்டார் கிளைடர் விமா னத்தில் பறந்ததாகக் கூறப்படுகின்றது.

1920 - அமெரிக்க அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டவரைவால் பெண்களுக்கான வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டது.

1938 - நியூயோர்க் நகரை கனடா ஒன்ராறியோவுடன் இணைக்கும் ஆயிரம் தீவுகள் பாலம், சென்லோறன்ஸ் நதி மீது கட்டப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதி பிறாங்லின் டி றூஸ்வெல்டினால் அர்ப்பணிக்கப்பட்டது.

1945 - இந்தோனேஷியாவின் முதல் ஜனாதிபதியாக சுகர்னோ பதவியேற்றார். முதல்நாளே நாடு சுதந்திரமடைந்தது.

1950 - தீவிர வலதுசாரித் தரப்பால், பெல்ஜிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் யூலியன் லாஹாட் படுகொலை செய்யப்பட்டார்.

1971 - வியட்நாம் போர்; வியட்நாமிலிருந்து தமது படைகளைத் திரும்பப் பெற ஆஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் தீர்மானித்தன.

1992 - வலி.வடக்கு குடியிருப்புக்கள் மீது ஷெல் தாக்குதலை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு இடம் பெயர்ந்தோர் அமைப்புத் தீர்மானம்.

- வடக்கு-கிழக்கு இணைப்பு: முஸ்லிம்களின் யோசனை நடைமுறைக்குச் சாத்தியமில்லையென தமிழ் கட்சிகள் தெரிவிப்பு.
- மயிலந்தனை சம்பவம்; கொலையுண்ட தமிழர்களின் பெயர்ப் பட்டியல் ஜனாதிபதி செயலகத்திடம் கையளிப்பு.

1995 - வேலூர் சிறையுடைப்புடன் தொடர்புடைய 4 பேர் யாழ்ப்பாணம் வந்துவிட்டனர் எனக் கொழும்பு நாளிதழ் செய்தி வெளியீடு.

- தீர்வு யோசனைக்கு எதிராகக் கதிர்காமம் நோக்கிப் பேரணி. தினேஷ் தலைமையில் பிக்குகள் அங்கு உணவு தவிர்ப்புப் போராட்டம்.


2005 - பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற் தனது சொந்த நாடான ஜேர்மனிக்கு வருகை.

2006 - காயமடையும் புலி உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதிசெய்ய அரசு தயார். ஜனாதிபதி வெளியிடும் நல்லெண்ணம்.

- கிளாலியிலிருந்து 21 சடலங்கள் கொடிகாமம் பொலிஸாரால் மீட்பு. ஒளிப்படம் எடுத்தபின் தகனம் செய்ய ஏற்பாடு.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒட்டுமொத்தக் குடும்பத்தையும் பாதிக்கும் ஆட்டிசம்

தமிழில்: சாரி

என்னுடைய 14 வயது மகன் ஒரு நாள் என்னைக் கொன்றுவிடுவான் என்று அஞ்சுகிறேன். இதை நம்புவது உங்களுக்குக் கடினமாக இருக்கலாம்.

14 வயதான என் மகன் ராபி, ஆட்டிஸம் என்ற குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறான். 6 அடி உயரமும் அதற்கேற்ற பருமனும் வலுவும் உள்ளவன். பூஞ்சையான என்னை அடித்து நொறுக்கிவிடுவான். அவன் அளவுக்கு உயரமும் வலுவும் உள்ள என் கணவர் டேவிட் அருகில் இல்லாவிட்டால் என்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

**எங்கள் பரிதாப நிலைமை**

ராபி என்னை முதலில் அடித்தபோது அவனுக்கு வயது 11. வேண்டும் என்றே அடித்தான் என்று நான் நம்பத் தயாரில்லை. ஒரு வாரமாக வானிலை சரியாக இல்லாததால் வீட்டில் அடைந்து கிடந்தோம். ஒரு ஞாயிற்றுக்கிழமை அருகிலிருந்த அருங் காட்சியகத்துக்குச் செல்ல முடிவுசெய்தோம். ராபி திடீரென்று கத்துவான், வினோதமாக நடந்துகொள்வான். அதை மற்றவர்களால் புரிந்துகொள்ள முடியாமல் முகம் சுளிப்பார்கள் அல்லது ஏன் வெளியில் கூட்டி வருகிறீர்கள் என்று கோபமாகக் கேட்பார்கள். அவனையே எல்லோரும் வேடிக்கை பார்ப்பார்கள். இதனாலேயே ராபியின் தம்பி ஜோ அவமானம் அடைவான். அண்ணனைக் கூட்டிக்கொண்டு வெளியில் போக வேண்டாம் என்பான். காலையில் புறப்பட்டுவிட்டால் கூட்டம் வருவதற்கு முன் சுற்றிப்பார்த்துவிட்டு அவனைக் கூட்டிக்கொண்டு வந்துவிடலாம் என்று நினைத்தோம். அப்படிச் செல்வது எங்களைவிட அவனுக்காகத்தான் என்பது பலருக்கும் புரியவில்லை.

முதல் அரை மணி நேரம் அமைதியாகக் கழிந்தது. நம்பிக்கை ஏற்பட்டது. தேநீர் கடைக்குப் போய் சாப்பிடுவதைவிட இங்கேயே வாங்கி வந்துவிடுகிறேன் என்று டேவிட் சென்றார். இரண்டு நிமிடங்களுக்கெல்லாம் ஒரு பெரிய குடும்பம் சளசளவென்று பேச்சுகளோடு ஆரவாரமாக உள்ளே நுழைந்தது. அதைப் பார்த்தும் ராபி தன்வசம் இழந்து கிரீச்சென்று ஓலமிட்டுத் தரையில் விழுந்து புரள ஆரம்பித்தான். ஜோ அவமானத்தாலும் கோபத்தாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டான். நான் ராபியைச் சமாதானப்படுத்த முயன்றேன். அந்தக் குடும்பம் முழுக்க அருகே வந்து வேடிக்கை பார்த்தது. தரையில் கையையும் காலையும் ஓங்கி ஓங்கி அடித்தான் ராபி. நான் அவனைச் சமாதானப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் இரு கைகளையும் சேர்த்து அணைத்துத் தூக்க முயன்றேன். மின்னல் வேகத்தில் என் மூக்கின் மீது ஒரு குத்துவிட்டான். குருத்தெலும்பு உடைந்துவிட்டதை உணர்ந்தேன். தரையில் மட்டமல்லாக்கச் சரிந்தேன். இப்படி நடக்கும் என்று நான் எதிர்பார்த்திருக்கவே இல்லை. மூக்கிலிருந்து குபுகுபுவென்று குருதி பொங்கியது. என் வலியைவிட ராபியின் நிலையை நினைத்து எனக்குக் கண்ணீர் பொங்கியது.

**ஜோவுக்குப் பிடிக்காத ராபின்**

அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு பெரியவர், டேய் பையா! அம்மாவை அடிக்காதே நிறுத்து என்று இரைந்தார். ராபி அதைக் காதில் வாங்காமல் மீண்டும் மீண்டும் என் தலைமீது அடித்துக்கொண்டே இருந்தான். எங்களைச் சுற்றி நின்றவர்களுக்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. காபி கப்புகளுடன் அங்கு நுழைந்த டேவிட் என்னை ராபி அடிப்பதைப் பார்த்ததும் கோப்பைகளை அப்படியே தரையில் வீசிவிட்டு ராபியைப் பாய்ந்து பிடிக்கத் தொடங்கினார். கூட்டத்திலிருந்த ஒருவர் டேவிட்டைப் பார்த்து, அந்தப் பையனை நன்றாக உதையுங்கள் என்று கத்தினார். முட்டாளே, அவன் ஆட்டிசக் குழந்தை என்று டேவிட் பதிலுக்குக் கத்தினார். ஒரு கைதியை பொலிஸ் அடக்கி கூட்டிச் செல்வதைப்போல காருக்கு அவனைத் தள்ளிக் கொண்டு வந்தார் டேவிட்.

அந்தச் சம்பவத்திலிருந்து மீள எங்களுக்கு ஒரு வாரம் ஆனது. என்னுடைய கண்களைச் சுற்றி கறுப்பாகக் குருதி கட்டியிருந்தது. மூக்கும் கன்னங்களும் வீங்கிப் போயிருந்தன. ராபிக்காக நான் வேலையை விட்டுவிட்டேன். ராபி முற்பகலில் ஒரு பள்ளிக்கூடத்துக்குச் செல்வான். பிற்பகலில் அவனுடன் நான் தனியாக இருக்க வேண்டுமே என்று டேவிட் கவலைப்பட்டார். ராபி சின்னக் குழந்தையாக இருந்தபோது சுட்டியாக இருந்தான். அழகான, தெளிவான முகமும் குறும்புச் சிரிப்பும் சுருட்டை முடியுமாக பார்ப்பவர்களைக் கவர்ந்தான். ஜோ பிறந்தவுடன் வீட்டு வேலையில் என் சகோதரி உதவினாள். புதிய குழந்தைக்காகத் தன்னைக் கவனிப்பதில் உள்ள மாற்றத்தை ராபி விரும்பவில்லை. கோபத்தை வெளிப்படையாகக் காட்டினான். அப்போதுதான் அவனுக்கு ஆட்டிஸம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. மருத்துவர்கள் இப்படிக் கூறியவுடனேயே அரசோ, சுகாதாரத்துறையோ தானாகவே எங்களுக்கு உதவிகளை முன்வந்து செய்யும் என்று நினைத்தேன்.

சுகாதாரத் துறையினர் ராபியை நாங்கள் எவரும் அடித்துவிடக் கூடாது, துன்புறுத்தக் கூடாது என்பதில் தான் அக்கறை காட்டினார்களே தவிர, அவன் எங்களைத் தாக்கக்கூடும் என்பது குறித்து அக்கறை காட்டவில்லை. ராபி போன்றவர்களை நீண்ட காலத்துக்குத் தங்கள் பொறுப்பில் எடுத்துச் சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் எதும் அரசிடம் இல்லை. இதை ஒரு பிரச்சினையாக எவரும் கருதுவதில்லை. இதனால், பாதிக்கப்படும் குடும்பங்கள் அரசுக்கு முக்கியமே இல்லை.

**கண்களில் வழியும் நீர்**

ராபிக்கு ஆட்டிஸம் என்று மருத்துவர்கள் சொன்னபோது, இடி விழுந்ததைப் போல ஆயிற்று. அவனை நன்றாக ஆராய்ந்து பார்த்துச் சொல்லுங்கள், எவ்வளவு செலவானாலும் அவனைக் குணப்படுத்த முயற்சிக்கிறேன் என்றார் டேவிட். எப்படி நடந்துகொண்டால் ராபி சாதாரணமாக இருப்பான் என்று எவராவது சொன்னால் போதும், அதன்படி நடக்கலாம் என்று அப்பாவித்தனமாக நினைத்தேன்.

ஆட்டிஸம் பற்றி உங்களுக்கு ஏதும் தெரியாவிட்டால் அதைப் புரிந்து கொள்வதே கடினம். இப்போது எங்களுடைய வீட்டின் செயற்பாடு எல்லாமே ராபியின் உடல், மன நிலையை ஒட்டித்தான் இருக்கிறது. இது ஜோவை மிகவும் பாதிக்கிறது. எங்கள் வீடே இரும்புக் கோட்டைபோல மாறிவிட்டது. எல்லா ஜன்னல்களையும் கதவுகளையும் எப்போதும் சாத்தி வைக்கிறோம். உடலைக் குத்திக் கிழிக்கக்கூடியதும் ஓங்கி மண்டையில் அடிக்க உதவுவதுமான எல்லா சாமான்களையும் அகற்றிவருகிறோம். சுவர்களில் படங்கள்கூட தொங்கவிடப்படுவதில்லை. ராபி தானாகவே படுத்துத் தூங்க மாட்டான். வார இறுதி நாள்களில் டேவிட் அவனோடு படுப்பார். அவன் பக்கத்தில் அச்சத்துடன்தான் படுப்பேன். லேசாக நகர்ந்தால்கூட அவனுக்குத் தூக்கம் கலைந்து உடைந்து நொறுங்கிவிடுவான்.

ஆறு மாதங்களுக்கு முன்னால் அவனுக்கு 14 வயதானது. அப்போதிருந்து மீண்டும் அடிக்க ஆரம்பித்து விட்டான். பள்ளிக்கூடத்தில் அவனால் பிரச்சினை. பலமுறை அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டேன். இப்படிப்பட்ட குழந்தைகளைக் கையாள பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதைச் செய்யாமல், ஒவ்வொரு முறையும் என்னை அழைத்து அறிவுரை கூறுவதும், கண்டிப்பதும் வருத்தமாக இருக்கிறது. அவன் நடத்தையை வைத்து நான் நல்ல தாயா, பொறுப்பற்றவளா என்று எடை போடுவது மன வேதனையைக் கூட்டுகிறது. இப்படியான குழந்தைகளைப் பராமரிப்பதில் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் பங்கிருக்கிறது. ஆனால், சமூகம் எவரோ அது இருவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று விலக்கிக் கொள்கிறது.

*நன்றி : த கார்டியன்*

# ரியோ ஒலிம்பிக்கில் அல்லற்படும் ஆசியா

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. விறுவிறுப்புக்களுக்கும், பரபரப்புக்களுக்கும் பஞ்சமில்லாமல் தொடர் நடைபெற்றுவருகிறது. இந்தத் தொடரின் பதக்கப் பட்டியலில் இலங்கை, இந்தியா நாடுகளின் நிலைமைகள், அடைவுகள் ஆகியவற்றைச் சிந்தித்துப் பார்த்தால், உலக நாடுகளின் ஏளனப் பார்வை எம் மீது விழுவதை மிகையாகவே உணர முடியும்.

அதிலும் குறிப்பாக ஆசியாவின் ஜாம்பவானாக வலம்வரும் இந்தியாவின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. 130 கோடி சனத் தொகையுடன் உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகையுடைய நாடு, 2020 ஆம் ஆண்டில் உலக வல்லரசு என ஏகப்பட்ட விடயங்களில் தம்பட்டம் அடிக்கும் இந்தியாவால் ஒரு வெண்கலப் பதக்கத்தைக்கூட இன்றுவரை வாங்க இயலவில்லை. ஜிம்னாஸ்டிக் போட்டியில் தீபா கர்மகர் என்ற வீராங்கனை வெண்கலத்துக்காகப் போட்டியிட்டுத் தவறவிட்டமையே அந்த நாடு ஒலிம்பிக்கில் சாதித்த ஆகச் சிறந்த அடைவு மட்டமாகக் கருதப்படுகிறது. ஹொக்கியில் இந்தியா உலக அணிகளிடையே ஆதிக்கம் செலுத்த வல்லது என்ற கருத்துக் கணிப்பு பரவலாக இருந்த நிலையில் ரியோ ஒலிம்பிக் தொடர் இந்தக் கருத்தையும் பொய்ப்பித்துள்ளது. மொத்தத்தில் விளையாட்டைப் பொறுத்தவ்ரை கிரிக்கெட்டைத் தவிர இந்தியாவில் வேறொன்றும் இல்லை.

சட்டியைப் பார்த்து பானை சொல்லியதாம் நீ கறுப்பாய் இருக்கிறாய் என்று. இந்த நிலைதான் இலங்கையின் நிலை. இந்தியாவைப் பற்றி சிந்திக்கும் அதேநேரத்தில் இலங்கையைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய கட்டாயம் எமக்குள்ளது. ஏனெனில் இலங்கையாலும் ஒரு பதக்கத்தைக்கூட வெல்ல முடியவில்லை. இந்தியா அளவுக்கு மக்கள் தொகையுடைய நாடு இலங்கை இல்லை என்பது சிலரது வாதம். இங்கேதான் ஆபிரிக்க நாடுகள் எமக்கு தண்ணி காட்டுகின்றன. வறுமை, போர் ஆகியவற்றின் பிடியில் சிக்கித்தவித்த தவித்துக் கொண்டிருக்கின்ற ஆப்கானிஸ்தான், இஸ்ரேல், மொங்கோலியா, கென்யா, சோமாலியா, சிம்பாப்வே போன்ற நாடுகள்கூட ஒலிம்பிக்கில் தமது ஆதிக்கத்தைக் குறைந்த அளவிலேனும் நிலைநாட்டி விட்டன. ஆனால் எம்மவர்களால் எதுவும் இயலவில்லை.

இதில் சிரிப்புக்குரிய விடயம் என்னவென்றால் கொசொவோ, அகதிகள் அணி இரண்டுக்கும் தங்கம் கிடைத்தமையே. சேர்பியாவிலிருந்து கடந்த 2008 ஆம் ஆண்டு பிரிந்து தனிநாடானது தான் கொசொவோ. உலகில் பல நாடுகள் இதை ஓர் தனிநாடாக அங்கீகரிக்கவில்லை. அந்த நாட்டின் முதல் ஒலிம்பிக் தொடர் இதுவே. முதல் ஒலிம்பிக் தொடரிலேயே மஜ்லிந்தா கெல்மன்டி என்ற ஜூடோ வீராங்கனை தங்கம் வென்று கொடுத்துள்ளார். இந்தத் தங்கப்பதக்கத்தின் மூலமே இப்படியொரு நாடு உருவாகியுள்ளது பலருக்குத் தெரியவந்தது.

ஈராக், சிரியா, சூடான் போன்ற நாடுகளில் இடம்பெற்றுவரும் போர்களால் பாதிக்கப்பட்டு ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் புகுந்த வீரர், வீராங்கனைகள் பங்குபற்றுவதற்காக அகதிகள் அணி உருவாக்கப்பட்டது.



வெறும் 10 நபர்களைக் கொண்ட இந்த அணி, ஒரு தங்கம், ஒரு வெள்ளி என இரு பதக்கங்களை வென்றுள்ளது. மொத்தத்தில் ஒலிம்பிக் தொடரில் எமக்கு எஞ்சியது எமது வீரர், வீராங்கனைகளின் செல்பியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 4 | | | | 9 | | 7 |
| | | | | 3 | | | | |
| 2 | | | 9 | | | | | 8 |
| | | | | 6 | | 2 | | |
| | 5 | | | | | | 1 | |
| | | 3 | | 5 | | | | |
| 4 | | | | | 7 | | | 5 |
| | | | | 8 | | | | |
| 9 | | 7 | | | | 4 | | 1 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 7 | 1 | 4 | 9 | 6 | 5 | 8 |
| 9 | 6 | 4 | 5 | 8 | 2 | 1 | 3 | 7 |
| 5 | 1 | 8 | 6 | 7 | 3 | 4 | 2 | 9 |
| 6 | 4 | 9 | 8 | 2 | 1 | 3 | 7 | 5 |
| 2 | 3 | 5 | 7 | 9 | 6 | 8 | 1 | 4 |
| 8 | 7 | 1 | 4 | 3 | 5 | 2 | 9 | 6 |
| 7 | 5 | 3 | 2 | 6 | 8 | 9 | 4 | 1 |
| 1 | 8 | 2 | 9 | 5 | 4 | 7 | 6 | 3 |
| 4 | 9 | 6 | 3 | 1 | 7 | 5 | 8 | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

இந்த உலகத்துல பணமில்லாதவனை சுலபமாகக் கண்டுபிடிச்சிடலாம்...




நீதி நேர்மை நியாயம்னு பேசிக்கிட்டிருப்பான்.

வர வர ரோட்டுல போறவங்கள் எல்லாம் பேஸ்புக்கில இருக்கிறாயா? வாட்ஸ் அப்ல இருக்கிறாயான்னு கேட்கிறாங்களே தவிர நல்லா இருக்கிறாயா எண்டு ஒருத்தர் கேட்க மாட்டேங்கிறாங்க...



**சொரூபா** @_Soruba · 24h
வெகு இயல்பாய்ப் பேசிய சொற்களில் தவறு கண்டுபிடிக்கப்படும் மறுநொடி அவ்விடம் சட்டென அந்நியப்படுகிறது.



## சாவுக்கு முன் மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதிய கடிதம்...

பிரபல பாடலாசிரியர் நா.முத்துக்குமார் கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார். அவரது உடலுக்கு ஒட்டு மொத்தத் திரையுலகமே திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியது. இதையடுத்து, அவரது உடல் அன்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த நா.முத்துக்குமார் தமிழ் சினிமா மீதும் தன்னுடைய எழுத்துக்கள் மீதும் எந்தளவுக்குப் பற்று வைத்திருந்தாரோ, அதே அளவுக்குத் தனது குடும்பத்தின் மீதும் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். நா.முத்துக்குமார் தனது இறப்பிற்கு முன்பு, தனது மகனுக்கு ஒரு தந்தையாக அவருடைய நடையில்ஒருகடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அந்த கடிதம் தற்போது வெளி வந்துள்ளது.

அன்புள்ள மகனுக்கு அப்பா எழுதுவது...

இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம். இதைப் படித்துப் புரிந்துகொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டு இருக்கிறாய். வயதின் பேராற்றாங்கரை உன்னையும் வாலிபத்தில் நிறுத்தும். சிறகு முளைத்த தேவதைகள் உன் கனவுகளை ஆசீர்வாதிப்பார்கள். பெண் உடல் புதிராகும். என் தகப்பன் என்னிடமிருந்து ஒளித்து வைத்த இரகசியங்கள் அடங்கிய பெட்டியின் சாவியை நான் தேட முற்பட்டதைபோல, நீயும் தேடத் தொடங்குவாய். பத்திரமாகவும் பக்குவமாகவும் இருக்க வேண்டிய பருவம் அது. உனக்குத் தெரியாதது இல்லை. பார்த்து நடந்து கொள்.

நிறைய பயணப்படு. பயணங்களின் ஜன்னல்களே முதுக்குப் பின்னாலும் இரண்டு கண்களைத் திறக்கின்றன. புத்தகங்களை நேசி. ஒரு புத்தகத்தை தொடுகிறபோது நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள். உன் உதிரத்திலும் அந்தக் காகித நதி ஓடிக்கொண்டே இருக்கட்டும்.

கிடைத்த வேலையைவிட பிடித்த வேலையைச்செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால் இல்லை எனினும் கடன் வாங்கியாவது உதவி செய். அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது. உறவுகளிடம் நெருங்கியும் இரு. விலகியும் இரு. இந்த உலகில் எல்லா உறவுகளையும்விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும். இவையெல்லாம் என் தகப்பன் எனக்குச் சொல்லாமல் சொன்னவை. நான் உனக்குச் சொல்ல நினைத்துச் சொல்பவை. என் சந்தோசமே நீ பிறந்த பிறகுதான். என் தகப்பனின் அன்பையும் அருமையையும் நான் அடிக்கடி உணர்கிறேன். நாளை உனக்கொரு மகன் பிறக்கையில் என் அன்பையும் அருமையையும் நீ உணர்வாய். நாளைக்கும் நாளை நீ உன் பேரன் பேர்த்திகளுடன் ஏதோ ஒரு ஊரில் கொஞ்சிப்பேசி விளையாடிக்கொண்டு இருக்கையில், என் ஞாபகம் வந்தால், இந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துப்பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் வாழ்ந்து கொண்டிருப்பேன் நான்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** செயலில் சமயோசிதம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். வருமானம் அதிகரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள். வழக்கு விவகாரத்தில் அனுகூலம் ஏற்படும்.

**இடபம்:** அனுபவசாலிகளில் ஆலோசனையை ஏற்று நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**மிதுனம்:** பிறரிடம் நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க கூடாது.

**கடகம்:** செயலில் திறமை அதிகரிக்கும். நண்பர்களின் புகழ் மொழியைப் பெரிதுபடுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உருவாகும். வருமானம் உயரும். விரும்பிய உணவுகளை உண்டு மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் அன்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பெண்கள், வீட்டு உபயோக பொருள் வாங்குவர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கன்னி:** பணிகளுக்கு தகுந்த முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். உறவினர் வகையில் செலவு ஏற்படலாம். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**துலாம்:** அவசரப் பணி ஏற்படலாம். சூழ்நிலை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** தடைகளை தகர்த்தெறிந்து முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், புதிய சாதனை உருவாகும். ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். ஆரோக்கியம் பலம் பெறும்..

**தனுசு:** பிறரது கருத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். புத்திரரை கண்டிப்பதில் இதமான அணுகுமுறை தேவை. பெண்கள், கணவருடன் வாக்குவாதம் செய்ய நேரிடலாம்.

**மகரம்:** செயல்களில் நேர்மை இருக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணமும் வசூலாகும். சுப நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு எதிரி தொல்லை விலகும்.

**கும்பம்:** உங்களின் யதார்த்த பேச்சால், பிறர் அதிருப்தி அடையலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். அரச வகையில் எதிர் பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**மீனம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

என்னங்க உங்க மனைவி காஸ் அடுப்ப கட்டிப் பிடிக்கிறாங்க...!

சமையல் முடிந்ததும் அடுப்பை அணைக்கவும் எண்டு யாரோ சொன்னாங்களாம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு உண்ட பின் செய்யக் கூடாதவை



**இடுப்பு பெல்ட்டை தளர்த்தக் கூடாது**
சாப்பிட்ட பிறகு லேசாக இருக்கட்டுமே என இடுப்பில் உள்ள பெல்ட்டை இறக்கிவிடுவார்கள் அல்லது தளர்த்தி விடுவார்கள். இதனால் சாப்பிட்ட உணவு உடனடியாக குடலுக்கு சென்று விழுவதால் சரியானபடி வேலை செய்ய முடியாமல் செரிமானக் கோளாறு ஏற்படும்.

**குளிக்கக் கூடாது**
சாப்பிட்டவுடன் குளிப்பதால் கை, கால்களில் குருதி ஓட்டம் அதிகரிக்கிறது. இதனால் உணவு செரிக்கத் தேவைப்படும் குருதி ஓட்டம் குறைந்து வயிற்றில் உள்ள உணவின் செரிமானத்தைக் குறைக்கிறது.

**உடனே நடக்கக் கூடாது**
சாப்பிட்ட உடனே நடந்தால் உடலுக்கு நல்லது என ஒரு நம்பிக்கை நிலவுகிறது. இது தவறானது. இப்படி உடனடியாக நடப்பதால் உணவில் உள்ள சத்துகளை உணவு மண்டலத்தால் எடுக்க இயலாமற் போய்விடும். இதனால் சாப்பிட்டும் சரியான சத்துகள் நம் உடலில் சேராது.

**சாப்பிட்டதும் தூங்கக் கூடாது**
சாப்பிட்டவுடன் படுக்கைக்குச் சென்றால் நாம் சாப்பிட்ட உணவுகள் சரியாகச் செரிமானம் ஆகாது. வயிற்றுக்குத் தேவை இல்லாத வாயுவும் நோய்க் கிருமிகளும் வர வழி வகுக்கும்.

## நாளை

ஆவணி-03
வெள்ளிக்கிழமை -19.08.2016
திதி: பிரதமை பி.ப.02.35
நட்சத்திரம்: சதயம் பி.இ.12.28
ராகுகாலம்: 10.35-12.05 வரை
சுபநேரம்:06.05-07.35 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 800 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 800 | 600 | 800 | 1000 | – | 650 |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 400 | 600 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | 600 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 500 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | 300 | – |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 150 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 400 | 170 |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 350 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 600 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 400 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 120 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 90 | 60 | 100 | 70 | 40 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 200 | 120 | 100 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 40 | 60 | 40 | 40 | 40 | 40 | 100 | 40 |
| பாகல் | 120 | 120 | 180 | 120 | 100 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 100 | 140 | – | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 90 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 70 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 60 | 60 | 60 | 50 | 60 | 80 | 70 | 80 |
| தக்காளி | 40 | 80 | 60 | 50 | 40 | 60 | 120 | 50 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 | 80 | 40 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 300 | 240 | 240 | 200 | 400 | 160 |
| புடோல் | 40 | 50 | 50 | 50 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 100 | 100 | 160 | 120 | 120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 40 | 50 | 50 | 60 | 40 | 80 | 70 | 50 |
| போஞ்சி | 150 | 160 | 180 | 180 | 180–200 | 200 | 130 | 180 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 150 | 120 | 150 | 120 | 120 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 150 | 200 | 160 | 180 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 70 | 150 | 120 | 60 | 100 | 120 | 200 | 80 |





# முருங்கைக்கீரை வடை

**தேவையான பொருள்கள்**



சுத்தம் செய்து, ஆய்ந்த முருங்கைக்கீரை – 1 பெரிய கப்
கடலைப் பருப்பு – 1 பெரிய கப்
இஞ்சி, பூண்டு (பொரித்தது) – சிறிது
நறுக்கிய பச்சை மிளகாய் – சிறிது
காய்ந்த மிளகாய் – 4
சோம்பு – தேவைக்கு
பொடியாக நறுக்கிய வெங்காயம் – 1
உப்பு – தேவையான அளவு
பல் பல்லாக வெட்டிய தேங்காய் – சிறிது
எண்ணெய் – பொரிப்பதற்கு.

**செய்முறை**

கடலைப் பருப்பை ஒரு மணி நேரம் ஊறவைத்து காய்ந்த மிளகாய், சோம்பு சேர்த்து கரகரப்பாக, கெட்டியாக அரைக்கவும். இத்துடன் வெங்காயம், இஞ்சி, பூண்டு, உப்பு, முருங்கைக்கீரை, பச்சை மிளகாய், தேங்காய் சேர்த்துக் கலந்து வடைகளாகத் தட்டி, எண்ணெயில் பொரித்து எடுக்கவும் முருங்கைக்கீரை வடை தயார்.

குறிப்பு: இந்த வடையை காரக்குழம்பில் போட்டு வடைக் குழம்பாக செய்யலாம். பாலூட்டும் தாய்மார்களுக்கு முருங்கைக்கீரை மிகவும் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'லிற்ரோகாஸ் லங்கா லிமிட்டெட்டால் வட்டுக்கோட்டை ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் ஸ்ரீ ஜீவா சிறந்த விற்பனையாளராகத் தெரிவு செய்யப்பட்டு, அவருக்கான சான்றிதழும் பரிசுத் தொகையும் அண்மையில் பத்தரமுல்லவில் வைத்து வழங்கப்பட்டது.

# இலங்கை ஒலிம்பிக் அணியின் ஆடை வழங்குநராக ஹமீடியா




ஹமீடியா சிறிலங்கா நிறுவனம், றியோ டீ ஜெனிரோ நகரில் நடைபெறும் 2016ஆம் ஆண்டின் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டித் தொடரில் கலந்துகொள்ளும் இலங்கை அணிக்கான உத்தியோகபூர்வ ஆடை வழங்குநராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

'இலங்கை ஒலிம்பிக் அணியின் உத்தியோகயூர்வ ஆடைசார் அனுசரணையாளராகத் திகழ்வதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம் என்று ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் தெரிவித்தார்.

'இந்த அணியில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் இலங்கையின் வர்த்தகக் குறியீட்டுத் தூதுவர்களாவர். அவர்கள் தனிப்பட்ட மெய்வல்லுனர்களாகவும் ஒரு அணி என்ற அடிப்படையிலும் தம்முடைய தாய்நாட்டை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

உலகெங்கும் உள்ள மில்லியன் கணக்கான மக்களால் கண்டுகளிக்கப்படும் கண்ணைக் கவரும் ஆரம்ப நிகழ்வின்போது, விளையாட்டரங்கில் எமது இலங்கை அணியினர் அணிவகுத்துச் செல்கையில், அவர்கள் ஆழமானதொரு பெருமித உணர்வை உணர்வது எமக்கு அவசியமாக இருக்கின்றது. அது போலவே, அவர்கள் ஒவ்வொருவர் தொடர்பிலும் நாம் பெருமிதம் கொள்கின்றோம் என்பதையும் நாம் அறிவோம்' என்றும் அவர் தெரிவித்தார்.

எமது உத்தியோகபூர்வ ஆடை வழங்குனராக ஹமீடியா நிறுவனத்தை இணைத்துக் கொள்வதையிட்டு நாம் மிக மகிழ்ச்சி அடைகின்றோம். இது போன்ற நிகழ்வுகளுடன் அவர்கள் எவ்வாறு அர்ப்பணிப்புடனும் ஈடுபாட்டுடனும் இணைந்து பணியாற்றுகின்றார்கள் என்பதை நாம் கண்டு கொண்டுள்ளோம் என்று இலங்கை ஒலிம்பிக் குழுவின் செயலாளர் நாயகமான மெக்ஸ்வல் டீ சில்வா கூறினார். (த)

வணிகம்:

# யூனியன் அஷ்யூரன்ஸுக்கு விருது



காப்புறுதித் துறையைச் சேர்ந்த ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிப் பிரிவுகளில் சிறப்பாகச் செயலாற்றியிருந்த நிறுவனங்களைக் கௌரவிக்கும் வகையில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாவது காப்புறுதித்துறை விருதுகள் வழங்கும் நிகழ்வில், மருத்துவக் காப்புறுதியில் சிறந்த வளர்ச்சியைப் பதிவு செய்த நிறுவனத்துக்கான விருதை யூனியன் அஷ்யூரன்ஸ் ஜெனரல் லிமிட்டெட் தனதாக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

உறுதியான காப்புறுதி மதிப்பீடு அணி மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை அணி ஆகியவற்றைக் கொண்டுள்ள, யூனியன் அஷ்யூரன்ஸ் ஜெனரல் லிமிட்டெட் மருத்துவக் காப்புறுதி வலையமைப்பு என்பது துறையில் காணப்படும் சிறந்த சேவைகளில் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பொது முகாமையாளர் நிரஞ்சன் நகேந்திரா கருத்துத் தெரிவிக்கையில், "இந்த விருதை வெற்றியீட்டியுள்ளமை தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்தவிருதின் மூலமாக எமது விற்பனை, காப்புறுதி வழங்கல்கள் மற்றும் நட்டஈடுகள் ஆகியன கௌரவிக்கப்பட்டுள்ளன. எமது வியாபாரத்தை வளர்ப்பதற்கு இந்த அணிகள் அர்ப்பணிப்புடன் கடுமையாக உழைத்துவருகின்றன.

மருத்துவக் காப்புறுதிக்கான சந்தை வாய்ப்பு என்பது தொடர்ந்து வளர்ந்து வருவதை எம்மால் தொடர்ந்து அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதன் மூலம் எமக்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்கள் பற்றி நாம் மிகவும் சந்தோசமடைகிறோம்-என்றார். (த)

# இலங்கையிலிருந்து ஆடுகள் ஏற்றுமதி


இலங்கையிலிருந்து மாலைதீவுக்கான ஆடுகள் ஏற்றுமதியைத் தனியார் நிறுவனமொன்றினூடாக இலங்கை அரசு ஆரம்பித்துள்ளது. ஆடு வளர்ப்பு மற்றும் பயிற்சிகள், செயற்பாடுகளுக்காக இந்த ஏற்றுமதி முன்னெடுக்கப்படுகின்றது. மாலைதீவு மீன்பிடி மற்றும் விவசாய அமைச்சுக்கு இந்த ஆடுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இதுவரை இந்தியாவிலிருந்து ஆடுகளை மாலைதீவு இறக்குமதி செய்திருந்தது. இலங்கையிலிருந்து 2015 செப்ரெம்பர் மாதம் முதல் மாலைதீவு ஆடுகளை இறக்குமதி செய்ய ஆரம்பித்திருந்ததுடன், தற்போது பன்னல பிரதேசத்தில் வளர்க்கப்பட்ட ஆடுகள் இவ்வாறு ஏற்றுமதிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மாலைதீவைச் சேர்ந்த பாற்பண்ணையாளர்கள் மத்தியில் ஆடுகள் வளர்ப்பு குறித்த பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும், ஆடு வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையிலும் இந்த ஆடுகள் மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன எனக் கூறப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



### டட்டூ மூலம் கைபேசியை கட்டுப்படுத்தும் வசதி

அறிவியல் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பின்படி மெட்டாலிக் பச்சை குத்துதல் (டட்டூ) மூலமாக கணினி மற்றும் தொடுதிரைக் கைபேசிகளை கட்டுப்படுத்த முடியும் என்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம் தெரிவித்துள்ள தகவலின் படி இந்த மெட்டாலிக் டட்டூக் உடலில் நாம் நேரடியாகவே குத்திக்கொள்ளலாம் என அறிவித்துள்ளது. இதற்கு டியோ ஸ்கின் என்று பெயரிடப்பட்டுள்ளது.

புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த டட்டுவை நாம் நேரடியாகவே நம் தோலில் பயன்படுத்த முடியுமாம். இதன் மூலம் எந்தவித வயர் தொடர்புகளும் இல்லாமல் நம்மால் கணினி மற்றும் தொடுதிரைக் கைபேசிகளைக் கட்டுப்படுத்த முடியும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.



### சூரிய சக்தியில் தொழிற்படும் மின்கலம்

மக்களது மின் கட்டணத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தும் விதத்தில், முழுமையாக சூரிய சக்தியை சாதகமாகப் பயன்படுத்திச் செயற்படக்கூடிய புதிய வகை மின்கலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய மின்கலத்தை டெஸ்லா மோட்டார்ஸ் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

மிகவும் எளிய முறையில் பயன்படுத்த முடியுமான விதத்தில் தயர்ரிக்கப்பட்டுள்ள இந்த மின்கலத்தை முதலில் வீட்டின் சுவர்களில் பொருத்திக் கொள்ள வேண்டும். இந்த மின்கலத்தால் உயர் மற்றும் குறைந்த வெப்பநிலையைப் பொறுத்துக்கொள்ள முடியும். இதன் பாவனையின்போது பருவமாற்றத்தால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் அமைப்பு முழுமையும் இணைய இணைப்பில் ஒரு கண்காணிப்புக்கருவி வழியே கண்காணிக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. இந்த நவீன மின்கலம் பலவித வண்ணங்களிலும் கிடைக்கின்றது. அவற்றை நாம் பயன்படுத்தும் இடத்துக்கு ஏற்ப தெரிவு செய்யலாம்.

## கொக்கிளாயில்...

அடிக்கும் வகையில் செயற்படுவது பௌத்த தர்மம் அல்ல. இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொக்கிளாய் பகுதியில் பௌத்த விகாரை அமைப்பதற்கு எதிர்ப்பு வெளியிடப்படுவது குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் கொக்கிளாய் பிரதேசத்துக்கு நான்தான் சென்றேன். தமது அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளக் கொக்கிளாய் மக்கள் இன்றும் என்னைத் தேடி வருகின்றனர். நான் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை அங்கு சென்று வருவேன். கொக்கிளாய் மற்றும் நாயாறுப் பகுதிகள் புலிகளால் நாசமாக்கப்பட்டன. சிங்களத் தலைவர் எவரும் அந்த இடத்துக்குச் சரியாகப் போகவில்லை.

அங்கு வீதி அமைக்க, தண்ணீர் பெற்றுக்கொடுக்க, அவர்களது செயற்பாடுகளை முன்னெடுக்க நான்தான் யோசனை முன்வைத்துச் செயற்பட்டேன். அங்கு பெரிய அச்சுறுத்தல் உள்ளது. எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அங்கும் இருக்கின்றனர். இங்கும் இருக்கின்றனர். அவர்கள் கூறுவது சட்டமாகாது. தமிழ்க் கிராமம் எது என்பதை அவர்களால் தீர்மானிக்க முடியாது.

சிங்கள மக்கள் கடந்த காலங்களில் அங்கே வாழ்ந்தார்கள். அவர்களுக்கு வழிபாட்டுத் தலம் அவசியமெனில் அமைக்கலாம். வழிபாட்டுத் தலம் தேவை என்பதை வேறு எவரும் தீர்மானிக்க முடியாதே–என்றார்.

இதேவேளை, அரசிமலை எனும் இடத்தில் பௌத்த விகாரை தொடர்பான பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு, சிங்கள, பௌத்த மக்கள் அங்கு இருக்கின்றனரா அல்லது இராணுவத்தால் அமைக்கப்பட்ட வழிபாட்டுத் தலமா என்று அமைச்சர் விளக்கம் கேட்டார். அது கடற்படையால் அமைக்கப்பட்ட விகாரை என குறித்த ஊடகவியலாளர் பதிலளித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

அதுதான் அங்குள்ள பிரச்சினை. நானும் வடக்குக்குச் சென்றேன். கடந்த அரசின் காலத்தில் சுமார் 20 தடவைகள் சென்றேன். அங்கு பார்த்த விடயம்தான். பார்க்கும் இடங்களெல்லாம் சந்திக்குச் சந்தி அரச மரம் வைத்து, புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. ஆனால், வழிபடுவதற்கு மக்கள் இல்லை. இவற்றைப் பார்க்கவேண்டாமா?

அந்த மக்களின் முகத்தில் அடிப்பதுபோல செய்வது பௌத்த தர்மம் இல்லையே. பௌத்த தர்மத்தில் புத்தர் ஒருபோதும் இவ்வாறு குறிப்பிடவில்லையே. இன்னொருவரின் இன, மத விடயங்களுக்குச் சவால் விடுக்கும் வகையில் பயன்படுத்துமாறு எங்கும் குறிப்பிடப்படவில்லை – என்றார். (த–5)

## மணமக்கள்...

நட்புறவை ஏற்படுத்திப் புதுப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கிறேன். இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி – பருத்தித்துறை வீதிக்கான புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்த பின்னர், உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த தேர்தலில் மாற்றத்துக்காக வாக்களித்த வடக்கின் அனைத்து மக்களுக்கும் நான் முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த பல வருடங்களாக வடக்கு மக்கள் பல துன்பங்களை அனுபவித்தார்கள். தேர்தலின் போது மக்கள் கொடுத்த ஆணையின் பிரகாரம் வழங்கிய வாக்குறுதியைக் காப்பாற்றும் பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கின்றது. அதை மறக்காமல் எப்போதும் நினைவில் வைத்திருப்போம்.

நான் நெடுஞ்சாலைகள் அமைச்சராகப் பதவியேற்றவுடன் சேதமடைந்த வடக்கு வீதிகளைப் புனரமைப்பதற்குப் பன்னாட்டு உதவியை நாடியிருந்தேன். அதன் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கி எமக்கு உதவ முன்வந்தது. வடக்கு – கிழக்கு வீதிகளைச் சிறப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கு அவர்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள்.

வடக்கு – கிழக்கில் உள்ள ஆயிரத்து 500 கிலோமீற்றர் வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்படவுள்ளன. அதில் 700 கிலோ மீற்றர் வீதி யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இது வெறும் ஆரம்பம் மட்டுமே. இதை விட வடக்கில் அதிகமான அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வருவோம்.

அரசியல் தீர்வு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நிறைய விடயங்களைக் கூறி வருகின்றார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய அரசமைப்பை உருவாக்குகின்ற குழுவுக்குத் தலைவராக இருக்கின்றார். சபை முதல்வராக அந்தப் பணியில் நான் அவருக்குத் துணையாக இருக்கின்றேன். நான் அதிகாரப் பகிர்வு தொடர்பிலேயே அதிகம் பேசி வருகின்றேன்.

தற்போது உள்ள அரசியல் அமைப்புக் குழுக்களின் நடவடிக்கைகளைப் பார்க்கின்றபோது இலங்கை நாட்டில் வாழுகின்ற அனைத்து இன மக்களும் ஏற்கக்கூடிய ஒரு தீர்வைக் காண்போம் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. ஒரு பௌத்தனாக கௌதம புத்தர் நடுநிலைமை பாதை குறித்தே பேசியிருக்கின்றார். இலங்கையில் வாழுகின்ற அனைத்து மக்களுக்கும் அத்தகைய நடுநிலைமையான பார்வைக்கு வந்தால் தீர்வைக் காணுவதில் எந்தச் சிக்கலும் இருக்காது.

1815 ஆம் ஆண்டு வரை இருந்த கண்டிய இராசதானி பற்றி எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் பேசியிருந்தார். அப்படியாக இருந்த கண்டிய அரசர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தே தமக்குரிய மணமக்களைத் தெரிவு செய்திருந்தார்கள். காலனித்துவ ஆட்சியாளர்கள் ஆக்கிரமித்த பின்னர் அப்படியான தொடர்புகள் அற்றுப் போய்விட்டன. ஆகையினாலேயே திரும்பவும் வடக்கு – கிழக்கு – தெற்கு இடையே நட்புறவை ஏற்படுத்திப் புதுப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கிறேன் – என்றார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த–5–109)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை நாகேந்திரன்

(ஓய்வுபெற்ற கட்டடப் பொறியியலாளர்)

மலர்வு 05.03.1937 — உதிர்வு 11.08.2016

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நாகேந்திரன் 11.08.2016 வியாழக் கிழமை ஆஸ்தி ரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் மடத்தைச் சேர்ந்த செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சாயுடை மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கந்தப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், சயனொளிபவன், ரவீந்திரன், காலஞ்சென்ற பத்மலோசனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வைத்திய கலாநிதி திருமதி சின்னப்பிள்ளை - நாகேந்திரன் (ஓய்வுபெற்ற பொது வைத்திய நிபுணர் யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், உமா மாதவன், சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும், குகதாஸ் கபிதா பிரிய தர்சனி, ஹரேத்திரா ஆகியோரின் அன்பு மாமனும், சேயோன், பிரதிமியா, சௌமியா, ஹரேஸ், ஹரிசா, ஆரூரன், ஆரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.08.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணி தொடக்கம் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18 1/4, கொலிவூட் பிளேஸ்,
கொழும்பு - 06

தகவல்:
**நா.மாதவன்**

**077 918 4002** (இ.3840) (13.18)

## திருமதி பரமேஸ்வரி பத்மநாதன்



காரைநகர் இராசாந் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், விளானை, களபூமி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பத்மநாதன் 15.08.2016 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மநாதனின் (பரமசாமி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற உருத்திரசிங்கம், சற்குணராஜா (லண்டன்), காலஞ்சென்றவர்களான பத்மலோஜினி, புஸ்பராணி மற்றும் செல்வராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், கனகசபை, சரஸ்வதி மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சித்திரா (லண்டன்), பத்மசீலன், சிவனேஸ்வரன் (சிவா - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கம்சா, தர்சன், மனோரூபன், சர்மிராஜ், பகீரதன், ராகுலன், விதுசன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கந்தசாமி, ஆறுமுகம் மற்றும் மகேஸ்வரி, இரத்தினபூபதி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9 மணியளவில் களபூமி தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளானை,
[illegible]

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 853 1721** (J 3821) (11,17,18)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூமணி சின்னத்தம்பி



நவக்கிரி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சின்னத்தம்பி நேற்று (17.08.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற மயில்வாகனம் தம் பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், சிவானந்தம், கௌரி, சிவகணேசன் ஆகியோரின் அன்புத் தாயும் கலாமதியின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பூபாலசுந்தரம் மற்றும் பவளம், மகேஸ்வரி, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபர்ணா, பிரபாஜினி, யாதவன், கலைமதி, தனுசன், வினோஜன்; கோபிதா, மயூரன், காலஞ்சென்ற ராஜ்கிரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிரிஸின் அன்புப் பூட்டியும் சாந்தினி, ஜெயக்குமார், ராகினி, சசிகலா, ராகினி, ரமணி.சுகந்தி, ஞானசேகரம் (காந்தி), ஞானமலர் ஆகியோரின் சிறியதாயும், பெரியதாயும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், மதியாபரணம், புவ னேந்திரம் மற்றும் தலேசினியா, பத்மநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
சிவானந்தம் - 076 566 0983
கௌரி - 077 255 7664
சிவகணேசன் - 0031 687 191 361
(இ.3837) (13.18)

## திருமதி உதயகுமாரி உதயகுமார்



டச்சு வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உதயகுமாரி உதயகுமார் 14.08.2016 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் புவனேந்திரன் (சாமியண்ணை) - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் ராமசாமி - மல்லிகாதேவி தம்பதியரின் பாசமிகு மருமகளும் உதயகுமாரின் பாசமிகு மனைவியும் பிரிஷா, பிரஜித் ஆகியோரின் அன்புத்தாயும் உதயகுமார் (கனடா), தயாழினி (ஆசிரியர் - யா/உடுவில் மான்ஸ் ம.வி), தர்ஷிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் கல்யாணி, நவதாசன் (பிரதேச செயலகம் - காரைநகர்), மயூந்தன் (பிரான்ஸ்), சிவகுமார் (அமெரிக்கா), தர்சினி (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சுதாகரன் (யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்), தனுசா ஆகியோரின் சகலியும் ஷஜீவன், அக்ஷனா, மபிஷன் ஆகியோரின் பெரியதாயும் சங்கவியின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, உடுவில்

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


## கண்ணீர் அஞ்சலி



யாழ் போதனாவைத்திய சாலை அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய செல்வி **அமிர்தினி கனகரட்ணம்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், மற்றும்
அலுவலக உத்தியோகத்தர்கள்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **மகேஸ்வரி கோபால்**

தோற்றம்
14.06.1940

மறைவு
19.07.2016



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
பாசத்தின் பிறப்பிடமே! அன்பையும்
அரவணைப்பையும் தந்தவரே!
எங்களைத் தவிக்க விட்டு
அமைதியாய்ச் சென்றீரே
உங்கள் ஆத்மா
சிவனடி சேர பிரார்த்திக்கின்றோம்.

**கடந்த 19.07.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம் மகேஸ்வரி கோபால் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

குடும்பத்தினர்
கணவர் - கோபால், மகன் - கிருபராக்
மருமகள் - கலாநிதி,
மகள் - கிஸ்டா.

தேவாலய வீதி,
மல்லாகம்.

(13843)(13.15)


## சு.க. மாநாட்டுக்கு மகிந்தவுக்கு அழைப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கான உத்தியோகபூர்வ அழைப்பிதழ் நேற்றிரவு அமைச்சர் செனவிரத்னவினால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் வழங்கப்பட்டது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி குருநாகலில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொள்ள எதிர்பார்ப்பதாக மகிந்த ராஜபக்ச, செனவிரத்னவிடம் இதன்போது தெரிவித்தார். (வ-4)

## அரசை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை வீதிக்கான அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு மருதங்கேணியில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நெடுங்காலமாக நீடித்துவந்த எமது தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படாதமையால் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் நாம் பங்குபற்றாமல் தவிர்த்து வந்தோம். ஆனால் தற்போதைய அரசின் காலத்தில் அரசியல் தீர்வு தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இடம்பெறுவதன் காரணமாக நாங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வருகின்றோம். எமது மக்களும் கடந்த காலங்களில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வந்தார்கள். அதன் காரணமாகவும் நாங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வருகின்றோம்.

அத்துடன் அபிவிருத்தி வேலைகள் நாட்டில் இடம்பெறும்போது வடக்குக்கும் கிழக்குக்கும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். வடக்கு – கிழக்கிலே வாழ்கின்ற மக்கள் ஏனைய பிரதேசங்களுக்கு நிகரான அபிவிருத்தியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் – என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

புதிய அரசு அமைக்கப்பட்டிருக்கிறது. எமது மக்களுக்குப் பல தேவைகள் இருக்கின்றன. பலத்த எதிர்பார்ப்போடு நாங்கள் ஓர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றோம். நாங்கள் எதிர்பார்த்தவை நடந்தேறவில்லையே, அதற்கான ஆரம்பம் நிகழவில்லையே என்ற ஆதங்கம் எமது மக்களிடம் ஏற்படுகின்றது. ஆனாலும் பகுதி பகுதியாக மிகக் குறைந்த வேகத்தில் சில கருமங்கள் நடந்தேறுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த வீதியை விட பல வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டியிருக்கின்றது. பல பிரதேசங்கள் இராணுவத்தால் விடுவிக்கப்பட வேண்டியிருக்கின்றது. மக்களுக்கு வீடுகள் தேவையாக இருக்கின்றன. வாழ்வாதார உதவிகள் தேவையாக இருக்கின்றன. எமது அடிப்படையான பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு தேவையாக இருக்கின்றது. இவை அனைத்தும் இந்த அரசின் காலத்திலேயே நடந்தேற வேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வை புதிய அரசின் ஊடாக அடைய வேண்டியது அவசியமாகின்றது. இதுவரை காலமும் எமது நாட்டில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டங்கள் தமிழ் மக்களின் பங்களிப்பு இல்லாமலே உருவாக்கப்பட்டன. இப்போது உருவாக்கப்பட்ட அரசு எமது முழுப்பங்களிப்புடன் மட்டுமல்லாது இன்றைய எமது மக்களுடைய முழுமையான அரசியல் அபிலாசைகளுக்கும் பதில் கொடுக்கின்ற வகையிலான அரசமைப்பை உருவாக்கவேண்டும். இந்த எதிர்பார்ப்போடு நாமும் இணைந்திருக்கிறோம் – என்றார். (த-5-109)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை இரத்தின சபாபதி



பொற்பதி வீதி, கொக்குவிலை பிறப்பிடமாகவும், கோட்டைக்காடு மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இரத்தினசபாபதி நேற்று (17.08.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.08.2016) வியாழக்கிழமை மு.ப. 10மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

மல்லாகம்,
0768614067

தகவல்
குடும்பத்தினர்.



## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் கல்யாண மண்டப திருத்த வேலைக்கான கேள்வி கோரல்

**நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் கல்யாண மண்டப திருத்த வேலைக்கான கேள்வி இத்தால் கோரப்படுகின்றது.**

* கோயில் கல்யாண மண்டப திருத்த வேலைக்கான கேள்வி கோரல் படிவங்களை கோயில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
* பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை ஆலய காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.
அல்லது "செயலாளர்" ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் நயினாதீவு எனும் தபால் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.
* கேள்விப்பத்திரம் சமர்பிக்க வேண்டிய முடிவு திகதி **31.08.2016** அன்று மாலை **5.00** மணி ஆகும்.
* தபால் மூலம் அனுப்பி வைப்பதாயின் கடித உறையின் இடதுபக்க மூலையில் கேள்வி கோரல் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

அன்னையின் சேவையில்,
பொ.அன்பரசன்,
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு.



## மரண அறிவித்தல்

### செல்வி அமிர்தினி கனகரட்ணம்

(அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை)

பிறப்பு
06 . 01 . 1982



இறப்பு
17 . 08 . 2016

கயந்தப்பை வித்தகபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அமிர்தினி கனகரட்ணம் நேற்று (17.08.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகரட்ணம்-புட்கலாதேவி தம்பதிகளின் பாசமிகு மகளும் லோகினி (கனடா), அஜந்தினி (ஆசிரியர் பளைமத்திய கல்லூரி), நிஷாந்தினி (தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை), பிரியந்தினி (ஜேர்மனி), கோகுலன்(4ஆம் வருட பொறியியல் பீட மாணவன் - மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சக்திநேசன், யதீஸ்குமார் (முகாமைத்துவ உதவியாளர் மாகாண கல்வித் திணைக்களம், மருதனார்மடம்), மோகனதாஸ், விஜயதனுஷன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பூஜா, யதுநாத், அனுநாத், கர்ஷினி, அட்சயன், அதிசன், ஆருஷன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் கீரிமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கயந்தப்பை வித்தகபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்: குடும்பத்தினர்.
077 9502965


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 600 ஏக்கர்...

படைத் தலைமையகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இதன்போது அடுத்த ஆண்டுநடுப்பகுதிக்குள் காணியை விடுவிப்பதற்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் செயலர், விரை வில் 700 ஏக்கர் காணி வரை விடுவிக்கப்படும் என்று கூறியிருந்தார்.

இதற்கு அமைவாக முதல் கட்டமாக விடுவிக்கப்படவுள்ள காணிகளே நேற்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினரால் நேரில் பார்வையிடப் பட்டுள்ளன. பலாலி படைத் தலைமையகத்தில் மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

கலந்துரையாடலைத் தொடர்ந்து விடுவிக்க அடையாளப்படுத்தப்பட்ட காணிகள் நேரில் சென்று காண்பிக்கப்பட்டன.

சாந்தைச் சந்தியிலிருந்து தையிட்டி ஊடாக ஊறணிச் சந்தி வரையான வீதியின் மேற்குப் பக்கம் முழுமையாக விடுவிக்கப்படுகின்றது. வீதியின் கிழக்குப் பக்கம் வீதிக் கரையுடன் இருக்கின்ற பிரதேசம் மாத்திரம் முதல் கட்டமாக விடுவிக்கப்படவுள்ளது. விடுவிக்கப்படும் பகுதிகளில் பாதுகாப்பு வேலிகளைப் பின்நகர்த்தும் செயற்பாடு இடம்பெற்று வருவதாகவும், அடுத்த வாரம் இது முடிவுறும் என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் விடுவிக்கப்படும் பகுதிகளிலுள்ள சில முகாம்களை இடமாற்றம் செய்வதற்குரிய நிதி கிடைக்கப் பெறவில்லை என்றும், அவை விரைவில் கிடைக்கப் பெற்றதும் அந்த முகாம்களும் இடமாற்றம் செய்யப்படும் என்றும் பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர்.

காங்கேசன்துறை மத்தி, காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை கிழக்கு, தையிட்டி, தையிட்டி கிழக்கு, பளை வீமன்காமத்தின் எஞ்சிய பகுதிகளே அடுத்த வாரம் விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-10)


## மரண அறிவித்தல்

### திருமதி உரோகினி குருசாமி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உரோகினி குருசாமி நேற்று (17.08.2016) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குருசாமியின்( எழுதுவினைஞர்) அன்பு மனைவியும் விமலன் (அதிபர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ரஜனி, மோகன்(ஜேர்மனி), முகுந்தன் (விளையாட் டுத்துறை பயிற்றுநர்-மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்),ராகவன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயபாரதி(ஆசிரியர்- ஆனைப்பந்தி மெ.மி.த.க.பாடசாலை), மங்களேஸ்வரன்(பிள்ளையார் களஞ்சியம்-கும்பளாவளை), தயாளசுந்தரி(ஜேர்மனி), யசோதராதேவி(ஆசிரியர்-யா/ நாகர்கோயில் மகா வித்தியாலயம்), லதாங்கி, இராஜஇராஜேஸ்வரி (உளவளத் துணையாளர்-பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌதமி, அருண்பிரகாஷ், சாருஜன், ஆர்த்திகா, அனுசன், அனித்தா, சந்தோஷ், வைஷ்ணவி, பிரணவி, பிரவீணா, பிரபஞ்சன், பிரியங்கன், அபிப்பிரியன், அக்ஷாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2016) வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கும்பளாவளை
பிள்ளையார் கோயிலடி,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9058543
077 6793797

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகாமிப்பிள்ளை சரவணமுத்து



கோப்பாய் V.C லேனைப் பிறப்பிடமாகவும், எழுதுமட்டுவாழ் வடக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை சரவணமுத்து 15.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சந்திரசேகரர்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சரவணமுத்துவின் அன்பு மனைவியும் கிருபாகரன் (கிருபா) அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- செல்வரத்தினம், விசாலாட்சி, குமாரசாமி-மங்கையற்கரசி மற்றும் அன்னலட்சுமி- தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவலோகம்- விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற இராசரத்தினம்- சிவஞானசுந்தரி, குமாரசாமி மற்றும் அருந்தவநாயகி, தெய்வானைப்பிள்ளை, சுந்தரலிங்கம்,சிவபாக்கியம்-யோகரத்தினம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஸ்ரீதரன் (அமெரிக்கா), சத்தியபாமா (லண்டன்), சங்கரகுமார்(லண்டன்), துஸ்யந்தன்(பிரான்ஸ்), துஸ்யந்தி (லண்டன்), சாயினி((சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு அத்தையும் துளசிதரன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற அருள்மோகன் மற்றும் சங்கீதா ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் தயாபரன், கலாவதி, கலைச் செல்வி(கொழும்பு), திருச்செல்வி, தவச்செல்வி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை உரும்பிராயில் உள்ள இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சரவணமுத்து
(கணவர்)

நிரந்தர முகவரி:
விழுவளை ,
எழுதுமட்டுவாழ் வடக்கு,
எழுதுமட்டுவாழ்.

தற்காலிக முகவரி:
“சிவபதி” கோப்பாய் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

077 731 0293

## மரண அறிவித்தல்

# திருமதி நாகேஸ்வரி பாலசிங்கம்



பழைய பொலிஸ் நிலைய வீதி, பழம் றோட் ,ஆனைக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி பாலசிங்கம் நேற்று (17.08.2016) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதன்-பூமணி தம்பதிகளின் அன்பு மகளும் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் நவநீதா (பிரான்ஸ்), கிருபாகரன்(கனடா), சுசீதா(ஆஸ்திரேலியா), சுபானுதா (ஆசிரியை-யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), கீதா(லண்டன்), ஜெசிந்தா(ஆசிரியை யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகிந்தராசா(லண்டன்), விஜிதா(கனடா), பிரபாகரன்(ஆஸ்திரேலியா), தவநாயகம்(அதிபர் யா/ சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலை), ராஜநந்தகுமார்(லண்டன்), மனோகர் (விரிவுரையாளர்,யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மயுரேஸ்,மதுசன், கிசோர்,ஜஸ்மினா, கிஷாந், நிகே தன்,நித்திலன், அபிசேக், அஸ்மிதா, சஞ்சய், சஜிந்தவி, யுகாசன், ஜபிசன், ஜரோன்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகாலிங்கம், நடராசா, சின்னராசா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2016) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிறப்பு
12.12.1949

இறப்பு
17.08.2016

பழைய பொலிஸ் நிலைய வீதி,
பழம் றோட்,
ஆனைக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மீண்டும் வந்தார் ஸ்ரோக்ஸ் இங்கிலாந்து அணி அறிவிப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் விலகியிருந்த ஸ்ரோக்ஸ் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டார். இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில் குறித்த தொடருக்கான இங்கிலாந்து அணி கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு முன்பாகவே அறிவிக்கப்பட்டது.

இங்கிலாந்து அணி விவரம்: மோர்கன் (தலைவர்), மொயின் அலி, பரிஸ்ரௌவ், பட்லர், லியாம் டெவ்சன், கிறிஸ் ஜோர்டான், அலெக்ஸ் கேல்ஸ், லியாம் பிளொங்கெட், அடில் ரசிட், ஜோ ரூட், ஜேசன் ரோய், பென் ஸ்ரோக்ஸ், டேவிட் வில்லே, கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட். (ம)



## நவஜீவன்ஸ், யங்ஹென்றிஸ் பாரதியின் தொடரில் வென்றன

யாழ்ப்பாணம், ஓக. 18

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் முன்னேற்றம் கண்டன.

பாரதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலாவதில் சென். பீற்றர் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. 3ஆவது, 12 ஆவது நிமிடங்களில் முறையே கௌதமன், பிரியங்கன் ஆகியோர் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது நவஜீவன்ஸ். இரண்டாம் பாதியின் 40ஆவது நிமிடத்தில் பிரியங்கன் நவஜீவன்ஸின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணி மோதியது. ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்தில் இமையாணன் இளைஞர் அணி வீரர் நிதுசன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். சரிவிலிருந்து மீண்ட யங்ஹென்றிஸ் அடுத்தடுத்து கோல்மழை பொழிந்தது. ஜங்ஹென்றிஸின் மதுசன் 7ஆவது, 14 ஆவது நிமிடங்களிலும், யூட்சுமன் 11ஆவது, 17 ஆவது நிமிடங்களிலும் கோல்களைப் பதிவு செய்ய முதல்பாதியின் முடிவில் 4:0 என்று ஆதிக்கம் செலுத்தியது யங்ஹென்றிஸ். இரண்டாம் பாதியில் ரூபன் 39 ஆவது, 41 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்ய முடிவில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றது. (ம-422)




## ஆஸியை வெள்ளையடித்தது இலங்கை வரலாற்றுச் சாதனையாகவும் பதிவானது

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தையும் கைப்பற்றி 3:0 என்ற கணக்கில் வெள்ளையடித்தது இலங்கை. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இலங்கை அணி, ஆஸ்திரேலியாவுக்கு வெள்ளையடிப்பது இதுவே முதற் தடவை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 355 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக சந்திமல் 132 ஓட்டங்களையும், சில்வா 129 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பாக ஸ்ராக் 5 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும், ஹேஸலண்ட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 379 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக மிச்செல் மார்ஸ் 130 ஓட்டங்களையும், ஸ்ரீவ் சிமித் 119 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கையின் சார்பாக கேரத் 6 இலக்குகளையும், பெரேரா 2 இலக்குகளையும், சில்வா, லக்மல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை, சில்வாவின் சதத்தின் உதவியுடன் நான்காம் நாள் முடிவில் 312-8 என்றிருந்தது. தனஞ்சய சில்வா 44 ஓட்டங்களுடனும், லக்மல் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் இறுதி நாளுக்காகக் களமிறங்கினர். அரைச்சதம் கடந்தார் சில்வா. இலங்கை 347-8 என்ற நிலையில் இருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பாக லையன் 4 இலக்குகளையும், ஸ்ராக், ஹேஸலண்ட் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

324 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு ஆரம்ப இணை சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. வோர்ணர் அதிரடியாகவும் சோன் மார்ஸ் நிதானமாகவும் துடுப்பெடுத்தாடினர். இணைப்பாட்டமாக 77 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் மார்ஸை வீழ்த்தினார் டில்ருவான் பெரேரா. எட்டு ஓட்டங்களுடன் போல்ட் செய்யப்பட்டார் சிமித். 100 ஓட்டங்களில் ஆஸியின் இரண்டாவது இலக்குச் சரிக்கப்பட்டது. திடீர் எழுச்சி கண்டது கேரத்தின் சுழல். வோக்ஸ், மிச்செல் மார்ஸ், நெவில் ஒற்றையிலக்கத்துடன் கேரத்திடம் வீழ்ந்தனர். ஆஸியின் தோல்வி படிப்படியாக உறுதியானது. வோர்ணரை போல்ட் செய்தார் பெரேரா. ஆஸ்திரேலியாவின் பின்வரிசையும் எடுபடாமல் போக 160 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலியா.

பந்துவீச்சில் இலங்கையின் சார்பாக கேரத் 7 இலக்குகளையும், பெரேரா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாகவும், தொடராட்ட நாயகனாகவும் கேரத் தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆஸ்திரேலியாவுக்கு முதன் முறையாக வெள்ளையடித்தது இலங்கை. இலங்கையின் இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பு அதிகமாகியுள்ளது. (ம)




## வெற்றியுடன் ஆரம்பித்தது செல்சி

தனது அணியின் நட்சத்திர முன்கள வீரரான டியகோ கோஸ்டா பெற்ற கோலின் மூலம், நடப்பு வருட இங்கிலாந்து பிரீமியர் லீக்கை செல்சி வெற்றியுடன் ஆரம்பித்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், செல்சி, வெஸ்ட்ஹேம் யுனைற்ரெட் அணிகளுக்கு இடையில் இந்த மோதல் நடைபெற்றது. ஆட்டத்தின் 47ஆவது நிமிடத்தில் கிடைக்கப் பெற்ற பெனால்டியை நட்சத்திர வீரர் ஈடின் கோலாக்க, செல்சி முன்னிலை பெற்றது.

எனினும் 77ஆவது நிமிடத்தில் பதில் கோலைப் பதிவுசெய்து சமநிலைப்படுத்தியது யுனைற்ரெட். 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் நகர்ந்து சென்றது. ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் நட்சத்திர வீரர் கோஸ்டா பதிவுசெய்த கோலின் மூலம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது செல்சி. (ம)

## பாகிஸ்தான் அயர்லாந்து ஒருநாள் தொடர் இன்று

பாகிஸ்தான் - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

தொடரின் இரு ஆட்டங்களும் டப்ளின் நகரில் நடைபெறவுள்ளது. முதல் ஆட்டம் இன்றும், இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளன. இலங்கை நேரப்படி பிற்பகல் 3.15 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். (ம)

PCB
CRICKET IRELAND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டயமன்ஸ் அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 18
இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

யாழ். மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வதிரி டயமன்ஸ் அணியும் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. முதல் 20 நிமிடங்கள் வரை கோல் கணக்கு ஆரம்பிக்கப்படவில்லை. 21 ஆவது நிமிடத்தில் பிரேம்குமார் டயமன்ஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார்.

இரண்டாவது பாதியின் 35 ஆவது, 41ஆவது நிமிடங்களில் பிரேம்குமார் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய டயமன்ஸின் கோல் கணக்கு மூன்றாக அதிகரித்தது. 50 ஆவது, 59 ஆவது நிமிடங்களில் டயமன்ஸின் துசிகரன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்ய முடிவில் அந்த அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-108)

### இன்றைய மோதல்கள்

பூநகரி ஐயனார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இதன்படி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு சென். ஆன்ஸ் அணியை எதிர்த்து பூநகரி கலையொளி அணியும் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பூநகரி நண்பர்கள் அணியை எதிர்த்து பூநகரி அண்ணா அணியும் மோதவுள்ளன. (ம-23)




## முட்டாள்த்தனமான அட்டவணை உசைன் போல்ட் கடும் சீற்றம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் பிரிவு 100 மீற்றர் அட்டவணை முட்டாள்த்தனமான தயார்படுத்தல் எனச் சாடியுள்ளார் உலகச் சம்பியனான உசைன் போல்ட்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஜமைக்காவின் உசைன் போல்ட் 9.81 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார். இந்தப் போட்டிக்கான அட்டவணை வீரர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதாவது அரையிறுதிக்கும், இறுதிப் போட்டிக்கும் இடையே வெறும் ஒரு மணித்தியாலயம் மட்டுமே இடைவெளி இருந்தது. இந்த நிலையிலேயே போல்ட் தனது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்துள்ளார்.

யார் இந்த அட்டவணையை முடிவு செய்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு போட்டியில் ஓடி முடித்துவிட்டு உடனடியாக அடுத்த போட்டிக்குத் தயார் ஆனதால் மீண்டும் அங்கே வேகமாக ஓட வழியில்லாமல் போனது. அரையிறுதியை முடித்துக் கொண்டு எமது ஓய்வறைக்குத் திரும்பி மீண்டும் போட்டிக்குத் திரும்பவே நேரம் சரியாக இருந்தது. இது உண்மையிலேயே முட்டாள்த்தனமான அட்டவணை என போல்ட் மேலும் தெரிவித்தார். (ம)

## கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் அரையிறுதிகள்

யாழ்ப்பாணம், ஓக. 18
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திவரும் 16 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் மற்றும் இறுதியாட்டம் என்பன எதிர்வரும் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.
20 ஆம் திகதி நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பிராந்திய அணியை எதிர்த்து தமபால பிராந்திய அணி மோதவுள்ளது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் அம்பலாங்கொட பிராந்திய அணியை எதிர்த்து நீர்கொழும்பு பிராந்திய அணி மோதவுள்ளது. மேற்படி அரையிறுதியாட்டங்களில் வெற்றிபெறும் அணி 21ஆம் திகதி நடைபெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளது. (ம-23)

## வொலிகிங்ஸின் கரப்பந்தாட்ட இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 18
கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 5வது ஆண்டு நிறைவையொட்டி இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.
வொலிகிங்ஸின் மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதவுள்ளது. தொடர்ந்து நடைபெறவுள்ள 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது.
நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-23-422)



## முதலமைச்சர் செயலகம் கால்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 18
பலத்த இழுபறிக்கு மத்தியில் சுகாதார அமைச்சு அணியை வீழ்த்தி முதலமைச்சர் கிண்ணத்தைக் கைப்பற்றியது முதலமைச்சர் செயலக அணி.
முதலமைச்சர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம், அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் அண்மையில் இடம்பெற்றது. முதலமைச்சர் செயலக அணியை எதிர்த்து சுகாதார அமைச்சு அணி பலப்பரீட்சை செய்தது. முதல் பாதியில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யாத நிலையில் ஆட்டம் சமநிலை கண்டது.
கோலெதுவும் இல்லாமலேயே இரண்டாம் பாதி நகர்ந்துகொண்டிருந்தது. ஆட்டம் நிறைவடைய நான்கு நிமிடங்கள் இருக்கும்போது சுகாதார அமைச்சின் சார்பாக முதல் கோல் பதிவானது. ஆனால் அடுத்த இரு நிமிடத்தில் பதிலடி கொடுத்தது முதலமைச்சர் செயலக அணி. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பும் சமநிலையில் சென்றுகொண்டிருக்க நீண்ட இழுபறிக்குப் பின்னர் 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது முதலமைச்சர் செயலக அணி. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FLC FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. J. (Trained in France - 2007)
DELF A1, A2, B1 Exam இல் 100 % சித்தியடையலாம்.
இதுவரை 1125 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
No. 40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03. 09. 16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம் 12.09.16 Monday 3.30 pm
அரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
B.A. 1st year (G.A.Q)-2016
* மேற்படி பல்கலைக்கழகத்தினால் முதலாம் ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* A/L 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் பரீட்சை எடுத்து மூன்று பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள்.
* பதிவுகள் எமது நிறுவனத்தின் ஊடாக நடை பெறும் .
* விண்ணப்ப முடிவு திகதி 25/08/2016
* புதிய ஆண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
நாவலர் பட்டப்படிப்புக்கல்லூரி ,
மருத்துவத்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.p- 0774696695 0752040061

# கடந்த மூன்று ஒலிம்பிக் தொடரில் அமெரிக்கா தங்கம் பெறாத நாள்



கடந்த மூன்று ஒலிம்பிக் தொடர்களில் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு போட்டியில் தங்கம் வென்று வந்த அமெரிக்கா நடப்பு வருட ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று முன்தினம் தங்கப் பதக்கத்தைப் பெறத் தவறியது. 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பீஜிங் ஒலிம்பிக் தொடர், 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் தொடர் நடப்பு வருட ரியோ ஒலிம்பிக் தொடர் ஆகியவற்றில் நேற்று முன்தினம் வரையிலான நாள் வரை அமெரிக்கா ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு தங்கப் பதக்கத்தையேனும் குறைந்தபட்சம் கைப் பற்றி வந்தது. ஆனால் ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்றுமுன்தினம் அந்த நாடு எந்தவொரு தங்கப் பதக்கத்தையும் பெறவில்லை. ரியோ ஒலிம்பிக் தொடரில் பல சாதனைகளைப் படைத்து வரும் அமெரிக்கா, இவ்வாறான ஒரு மோசமான சாதனையையும் பதிவுசெய்துள்ளது. (ம-ரி4)

யாழ் நகரில் முதன் முறையாக
நல்லூர் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
K.T. பிரசாத் வழங்கும் மாபெரும் தென் இந்திய கலைஞர்களின் இன்னிசை நிகழ்ச்சி



சத்தியபிரகாஷ்
பிரபல திரைப்பட பின்னணி பாடகரும், விஜய் TV சுப்பர் சிங்கர் பாடகரும்



அனுசியா
விஜய் TV சுப்பர் சிங்கர் பாடகி (VSSJ4)



மிமிக்கிரி மூர்த்தி
விஜய் TV நகைச்சுவை கலைஞர்

காலம்: இம்மாதம் 29,30 (7.00 மணிக்கு)
31-(மதியம் 2.00 மணிக்கு)
இடம்: நல்லூர் கோயில் பின் வீதி, திறந்த வெளியரங்கு
நன்கொடை நுழைவுச்சீட்டுக்கள்: 300/-, 500/-, VIP
ஏற்பாட்டுக்குழு
Ceylon Art Creation.
077 5504910

# குரோற்ரியாவுக்குத் தங்கம் தட்டெறிதலில் கிடைத்தது

பணியாளர் தேவை
பிரபல்யமான உல்லாசப்பயணிகள் விடுதி ஒன்றிற்கு 1.தோட்டவேலை
2.உணவு பரிமாறுநர் (Waiter)
3.கார்ச் சாரதி
4.காவலாளி
ஆகிய பணியாளர்கள் தேவையாக உள்ளனர். இன்று 18-08-2016 காலை 8.30 மணியிலிருந்து 10 மணிவரை நேரில் சந்திக்கவும்.
தொடர்பு. 0776016310,0777290220 0772431310
76/60 இராமநாதன் வீதி, (கம்பன் வீதி) யாழ்ப்பாணம்.

ஒலிம்பிக்கில் நேற்று நடைபெற்ற தட்டெறிதலில் குரோற்ரியாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

குரோற்றியாவின் சார்பாகக் களமிறங்கிய பெர்கோவிக் என்ற வீராங்கனை 69 மீற்றர், 21 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். பிரான்ஸின் மெலினா 66 மீற்றர், 73 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், கியூபாவின் டெனியா 65 மீற்றர், 34 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

Nalin Information Technologies (PVT) LTD
இரண்டு வருட உத்தரவாதம்
உங்கள் வீடுகள், நிறுவனங்கள், மற்றும் வணக்கஸ்தலங்களில் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்புக் கமெராக்களை இன்றே பொருத்திடுங்கள்....

4 CH CCTV PACKAGE cmos cam — 30,140/-
4 CH DVR AHD 1
CMOS 1000TVL CAMERA 4
HDD 500GB 1
BNC PINS 8
DC JACK 4
POWER PACK 12V ~ 5A 1
CAMERA STAND 4

4 CH CCTV PACKAGE — 33,740/-
4 CH DVR AHD 1
AHD 1.3MP CAMERA 4
HDD 500GB 1
BNC PINS 8
DC JACK 4
POWER PACK 12V ~ 5A 1
CAMERA STAND 4

4 CH CCTV PACKAGE — 32,540/-
4 CH DVR AHD 1
AHD 1.3MP CAMERA 960p 131 4
HDD 500GB 1
BNC PINS 8
DC JACK 4
POWER PACK 12V ~ 5A 1
CAMERA STAND 4

8 CH CCTV PACKAGE — 59,180/-
8 CH DVR AHD 1
AHD 1.3MP CAMERA 8
HDD 1TB 1
BNC PINS 16
DC JACK 8
POWER PACK 12V ~ 10A 1
CAMERA STAND 8

8 CH CCTV PACKAGE cmos cam — 49,980/-
8 CH DVR AHD 1
CMOS 1000TVL CAMERA 8
HDD 1TB 1
BNC PINS 16
DC JACK 8
POWER PACK 12V ~ 10A 1
CAMERA STAND 8

8 CH CCTV PACKAGE — 56,780/-
8 CH DVR AHD 1
AHD1.3MP CAMERA 960p131 8
HDD 1TB 1
BNC PINS 16
DC JACK 8
POWER PACK 12V ~ 10A 1
CAMERA STAND 8

4 CH CCTV PACKAGE — 40,340/-
4 CH DVR AHD 1
AHD 2.4MP CAMERA 4
HDD 1TB 1
BNC PINS 8
DC JACK 4
POWER PACK 12V ~ 5A 1
CAMERA STAND 4

8 CH CCTV PACKAGE — 73,480/-
8 CH DVR AHD 1
AHD 2.4MP CAMERA 8
HDD 2TB 1
BNC PINS 16
DC JACK 8
POWER PACK 12V ~ 10A 1
CAMERA STAND 8



வடபிராந்தியத்தில் எங்கும் இல்லா விலைக்கழிவு



16 CH CCTV PACKAGE — 112,660/-
16 CH DVR AHD 1
AHD 1.3MP CAMERA 16
HDD 2TB 1
BNC PINS 32
DC JACK 16
POWER PACK 12V ~ 20A 1
CAMERA STAND 16

16 CH CCTV PACKAGE — 132,960/-
16 CH DVR AHD 1
AHD 2.4MP CAMERA 16
HDD 2TB 1
BNC PINS 32
DC JACK 16
POWER PACK 12V ~ 20A 1
CAMERA STAND 16

அதிநவீன CCTV Camera, alarm system போன்றவற்றை வட பிராந்தியத்தில் மிக குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் எம்மால் நிறுவிக் கொடுக்கப்படும்.
குறிப்பு :- உங்கள் கணனிகளிலும், கைத்தொலைபேசிகளிலும் பார்வையிடும் வசதியும், ஒரு வருடத்திற்கான பராமரிப்பு சேவையும் இலவசமாக வழங்கப்படும்.
முந்துங்கள்
No. 195/4 Parameswara Junction, Palay Road. T.P : 021 222 1121/1166 Mob : 0777 667 975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.